Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
34°C 27°C

பக்கம் 28 | சுடர்: 28 | கதிர்: 173 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 4, சனி 18.05.2013



**என்ன தவறு செய்தோம் நாம்?**

முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் உறவுகளின் குருதி சுமந்த சிறுமி.

படம்: மதி

# தமிழர் தாயகத்தில் இன்று துயர் பகிர்வு

## முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவு கூர பெருமெடுப்பில் ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், மே 18

தமிழர் வாழ்வில் துயர்படிந்த முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நான்காம் ஆண்டு நினைவு நாள் தமிழர் தாயகம் மற்றும் அவர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகள் எங்கும் பெருமெடுப்பில் உணர்வெழுச்சியுடன் இன்று நினைவு கூரப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் என்பவற்றால் செய்யப்பட்டுள்ளன.

2009 மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் ஆகுதியான உறவுகளை நினைத்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழ் மக்களால் ஆண்டு தோறும் நடத்தப்படுகின்றன. இந்த நிகழ்வுகளுக்கு தடை ஏதும் இல்லை என்று இராணுவம் தெரிவித்துள்ளது. இந்தத் தினத்தில் புலிகளை நினைவுகூரக் கூடாது என்றும் அது அறிவுறுத்தி உள்ளது.

போரில் ஆகுதியான எமது உறவுகளுக்காக ஆலயங்களில் இன்றைய தினம் விசேட வழிபாடுகளை நடத்துமாறும், வீடுகளில் மாலை வேளையில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்துமாறும் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**பிரதான நிகழ்வு**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலின் பிரதான நிகழ்வு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் வவுனியாவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 24

# போர் வெற்றி விழா இன்று கொழும்பில்

யாழ்ப்பாணம், மே 18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் போர் வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகள் தலைநகர் கொழும்பில் காலி முகத்திடலில் இன்று சனிக்கிழமை பெரும் எடுப்பில் கொண்டாடப்படவுள்ளன.


தமிழ் மக்களால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நினைவுகள் அனுஷ்டிக்கப்படும் அதேவேளை இலங்கை அரசினாலும் முப்படையினராலும் கொழும்பில் போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடத்தப்படுகின்றன.

காலி முகத்திடலில் இடம் பெறவுள்ள வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுகளுக்கான ஒத்திகை கடந்த ஒருவார காலமாக இடம்பெற்றது.

இந்தக் கொண்டாட்டங்களுக்காகப் பல கோடி ரூபா செலவு அரசினால் செய்யப்பட்டுள்ளது.

போர் வெற்றிக்கொண்டாட்டத்தின் ஒத்திகை நிகழ்வுகளைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிட்டார்.

(மேலும் ஒரு செய்தி 11 ஆம் பக்கத்தில்) (த-5)





# முள்ளிவாய்க்காலில் சுடரேற்றி அஞ்சலி

வவுனியா, மே 18

இறுதிப்போர் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் ஆகுதியான உறவுகளுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பேரவலம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட இளைஞர் அணித் தலைவரும் வவுனியா நகர சபை உப தலைவருமான எம்.எம். ரதன் தலைமையில் அங்கு சென்றவர்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

முள்ளிவாய்க்கால் பிள்ளையார் கோயில், ஜோர்தான் கப்பல் தரித்துள்ள கடற்கரை, வெள்ள முள்ளிவாய்க்கால், கரையா முள்ளிவாய்க்கால் ஆகிய இடங்களில் சுடர்கள் ஏற்றப்பட்டு உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (த-4)



# சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வே வேண்டும்

## முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வில் இராசகுமாரன்



யாழ்ப்பாணம், மே 18

சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வே எமக்கு வேண்டும் என்று யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர்.இராசகுமாரன் தெரி

தொடர்ச்சி: பக்கம் 24

# 3 பாலகிகளை கிணற்றில் வீசிக் கொன்றார் தாய்

## தானும் தற்கொலைக்கு முயற்சி

## தாண்டிக்குளத்தில் அவலச் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 18

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்ட தாயொருவர் தனது மூன்று பெண் குழந்தைகளையும் கிணற்றில் வீசிக் கொன்ற பின்னர் தானும் தற்கொலைக்கு முயன்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த அவலச் சம்பவம் நேற்று முற்பகல் அவரது வீட்டில் இடம்பெற்றது.

தற்கொலைக்கு முயன்ற

தொடர்ச்சி: பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 மில்லியன் கண்ணிவெடிகள் போர் வலயங்களில் அகற்றல்

## படைத் தரப்பு அறிவிப்பு

கொழும்பு,மே 18

முன்னாள் போர் வலயங்களில் உள்ள, தற்போது மீள் குடியேற்றம் மற்றும் விவசாயத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படவேண்டிய நிலங்களில் புதைக்கப்பட்டிருந்த அனைத்துக் கண்ணிவெடிகளையும் அகற்றியுள்ளதாகப் படையினர் அறிவித்துள்ளனர்.

காலாட் படை எதிர்ப்பு நிலக் கண்ணிகள், கவச வாகன எதிர்ப்பு நிலக் கண்ணிகள் மற்றும் ஏனைய புதைக்கப்பட்டிருந்த வெடிபொருள்கள் உள்ளடங்கலாகக் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் வரையான நிலக் கண்ணிவெடிகள் தற்போது அகற்றப்பட்டுள்ளதாகப் படையினர் தெரிவித்தனர்.

''மக்களின் மீள்குடியேற்றத்துக்குப் பயன்படுத்தப்படும் பிரதேசங்கள் மற்றும் அவர்களின் விவசாய நடவடிக்கைகள் போன்ற ஏனைய வாழ்வாதாரத் திட்டங்களுக்காக பயன்படுத்தப்படும் நிலங்களில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளை நாம் எம்மால் முடிந்தளவு அகற்றியுள்ளோம். நிலக்கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்த 2064 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் 95 சதவீதத்துக்கும் அதிகமான பிரதேசங்களில் நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதுடன் அவை பாதுகாப்பான பிரதேசங்களாக மாற்றப்பட்டுள்ளன'' என இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காட்டுப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகள் மட்டுமே தற்போது அகற்றப்படாதுள்ளதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மே 2009 இல் புலிகளுடனான போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இராணுவத்தினர் சில உள்ளூர் மற்றும் அனைத்துலகத் தொண்டர் நிறுவனங்களுடன் இணைந்து போர் வலயங்களில் புதைக்கப்பட்டிருந்த நிலக் கண்ணி வெடிகளை அகற்றினர் என்று அதில் கூறப்பட்டுள்ளது. (த)

> "காட்டுப் பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகள் மட்டுமே தற்போது அகற்றப்படாதுள்ள தாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தற்கொலைத் தாக்குதல் மிகப்பெரும் சதி முயற்சி

## சரத் பொன்சேகா அதிரடி வாக்குமூலம்



கொழும்பு,மே 18

இராணுவத் தலைமையகத்தில் வைத்து தன் மீது நடத்தப்பட்ட படுகொலை முயற்சி ஒரு பெரியளவிலான சதி என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.55 மணி தொடக்கம் சுமார் நான்கு மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர். சரத் பொன்சேகாவின் அலுவலகத்துக்குச் சென்ற இரண்டு புலனாய்வு அதிகாரிகள் இந்த விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

சாதாரணமாக சில இள நிலையினர் அல்லது கையாள்களின் வேலையாக இது இருக்காது என்றும் இது அதைவிடப் பெரிய சதி என்றும் சரத் பொன்சேகா விசாரணையின் போது கூறியுள்ளார்.

சரத் பொன்சேகா மீது நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள போதிலும், தனக்கு ஆபத்தை விளைவிக்க விரும்பிய பல்வேறு தரப்புகளும் கூட இதனைச் செய்திருக்கலாம் என்றும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தத் தாக்குதல் நடந்து ஏழு ஆண்டுகள் கழித்து இது தொடர்பாகத் தன்னிடம் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2005 ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுக்க விரும்பிய சக்திகளும் கூட தனது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த முயன்றிருக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார். (த)

# அமைச்சர் விமல் வீரவன்ஸ முதலில் ஆங்கிலம் கற்கட்டும்

## பொதுபலசேனா பதிலடி

கொழும்பு,மே 18

நோர்வே தூதரகத்தின் அறிக்கைகளை வாசிப்பதற்கு முன்னர் அமைச்சர் விமல் வீரவன்ஸ ஆங்கில மொழியைக் கற்க வேண்டும் என்று, பொது பல சேனா பதிலடி கொடுத்துள்ளது.

பொது பல சேனாவுக்கு நோர்வே நிதியுதவி வழங்குவதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ கூறிய குற்றச்சாட்டுக் குறித்துப் பதிலளித்த பொது பல சேனாவின் பொதுச்செயலர் கலகொட அத்து ஞானசார தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

நோர்வே தூதரக அறிக்கையில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் விமல் வீரவன்ஸவும் அவரது ஆலோசகர்களும் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை.

இவர்களின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்து நேரத்தை வீணடிக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# குடும்பஸ்தர் கழுத்தறுத்து கொலை குற்றவாளிக்கு மரண தண்டனை

யாழ்ப்பாணம், மே 18

சரவணைச் சந்தியில் குடும்பஸ்தர் ஒருவரைக் கழுத்து அறுத்துத் தலை துண்டித்துக் கொலை செய்த குற்றவாளிக்கு மரண தண்டனையை உறுதிப்படுத்தித் தீர்ப்பளித்தது யாழ். மேல் நீதிமன்றம்.

யாழ்.மேல் நீதிமன்றில் ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

சரவணைச் சந்தியை அண்மித்து கள்ளுத் தவணை ஒன்றின் முன்பாக 2006ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி அதே இடத்தைச் சேர்ந்த சதாசிவம் தயாபரன் என்ற குடும்பஸ்தர் கழுத்தறுத்துத் தலை துண்டிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். சந்தேகத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் தர்மராசா என்பவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் பின்னர் தலை மறைவாகிவிட்டார்.

இந்த வழக்கு 2010 ஜூன் 8 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்பட்டது.

சந்தேக நபர் இல்லாத நிலையில் வழக்கு விசாரணை நடைபெற்றது. இரண்டாவது சந்தேக நபராகக் குறிப்பிடப்பட்ட பரராஜசிங்கம் கிருபாகரன், சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குத் தொடுநர் தரப்புச் சாட்சியாகச் சாட்சியமளிக்குமாறு கூறப்பட்டார்.

தலைமறைவாகியிருந்த சந்தேக நபர் அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மேல் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அங்கு சாட்சியமளித்த எதிரி, வழக்கிலிருந்து தப்பும் நோக்கிலேயே தலைமறைவாகியிருந்ததை ஒப்புக்கொண்டார்.

சந்தேக நபர் விசாரணையின் போது குற்றவாளியாகக் காணப்பட்டமையால் அவருக்கு 2012 மார்ச் 12ஆம் திகதி மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் அவர் தலைமறைவாகியிருந்தார்.

வழக்கு விசாரணை நடந்த போது எதிரி தலைமறைவாகிவிட்டதனால் வழக்குத் தொடுநர் தரப்புச் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் சந்தர்ப்பத்தை இழந்து விட்டார். வழக்குத் தொடுநர் தரப்புச் சாட்சியங்கள் எதிரிக்கு எதிரான கொலைக் குற்றத்தை நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபித்துள்ளன. எனவே தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 296 இன் கீழ் எதிரிக்கு மரண தண்டனை உறுதிப்படுத்தப்பட்டுத் தீர்ப்பளிக்கப் பட்டது. (த-4)

# இணுவில் இந்துவில் முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்,மே 18

இணுவில் இந்துக் கல்லூரியின் முத்தமிழ் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் தமிழ் மன்றப் பொறுப்பாசிரியர் தி.சசீதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்து கொள்வார். (ஒ-4)

# அச்சுறுத்தப்படும் கல்விசார் சமூகம்

## பல்கலை ஆசிரியர் சங்கம் கண்டனம்

> "இலங்கை பல்கலைக்கழக அமைப்பில் துரதிஷ்டவசமாக இம்மாதிரி சம்பவங்கள் சமீப காலமாக அதிகரித்து வருகின்றன.

கொழும்பு, மே 18

மாணவர்கள் அடங்கலாக கல்விசார் சமூகத்தினரை அச்சுறுத்துவது அல்லது ஆத்திரமூட்டும் சம்பவங்களை பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தின் சம்மேளனம் கடுமையாகக் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் ஜனகநிலங்க மதுஷன் அச்சுறுத்தப்பட்டிருப்பது தொடர்பாக சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில்–

இலங்கை பல்கலைக்கழக அமைப்பில் துரதிஷ்டவசமாக இம்மாதிரியான சம்பவங்கள் சமீபகாலமாக அதிகரித்து வருகின்றன. இவைகளைக் கட்டுப்படுத்தவும் முறையாக விசாரித்து நடவடிக்கை எடுக்கவும் அதிகாரிகள் முன்வருவது முக்கியமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று தேர்தல்களை நடத்துவதற்கு தயார்

## பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு


யாழ்ப்பாணம்,மே 18

வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்பதாக புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை நடத்தத் தேர்தல்கள் திணைக்களம் தயாராக உள்ளதாகப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம். எம். மொஹமட் தெரிவித்தார்.

கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைகளுக்கான தேர்தல், வேட்புமனுத்தாக்கல் என்பன நிறைவடைந்து தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்டது. ஆயினும் மீள்குடியேற்றம் அந்தப் பிரதேசத்தில் முழுமையாக இடம்பெறவில்லை என்று தெரிந்து உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் பிரகாரம் அது ஒத்திவைக்கப்பட்டது.


இந்த நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குரிய ஒழுங்குகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. எனவே இரு உள்ளூராட்சிச் சபைகளுக்குமான தேர்தல் நடத்தப்படாமல் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமா என்று ஊடகவியலாளர்களால் பிரதித் தேர்தல் ஆணையாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர், குறித்த இரு பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடத்துவதற்குரிய சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்ட நிலையிலேயே அது நிறுத்தப்பட்டது. இதனால் நீதிமன்றத் தீர்ப்பு தேர்தல் நடத்துவதற்குச் சாதகமாகக் கிடைத்தால் நாங்கள் தேர்தல் நடத்தத் தயாராக இருக்கின்றோம் –என்றார்.



இதேவேளை, 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு மாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களை, வாக்காளர்களாகப் பதிவு செய்யும் சட்டம் தொடர்பில் இன்னமும் தமக்குத் தகவல்கள் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார். (த-5)

# வெங்காயப் பயிரில் கடும் நோய் தாக்கம்



யாழ்ப்பாணம், மே 18

யாழ்.குடாநாட்டில் விவசாயிகளால் பயிரிடப்பட்ட சின்ன வெங்காயத்தில் கடும் நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளமையால் அது மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்வேலி, கோப்பாய், இராசா வீதி, ஊரெழு, புன்னாலைக் கட்டுவன், மாசிவன், புத்தூர், சிறுப்பிட்டி போன்ற பகுதிகளில் [illegible] பயிரிடப்பட்ட சின்ன வெங்காயம் ஒரு வித நோய்த் தொற்றுக்கு இலக்காகிப் பழுதடைந்துள்ளது.

விதை வெங்காயத்தில் ஏற்பட்டிருந்த நோய்த் தாக்கம் மற்றும் காலநிலை வேறுபாடு ஆகியனவே இதற்குக் காரணம் என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த வெங்காயப் பயிர்கள் நோய்த் தாக்கத்தினால் மஞ்சள் நிறத்தில் காணப்படுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்துவது குறித்து அறிவித்தல்கள் எதுவும் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com


## இறுதிப் போரின் அழியா நினைவு...

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், வன்னியில் முள்ளிவாய்க்காலில், இறுதிப் போரின்போது கொல்லப்பட்ட, ஆகுதியான, உயிர்நீத்த லட்சக்கணக்கான மக்களுக்கு அவர்களின் உறவுகள் இன்று அஞ்சலி செலுத்த உள்ளனர். அதற்கான ஏற்பாடுகள் தமி ழர் பிரதேசங்களில் மட்டுமன்றி, புலம்பெயர் நாடுகளில் வாழும் உறவுகளாலும் தமது இரத்தத்தின் இரத்தங்களுக்கு அஞ்சலி நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ் உறவுகள் அஞ்சலி நிகழ்வுகளை நடத்துவதற்கு எவ்வித தடைகளோ, தடைக்கல் களோ இருக்கப் போவதில்லை. அது எல்லோருக்கும் தெரிந்ததே; நாம் சொல்லித் தெரிய வேண்டியது அல்ல.

ஆனால், இங்கு தமிழர் பிரதேசங்களில் இறுதிப்போரின்போது காவு கொள்ளப்பட்ட தமது உறவுகளின் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்தனைகளிலும், அவை ஒத்த வேண்டுதல்களிலும் தமது மனம் திருப்தி கொள்ளும் வகையில் ஈடுபட முடியுமா? என்ற சந்தேகம் மிகப் பெரிய அளவில் நிலவியது.

இந்தச் சந்தேகத்தைப் போக்கும் வகையில், இறுதிப் போரில், முள்ளிவாய்க்காலில் ஆகுதியான மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு அவர்களின் உறவுகளுக்கு தடை இல்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. அரசின் சார்பில் இராணுவப் பேச்சாளர் றுவான் வணிகசூரியா இதனைத் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த தமது உறவுகளுக்கு, தமிழ் மக்களால் அவர்களை நினைந்து அஞ்சலி நிகழ்வு எதுவும் பெரிய அளவில் நடத்தப்படக்கூடாது என்பதில் அரச அதிகாரத்துவம் கடந்த ஆண்டு வரை, மிகச் சிவப்பேறிய கண்களால் மிகக் கூர்ந்து பார்த்தது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் கடந்த ஆண்டில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வினை மலினப் படுத்தும் வகையில், இராணுவப் புலனாய்வாளர்களும், சிவில் உடையில் பொலிஸாருமாக சூழ்ந்து ஆலய வழிபாட்டுக்கு இடை யூறு விளைவித்தமை ,சிவப்புக் கண்களால் நோக்கப்பட்டமைக்கு ஓர் உதாரணம்.

அதே நாளில், யாழ் . பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதும், அதற்குச் சில நாள்களுக்கு முன்னரே முள்ளிவாய்க்கால் நினைவு தினம் தொடர்பான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தமையும், அது தொடர்பான விசாரணைகள் கழுகுக் கண்களுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கவை.

அந்த வகையில் இறுதிப் போரில் தமது ஆருயிர்களைத் நீத்த -தியாகம் செய்த- தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தத் தடை எதுவும் இல்லை என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியதே. அறிவிப்பு அவ்வாறு இருந்தாலும் நடைமுறையில் அது எவ்வாறு மாறும் என்பது ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியதுமாகும்; ஊன்றிச் சிந்திக்கப்பட வேண்டியதுமே.எதுவானாலும், வடக்கின் சகல மாவட்டங்களிலும் முள்ளிவாய்க்காலில், அரச படைகளால் காவு கொள்ளப்பட்ட இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நினைவு நிகழ்வுகள் இன்று ஆங்காங்கே நடைபெறவுள்ளன.

தமிழ் மக்களுக்கான அரசியல் விடிவைக் காண்பதற்கு, அவர்களால் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று பரந்த அளவில் அந்தந்த மாவட்டங்களில் நடத்தும் அஞ்சலி-நினைவு-நிகழ்வுகளில் தமது உறவுகளை நினைந்துருகி தமிழ் மக்கள் அஞ்சலி செலுத்த உள்ளனர்; ஆத்ம சாந்திப் பிரார்த்தனை செய்ய உள்ளனர்.

தாய் தந்தையரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர், கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், குடும்பத்தில் ஒருவர் தவிர்ந்து ஏனையோர் கொத்துக் குண்டுகளுக்கு இரையானோர்-

அவற்றினால்-

பெற்றோரை இழந்த பிள்ளைகள், இளவயதில் சின்னஞ் சிறிசுகளுடன் ஏதிலிகளாகிவிட்ட இளவயதுப் பெண்கள் என்று பலவகைப் பட்டோர் தமது வாழ்க்கையை நடத்த இயல்பற்று அன்றாடம் துஞ்சுகிறார்கள்.

போரில் பல கிலோ மீற்றர்கள் தூரத்தே ஏவிவிடப்பட்ட பேராயுதங்களால் கொல்லப்பட்டவர்கள் அனைவருமே இந்த நாட்டு மக்கள். இந்த நாட்டுப் பிரசைகளில் ஒரு சாராரே, ஒரு பகுதியினரே கொல்லப் பட்டார்கள். நாட்டு மக்கள் எல்லோரினதும் பாதுகாவலன், அரசு என்று கூறும் தரப்பு மரித்த மக்கள் நினைவாக அஞ்சலி நிகழ்வுகளை செய்யக் கூடாதா?அது குறித்து சிந்திக்கவும் மனமின்றி இருப்பது ஏனோ?

போர் வெற்றி குறித்து ஒரு வார நிகழ்வுகளை நடத்தும் அதேவேளை, போரில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் மனிதத்துவம் அரசுக்கு இல்லாமல் போனது ஏனோ?

எது எப்படியோ, போரில் தமது உயிர்களை இழந்த எமது இரத்தத்தின் இரத்தங்கள் அனைவரும் இறைவனோடு ஒன்றித்துச் சாந்தி பெற வேண்டும் என அவர்களின் உறவுகளுடன் இணைந்து, உணர்வு பூர்வமாக மக்கள் சார்பில் நாமும் பிரார்த்திக்கின்றோம்.



# 2012 வாக்காளர் பட்டியல்படியே வடக்கு மாகாண சபைத் தேர்தல்

## பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 18

வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் பொழுது 2012ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரகாரமே தேர்தல் நடத்தப்படும் என்று பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

வாக்காளர் பதிவு தொடர்பில் ஊடகவியலாளர்களுடன் விசேட கலந்துரையாடலொன்று ஞானம்ஸ் விடுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போதே மேற்கண்டவாறு கூறப்பட்டது. இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மாகாணசபை சட்டங்களின் பிரகாரம் ஒரு மாகாணத்துக்கு முதன் முறையாக தேர்தல் நடைபெறும் பொழுது, தேர்தல் ஆணையாளரை தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி பணிக்க வேண்டும்.

வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி இன்னமும் அறிவிக்கவில்லை.

இவ்வாறு ஜனாதிபதி அறிவிக்கும் பட்சத்தில், அறிவித்தல் கிடைக்கப்பெற்றதிலிருந்து ஒருவார காலத்தில் வேட்பு மனு அறிவித்தல் விடப்படும்.

அதிலிருந்து இரண்டுதொடக்கம் மூன்று வாரங்கள் வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு அறிவிப்பு விடப்படும். அதன் பின்னர் மிக விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

வடமாகாண சபைத் தேர்தல் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் அடிப்படையிலேயே இடம்பெறும். 2012ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரகாரமே இந்தத் தேர்தல் இடம்பெறும்.

2012ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலின் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் 4 லட்சத்து 26 ஆயிரத்து 703 வாக்காளர்கள் உள்ள நிலையில் மாகாண சபைத் தேர்தலில் 16 ஆசனங்களுக்காக 19 பேரும்,

மன்னாரில் 70 ஆயிரத்து 85 வாக்காளர்கள் உள்ள நிலையில் 5 ஆசனங்களுக்காக 8 பேரும், வவுனியா மாவட்டத்தில் 96 ஆயிரத்து 707 வாக்காளர்கள் உள்ள நிலையில் 6 ஆசனங்களுக்காக 9 பேரும்,

முல்லைத்தீவில் 52 ஆயிரத்து 409 வாக்காளர்கள் உள்ள நிலையில் 5 ஆசனங்களுக்காக 8 பேரும், கிளிநொச்சியில் 68 ஆயிரத்து 589 வாக்காளர்கள் உள்ள நிலையில் 4 ஆசனங்களுக்காக 7 பேரும் போட்டியிட முடியும். அந்த வகையில் 2 போனஸ் ஆசனங்களுடன் மொத்தமாக 38 ஆசனங்கள் கொண்டதாக வடமாகாண சபை அமையும்.

வடமாகாண சபைத் தேர்தல் நிர்வாக மாவட்ட ரீதியாகவே இடம்பெறும்-என்றார். (ம-5)

> “மாகாணசபை சட்டங்களின் பிரகாரம் ஒரு மாகாணத்துக்கு முதன் முறை யாக தேர்தல் நடைபெறும் பொழுது, தேர்தல் ஆணையாளரை தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி பணிக்க வேண்டும்.

## வாக்காளர் பதிவு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 18

தற்போது இடம்பெற்றுவரும் 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கிராம அலுவலர்களுக்கு உரிய ஒத்துழைப்புக்களை வழங்குமாறு பொது மக்களை-வாக்காளர்களை, பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொகமட் கேட்டுக் கொண்டார்.

வாக்காளர் பதிவு தொடர்பில் நேற்றுக் காலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் முதன் முதலாக இந்த வருடம், ஜூன் மாதம் முதலாம் திகதியை வாக்காளர் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளோம்.

இதற்காக இந்த மாதம் 15 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையில் வாக்காளர் பதிவுக்குரிய (பி.சி) படிவங்கள் கிராம சேவையாளரால் விநியோகிக்கப்படும்.

கிராம சேவையாளர்கள் வீட்டுக்கு வரும் போது குடும்பத்துக்குப் பொறுப்பானவர்கள் வீட்டிலிருந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூரணப் படுத்திக் கொடுக்க வேண்டும்.

இயலுமானவரையில் இந்தக் காலப் பகுதியில் வீடுகளில் மக்கள் இருந்து இந்தப் பதிவுகளை மேற்கொள்ள உதவ வேண்டும். வாக்காளர் பதிவு விண்ணப்பங்கள் கிடைக்காதவர்கள் தமது பகுதி கிராமசேவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ்.மாநகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை, பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஜூன் 2 ஆம் திகதி மீளப் பெறப்படும். அன்றையதினம் பெற்றுக் கொள்ளத் தவறின் ஜூன் 5 ஆம் திகதி மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஏனைய பகுதிகளில் ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் மீளப்பெறப்படுதல் வேண்டும்.

இதன் பின்னர் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியலில் உள்ளதிலிருந்து நீக்கப்பட்டவர்கள், புதிதாக இணைக்கப்பட்டவர்களின் பெயர் விவரம் என்பன காட்சிப்படுத்தப்படும்.

இதன் பின்னர் மக்கள் உரிமைக் கோரிக்கை படிவத்தினூடாக மக்கள் தமது ஆட்சேபனையை தெரிவிக்க முடியும் என்றார். (ம-5)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம்,மே 18

வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவன நான்காவது அணியினரின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்து ஆரம்பப் பாட சாலையில் இடம்பெறவுள்ளது.

க.கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்வார். சான்றிதழ்களை திருமதி யசோதை சரவணபவன் வழங்கவுள்ளார். ஆக்கத்திறன் கண்காட்சி மாலை 4.30 மணிவரை இடம்பெறும் எனவும் விழா ஏற் பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-ரி)

## கைவிடப்பட்ட வாகனங்களின் விவரங்கள்

போர் நடவடிக்கைகளின் போது கைவிடப்பட்ட ஒரு தொகுதி வாகனங்களின் விவரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

வாகன உரிமையாளரை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களுடன் மாவட்ட செயலகத்துக்கு வருகை தருமாறு அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

வாகன இலக்கங்கள் குறித்த விவரம் நாளைய உதயனில் வெளியாகும். (ம)

## கதிர்காமத் திருவிழாவை முன்னிட்டு சந்நிதியில் இருந்து பாத யாத்திரை

வடமராட்சி, மே 18

கதிர்காமக் கந்தன் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து பாதயாத்திரை நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமானது.

காரைதீவு ஸ்ரீநந்தவன சித்திவிநாயகர் கோயில் தர்மகர்த்தாவான வேல்சாமி என அழைக்கப்படும் ச.மகேஸ்வரன் தலைமையிலான சுமார் 42 பக்தர்கள் கொண்ட குழுவினர் இப்பாத யாத்திரையை மேற்கொண்டுள்ளனர்.

இக்குழுவில் சுமார் 9 பெண்களும் இரண்டுசிறுவர்களும் அடங்குகின்றனர்

பாத யாத்திரையை மேற்கொண்டுள்ள குழுவினர் காரைதீவில் இருந்து தொண்டமானாறுசெல்வச் சந்நிதி வரும்போது கடந்த திங்களன்று காரைதீவு ஸ்ரீ நந்தவன சித்தி விநாயகர் கோயிலில் நடைபெற்ற விசேட பூசைவழிபாடுகளுடன் புறப்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செல்வச் சந்நிதியை வந்தடைந்த இந்தக் குழுவினர் வியாழக்கிழமை காலை அங்கு நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டு யாத்திரையை ஆரம்பித்தனர்.



பாத யாத்திரைக் குழுவினர் பொதிகளுடன் ஓம் சரவண பவ, செல்வச் சந்நிதி முருகா, கதிர்காமக் கந்தா எனப் பக்தி கோஷம் எழுப்பியவாறு காலை 9.30 மணிக்கு பாத யாத்திரையை ஆரம்பித்தனர்.

இந்தக் குழுவினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் ஊடாக பயணித்து கதிர்காமக் கந்தன் கொடியேற்ற தினமான ஜூலை மாதம் 8 ஆம் திகதி கதிர்காமத்தை அடைவார் கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-8)

**புதிதாக ஆரம்பிக்கவுள்ள ஓர் நிறுவனத்திற்கு பின்வரும் ஆள்கள் உடன் தேவை.**

1. Manager - முன் அனுபவம் விரும்பத்தக்கது.
2. Accountant - CIMA விரும்பத்தக்கது.
3. Driver - Auto மோட்டார் சைக்கிளும் (40-50)
4. Office Boy - (வயது 16-20)
5. Cleaners - (துப்பரவு செய்வோர்)
6. Gardener - (தோட்டப் பராமரிப்பாளர்)

Driver& Office Boyயும் தவிர ஏனையவற்றுக்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இரு உறவினர் அல்லாத இருவரை (தகுதியான) குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

முகவரி 713, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (36625) (23-16-14)




வவுனியா தாண்டிக் குளத்தில் மூன்று பெண் குழந்தைகளை கிணற்றில் வீசிக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்ய முயன்ற தாய் கைது செய்யப்பட்டார். உயிரிழந்த குழந்தைகளின் சடலத்தை மீட்கும் பணியில் பொலிஸார். (ஙு)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகரத்தினம் முத்துப்பிள்ளை
(உசன், சாவகச்சேரி- வவுனியா)



சாவகச்சேரி, உசனைப் பிறப்பிடமாகவும், நுணாவில் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் முத்துப்பிள்ளை நேற்று முன்தினம் 16.05.2013 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.05.2013 ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனியா தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.128, அம்மன் கோயில் வீதி, லக்ஷபான, தோணிக்கல், வவுனியா. (35193)(23.14.16)

தகவல்: மகள் அற்புதநாதன் சிவசோதி

# யுவதியைப் படம்பிடித்த இளைஞருக்கு 'பூசை'

யாழ்ப்பாணம்,மே 18

பஸ்ஸுக்குள் இருந்த யுவதி ஒருவரை பிறிதொரு பஸ்ஸில் இருந்தவாறு கைத்தொலைபேசியில் படம் பிடித்தார் என்ற குற்றச்சாட்டில் தெல்லிப் பழையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்.பஸ் நிலையத்தில் பொது மக்களால் பிடிக்கப்பட்டு நையடைப்புடைக்கப்பட்ட பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 5.15 மணியளவில் இடம்பெற்றது. நாவற்குழி கோவிலாக்கண்டியைச் சேர்ந்த யுவதி ஒருவர் வீடு செல்வதற்காக கொடிகாமம் செல்லும் இ.போ.ச.பஸ்ஸில் ஏறி யன்னல் கரையோரமாக அமர்ந்திருந்தார். அப்போது பிறிதொரு பஸ்ஸில் இருந்த தெல்லிப்பழையைச் சேர்ந்த குறித்த இளைஞர் அந்த யுவதியைத் தனது கைத்தொலைபேசியில் படம் பிடித்துள்ளார். இதனைக் கண்ணுற்ற அந்த பஸ்ஸில் இருந்த ஏனையவர்கள் குறித்த இளைஞனைப் பிடித்துத் தாக்கினர். யுவதியும் நடந்ததை அறிந்து அவரை ஏசினார். அப்போது ''நான் சிங்கள இனத்தவன். எனக்கு யாரும் அடிக்க முடியாது. அடித்தால் நடப்பதே வேறு'' என்று அந்த இளைஞர் மிரட்டினார் என்றும் சம்பவ இடத்தில் நின்றிருந்த ஒருவர் தெரிவித்தார்.

அதன் பின்னர் அவர் யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவரைப் பொலிஸார் விசாரணைக்காக யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். எனினும் பிற்பகல் 6 மணி வரை இவர் பற்றிய முறைப்பாடு எதுவும் பதிவு செய்யப்படவில்லை. விசாரணையின் போதே குறித்த இளைஞர் தான் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர் என்று பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (ங-4)


**மில் வேலை தெரிந்தவர்கள் தேவை.**
★மில் கிறைண்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு- 0776081693

**ஜெனரேட்டர் விற்பனைக்கு**
6kw லிஸ்டர், 3kw லிஸ்டர் ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:- 0778689705 (36656)

**வீடு வாடகைக்குத் தேவை**
பல்கலைக்கழக மாணவர் தங்கி இருந்து படிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை.
(யாழ். நகரப் பகுதிக்குள்)
தொடர்பு- 0771703647, 0772062678


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் துயர் பகிர்தலும்



தோற்றம் 09.08.1933 மறைவு 17.04.2013

மு/மல்லாவி மத்திய கல்லூரியின் ஆசிரியர் அ. முருகநாதன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **மா. அரிச்சந்திரன்**

அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நல்லுறவுக் கழகம் மு/மல்லாவி மத்திய கல்லூரி.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் இரத்தினசிங்கம் விசாலாட்சி



கடந்த 18.04.2013 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குலவிளக்கு இரத்தினசிங்கம் விசாலாட்சி அவர்களின் 31 ஆம் நாள் அஞ்சலி நிகழ்வு இன்று (18.05.2013) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சதுமலை வடக்கு, அம்மன் கோயிலடி, மானிப்பாய். (வி/9465) (16.14.9)

**குடும்பத்தினர் கண்ணன் (மகன்)**

## 45ஆம் நாள் நினைவலைகள்



இறப்பு 07★04★2013 (36620) (16.14.9)

மேலதிக கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) திரு.சுப்பையா சுனேசலிங்கம் அவர்களின் தந்தை

அமரர் **கந்தையா சுப்பையா** அவர்களின்

மறைவினால் துயரடையும் அவரது குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆங்கில ஆசிரியர்கள், உடுவில்/தெல்லிப்பழை கோட்டம்.**


**புறொயிலர் கோழி விற்பனைக்கு**
புறொயிலர் கோழி, கல்பேட் கோழிகள் சுத்தம் செய்து விற்பனை செய்யப்படுகின்றது. காலை 7 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை.
தொடர்புக்கு:- கண்ணா பாம், பலாலி வீதி, இருப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
(36654) 0774540090

**குத்தகைக்குத் தேவை**
விவசாயம் செய்யக் கூடிய நிலம் தேவைப்படுகின்றது. இராஜபாதை வீதி, திருநெல்வேலி, கோண்டாவில், உரும்பிராய் போன்ற இடங்களில் விரும்பத்தக்கது.
தொடர்பு- 0779789223

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ். நகரில் அலுவலக பாவனைக்கு சிறிய வீடு ஒன்று தேவை.
தொடர்புகளுக்கு
(36630) 0774802567

**மணமகள் தேவை**
1984இல் பிறந்த கனடாவில் வசிக்கும் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு
(36628) 0777860456

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
NP XC xxxx இலக்கமுடைய Pulsar மற்றும் NP VO xxxx இலக்கம் உடைய Deluxe மோட்டார் சைக்கிள்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு- 0776660492

**காணி விற்பனைக்கு**
கச்சேரி நல்லூர் வீதியில் நல்லூர் மூத்தவிநாயகர் கோயிலுக்கும் நாச்சி அம்மன் கோயிலுக்கும் இடையில் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் 3 + 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
T.P- 021 2220420, 0212223280 E.mail: shingar@hotmail.com

**வீடு வாடகைக்கு உண்டு**
நாவலர் வீதி அன்னசத்திரலேன், யாழ்ப்பாணத்தில் குளிரூட்டி வசதி, பாதுகாப்பு கமரா உள்ளடங்கலாக சகல வசதிகளுடனும் கூடிய 7 அறை மாடி வீடு வாடகைக்கு உண்டு.
T.P- 0770476299, 0772287211


## மரண அறிவித்தல்கள்



### வைத்திலிங்கம் மகேஸ்வரன் (யோகவா)

நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் மகேஸ்வரன் நேற்றுமுன்தினம் (16.05.2013) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மகள் (சாந்தி), மருமகன்.

நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (36631) (23-16-14)



### மயில்வாகனம் சதாசிவம்

கண்ணாமலை இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சதாசிவம் நேற்று (17.05.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பருவதம் தம்பதியரின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சபாரத்தினம், காலஞ்சென்றவர்களான சோதிலிங்கம், செல்வபாக்கியும் ஆகியோரின் சகோதரரும் சிவனேஸ்வரி, சிவாஸ்கரன், சிவாஜினி (நியூசிலாந்து), சிவராஜினி (அமெரிக்கா), சிவகுமார் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா, புஸ்பவதனா, சிவராமன், ஈஸ்வரன், ஜெயசீதா ஆகியோரின் அன்பு மாமனும் டிலக்ஷன், டிலக்ஷனா, சிவகேசவன், குருபரன், சுவேதா, லாவண்யா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2013) சனிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். 0771554427

கண்ணாமலை, இமையாணன், உடுப்பிட்டி. (36627) (23-16-14)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை குமாரு
(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)



கந்தரோடை மேற்கைப் பிறப்பிடமாகவும் வீமன்காமத்தை புகுந்த இடமாகவும் கந்தரோடையில் வசித்து வந்தவருமான சின்னத்துரை குமாரு நேற்று (17.05.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் கமலநாதன் (கொனிக்கா கலர் லாப்), விமலநாதன் (தெல்லிப்பழை ப.நோ.கூ.ச.), ஜெயநாதன் (பிரதம தபாலகம் - யாழ்), ஜெயந்திமாலா ஆகியோரின் தந்தையும் ராகினி, செல்வரதி, யோகமதி, சிவயோகராசா ஆகியோரின் மாமனும் தனுசன், பிறேமினி, சிந்துஜா, திவ்வியா, துவாரணி,கம்ஷா, மகோதராசா, ராமகிருஷ்ணராசா, துர்க்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.05.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். 0771510306

(36627) (23-16-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் சிங்கர் பிளஸ் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ். மணிக்கூட்டுக் கோபுரம் கடந்த வியாழக்கிழமை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது. யாழ்.நகரின் மையப் பகுதியில் அமையப்பெற்றுள்ள மிகவும் பழைமை வாய்ந்த இந்த மணிக்கூட்டுக் கோபுரம் 80 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அரசியல் தலைவர்களும் அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ம-14-51)

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

# 400 இற்கும் குறைவான தாதியர்களே கடமையில்

யாழ்ப்பாணம், மே 18

நாடளாவிய ரீதியில் இருந்து வருகை தரும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கி வரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 1500 தாதியர்கள் கடமைக்கு தேவைப்படும் நிலையில் தற்போது 400 இற்கும் குறைவான தாதியர்களே கடமையில் உள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் தாதிய பரிபாலகர் ரி.ச[illegible]ர மௌலீஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

சர்வதேச தாதியர் தின நிகழ்வுகள் யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போது அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்துக்கு மட்டுமல்ல கிழக்கு மாகாணம் உட்பட தென்மாகாணத்தில் இருந்து வருகை தரும் நோயாளர்களுக்கும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

> “ஆளணிப் பற்றாக் குறைக்கு மத்தியில் ஒரு தாதிய உத்தியோகத்தர் மூன்று தாதியர்கள் செய்யும் வேலையைச் செய்து வருகிறார்.

இந்த நிலையில் வைத்தியசாலையில் கடமைக்கு 1500 தாதியர்கள் தேவையுள்ள போதும் தற்போது 400 இற்கும் குறைவான தாதியர்களே கடமையில் உள்ளனர்.

இந்த ஆளணிப் பற்றாக் குறைக்கு மத்தியில் ஒரு தாதிய உத்தியோகத்தர் மூன்று தாதியர்கள் செய்யும் வேலையைச் செய்து வருகிறார்.

தற்போது 1,100 தாதியர்கள் கடமைக்குத் தேவை. தாதியர் பயிற்சிக் கல்லூரியில் கற்கும் மாணவர்கள் 3 வருடங்களின் பின்னரே தாதியராக வெளியேற முடியும். ஆனால் யாழ்ப்பாணத்தில் கற்கும் மாணவர்களை மட்டும் கொண்டு ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாது.

இதனைவிட பல தசாப்தங்களாகச் செயற்பட்டு வரும் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் 25 பேர் தங்கக் கூடியதாகவே தங்குமிட வசதிகள் உள்ளன.

தாதியர் பற்றாக்குறை மற்றும் தங்குமிட வசதிகள் தொடர்பாக அரச அதிபரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியைச். சேர்ந்த தாதியர்களும் தங்கியிருக்கக் கூடியதான தங்குமிட வசதிகளை ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ம-14)

### வெசாக் தினத்தில் இறைச்சி, மதுபான கடைகள் திறக்க தடை

குருநகர், மே 18

வெசாக் தினங்களான எதிர்வரும் 24, 25 ஆகிய தினங்களில் நாட்டில் இயங்கும் அனைத்து இறைச்சி, மதுபான விற்பனைக் கடைகளை திறக்க வேண்டாம் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-51)

### யாழ். ரயில் நிலையத்தில் ரயில்வே அலுவலகம்

யாழ்ப்பாணம், மே 18

யாழ்.ரயில் நிலையத்தில் ரயில்வே அலுவலகம் ஒன்றைத் திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. யாழ்.குடாநாட்டுக்கான ரயில் பாதையை விரைவாகச் சீரமைக்கும் நோக்குடன் இந்த அலு வலகத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ரயில்வே அலுவலகம் திறப்பதற்கு முன்னோடியாகப் பணியாளர்கள் தங்குவதற்கான விடுதி ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. (ம-17)

## சேதமான ரயில் பெட்டிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 18

காங்கேசன்துறை ரயில் நிலைய வளாகத்தில் சேதமடைந்த நிலையில் உள்ள ரயில் பெட்டிகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

யாழ். ரயில் நிலையத்தில் இருந்து காங்கேசன்துறை வரைக்குமான ரயில் பாதைகளின் சீரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் சேதமடைந்து துருப்பிடித்த நிலையில் உள்ள ரயில் பெட்டிகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில் நிலைய புனரமைப்பு தொடர்பாக திணைக்கள அதிகாரிகள் அண்மையில் காங்கேசன்துறைக்குச் சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## மூலதன நன்கொடை கிடைக்காத போதும் சொந்த நிதியில் மலசலகூடம் அமைக்க உதவி

### வலி.தெற்கு பிரதேச சபை வழங்கியது

வலி.வடக்கு, மே 18

கடந்த மூன்று ஆண்டுகளாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு உள்ளூராட்சித் திணைக்களத்தால் மூலதன நன்கொடை வழங்கப்படாத போதும் வலி. தெற்கு பிரதேச சபை தனது நிதியில் இருந்து வருவாய் குறைந்த மூன்று குடும்பங்களுக்கு மலசல கூடம் அமைக்க உதவி வழங்கியுள்ளது.



உள்ளூராட்சித் திணைக்களத்தால் பொது சுகாதார வேலைத் திட்டங்களுக்கென வருடாந்தம் ஒரு தொகை நிதி ஒதுக்கப்படுவது வழமை.

கடந்த 3 வருடங்களாக உள்ளூராட்சி திணைக்களத்தின் அசமந்தம் காரணமாகச் சுகாதார வேலைகளுக்கான நிதி வடக்கின் எந்தவொரு பிரதேச சபைக்கும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் வசதி குறைந்த. மலசலகூட வசதிகள் அற்ற மூன்று குடும்பங்களுக்கு பொது சுகாதாரப் பரிசோதகர்களின் சிபாரிசுக்கு அமைய வலி. தெற்கு பிரதேச சபையால் உதவி வழங்கப்பட்டுள்ளது.

மலசல கூடம் அமைப்பதற்குத் தேவையான சிமெந்து மற்றும் உபகரணங்கள் இவ்வாறு வழங்கப்பட்டன. (ம-86)

## போரின்போது கைவிடப்பட்ட 4 படகுகள் உரிமையாளரிடம்

வலி.வடக்கு, மே 18

கடந்த கால போரின்போது கைவிடப்பட்ட நான்கு படகுகளை அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு சுண்டிக்குளத்தில் காங்கேசன்துறை கடற்படைகளின் கட்டளை அதிகாரி தலைமையில் இடம்பெற்றது.



கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் பொன்னாலை கடற்படை முகாமில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் வடமாகாண கடற்படைகளின் கட்டளை அதிகாரி றியல் அட்மிரல் உடவத்த மற்றும் யாழ். மாவட்டக் கடற்படைகளின் கட்டளை அதிகாரி ஆகியோருக்கு இடையே இடம்பெற்ற சந்திப்பின்போது யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர்களின்சம்மேளனத்தால் உரிமையாளர்களின் படகுகளை கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனைப்பரிசீலிப்பதாகக்கூறிய கடற்படைகளின் கட்டளை அதிகாரியின் பணிப்புக்கு அமைவாக புடகுகளின் உரிமையாளர்கள் யாழ்.மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரால் அடையாளம் காணப்பட்டு உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து நான்கு படகுகளும் கையளிக்கப்பட்டுள்ளன. (ம-86)

# மா, பலா பழங்களின் உற்பத்தியில் வீழ்ச்சி; விலை உயர்வு

## நோய்த் தாக்கங்களே இதற்குக் காரணம்

யாழ்ப்பாணம், மே 18

குடாநாட்டில் இம்முறை மா, பலா பழங்களின் உற்பத்தியில் வீழ்ச்சிநிலை ஏற்பட்டுள்ளது.

பயன்தரும் மரங்களில் ஏற்பட்ட நோய்த் தாக்கங்களே இந்த வீழ்ச்சி நிலைக்குக் காரணம் என்று கூறப்பட்டது.

காலநிலை மாற்றம் மற்றும் மழை போன்ற காரணிகளால் குறித்த மரங்களில் ஒருவித நோய்த்தொற்று ஏற்பட்டுக் காணப்பட்டது.



மாமரங்களிலும், பலா மரங்களிலும் பிஞ்சுகள் முற்றாத நிலையில் வாடிவீழ்ந்தன. பெருந்தொகையான பிஞ்சுகள் இவ்வாறு கொட்டியமையால் பழங்களைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலையும் உற்பத்தியை பெற முடியாமைக்குக் காரணம். இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்க முடியும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.


இவற்றின் உற்பத்தியில் வீழ்ச்சி நிலைமை ஏற்பட்டதால் சந்தைகளில் அவற்றின் விலைகளிலும் உயர்வுநிலை காணப்படுகிறது.

சிறிய பலாப்பழம் ஒன்று 300 ரூபாவாகவும் மாம்பழம் 70 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதாரம் கையில்

## சிரிய இரசாயன ஆயுதப் பாவனை குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா விளக்கம்



வொஷிங்டன், மே 18
சிரிய அரசு தனது மக்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியமை தொடர்பில் ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.

எனினும் அது தொடர்பில் மேலும் முக்கியமான விவரங்களைத் திரட்ட வேண்டியுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

''கிடைக்கப்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையிலும், திரட்டப்பட்டு வரும் தகவல்களின் அடிப்படையிலும் அமெரிக்காவின் எதிர்கால நடவடிக்கைகள் தொடரும்.

சிரியப் பிரச்சினைக்கு அமெரிக்காவின் தலையீடு மட்டும் தீர்வாக அமையாது. அனைத்து நாடுகளும் இணைந்து சிரிய அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

சிரிய விவகாரத்தில் இராணுவ, இராஜதந்திர நகர்வுகள் மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் உள்ளபோதும் அவை குறித்து இப்போது கூறமுடியாது'' என்று அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள சிரிய அரசு, தாம் ஒரு போதும் நாட்டு மக்கள் மீது இரசாயன ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்த மாட்டோம் என்று தெரிவித்துள்ளது. (ற)

# 'மகாசென்' அட்டூழியம்

## 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பங்களாதேஷில் இடம்பெயர்வு



டாக்கா, மே 18
வங்கக் கடலில் உருவாகி தற்போது பங்களாதேஷ் நோக்கி நகர்ந்துவரும் 'மகாசென்' புயலால் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். பங்களாதேஷை 'மகாசென்' கடந்து செல்லும்போது சுமார் 100 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்று கூறப்படுகிறது. கடும் மழை மற்றும் காற்றுக் காரணமாக இதுவரை 45 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

பங்களாதேஷை அடுத்து 'மகாசென்' மியன்மாரைத் தாக்கக் கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

### மலேஷியாவில் 5 தமிழர்களுக்கு அமைச்சுப் பதவிகள்

கோலாலம்பூர், மே 18
புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள மலேஷிய நாடாளுமன்றத்தில் 5 தமிழர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலில் நஜீப் ரசாக் தலைமையிலான தேசிய முன்னணி மீண்டும் வெற்றி பெற்றது. அதையடுத்து புதிய அமைச்சரவையை ரசாக், நேற்றுமுன்தினம் அறிவித்தார். அறிவிக்கப்பட்டுள்ள அமைச்சரவையில் 5 இந்தியத் தமிழர்களுக்கு முக்கிய அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.


அதேவேளை, புதிய அமைச்சரவையில் சீனர்கள் எவரும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

### சோதனைக் குழாய் குழந்தை முறையில் புதிய தொழில்நுட்பம்

லண்டன், மே 18
ஐ.வி.எப். முறை எனப்படும் சோதனைக் குழாய் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ளும் வழிமுறையில், சாதக வாய்ப்பை கணிசமான அளவில் அதிகரிக்கக் கூடிய தொழில்நுட்பம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பிரிட்டன் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உடலுக்கு வெளியே உருவாக்கப்படும் கரு ஆரம்ப கட்டத்தில் 'இன்குபேட்ட'ரில் வைக்கப்படும். அப்போது அதன் ஆயிரக்கணக்கான புகைப்படங்கள் எடுக்கப்பட்டு குறித்த கரு தாயின் கருப்பையில் செலுத்தப்பட்ட பின்னர் குழந்தையாக வளரக் கூடிய வாய்ப்புள்ளதா என்பதை மதிப்படுவதாக இந்தத் தொழில்நுட்பம் அமைந்துள்ளது.

ஆனால், இந்த ஆராய்ச்சி ஆரம்ப கட்டத்திலேயே உள்ளது என்று தெரிவித்துள்ள அவர்கள், இந்தத் தொழில்நுட்பம் பரவலாகப் பயன்படுத்தப்படுவதற்கு முன் பெரிய அளவிலும் அதிக காலத்துக்குமான பரிசோதனைகள் தேவை என்று தெரிவித்தனர். (ற)



# அதிகமாகத் தென்படும் பறக்கும் தட்டுகள்

## கனேடிய விண்வெளி ஆராய்ச்சி மையம்

ஒன்ராறியோ, மே 18
கனடா வான்பரப்பில் தென்படும் அடையாளம் காணப்படாத பறக்கும் தட்டுகளின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது என்று அந்த நாட்டைச் சேர்ந்த விண்வெளி ஆராய்ச்சி மையம் கூறுகின்றது.

இந்த எண்ணிக்கை தற் போது 100 வீதத்தால் அதிகரித்துள்ளது என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டில், 986 பறக்கும் தட்டுகள் வான்பரப்பில் தென்பட்டுள்ளன. எனினும் கடந்த வருடம் இந்த எண்ணிக்கை 1981ஆக அதிகரித்துள்ளது. அதிலும் குறிப்பாக, ஒன்ரா றியோ மாகாணத்தில் 40 சத விகிதமாகவும், மற்ற மாகாணங்களிலும், இது போன்ற ஒளித்தோற்றத்தையோ, பறக்கும் பொருள்களையோ மக்கள் அடிக்கடி பார்க்கின்றனர் என்றும் தெரிவிக்கிறது அந்த ஆராய்ச்சிமையம்.


இதுகுறித்து அந்த அமைப்பின் அதிகாரி ஒருவர் கருத்துக் கூறுகையில்,

''கனேடிய மக்கள் முன்னரை விட தற்போது வான்பரப்பை ஆராயத் தொடங்கியுள்ளனர். இத்தகைய தட்டுகள் மாறுபட்ட வடிவங்களில் தென்படுகின்றன. முக்கோண வடிவிலோ, ஒளிப்பிழம்பு போன்றோ, வட்ட வடிவ பறக்கும் தட்டாகவோ மாறுபட்ட தோற்றங்களில் மக்களுக்குத் தென்படுகின்றன. எம்மிடம் தான் கண்டவற்றை விவரித்த 10 வயதுச் சிறுவன் ஒருவன் 'ஒரு நிமிடம் கண்ணுக்குத் தெரிந்த அது, பின்னர் வானத்தில் மிக வேகமாகப் பறந்து சென்றது' என்று கூறினான்.

இவ்வாறான சம்பவங்கள் தற்போது அதிகரிக்கத் தொடங்கியுள்ளன' – என்று அவர் தெரிவித்தார். (ற)



அண்மையில் நாசா விண்வெளி மையம் வெளியிட்டுள்ள ஒரு புகைப்படத்தில் வட்டவடிவ தட்டு போன்ற ஓர் உருவம், வானவில் நிறத்தில் வெளிச்சத்தை இறைத்தவாறு பூமியின் மேற்பரப்பில் வட்டமிடுவது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ற)



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள கிரென்பரி நகரை நேற்றுமுன்தினம் இரவு கடும் சூறாவளி தாக்கியது. 110 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளியால் கிரேன்பரியில் உள்ள வீட்டின் கூரைகள் பிய்த்துக்கொண்டு பறந்தன. வீடுகள் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர். (ற)

# இந்தியாவுடன் வேண்டாம் உறவு

## பாகிஸ்தானை எச்சரிக்கும் தீவிரவாதிகள்

இஸ்லாமாபாத், மே 18
இந்தியாவுடன் எந்த உறவுகளையும் பேணக் கூடாது என்று காஷ்மீர் பயங்கரவாத அமைப்பு ஒன்று பாகிஸ்தான் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

காஷ்மீர் பிரச்சினை தொடர்பிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.


காஷ்மீர் பிரச்சினையை கைவிடும் பட்சத்தில் நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட வேறு எவரும் பாகிஸ்தானில் ஆட்சி நடத்த முடியாது எனவும், பாகிஸ்தானில் அரசு என்பது இல்லாமல் போகும் எனவும் குறித்த அமைப்பு எச்சரித்துள்ளது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. (ற)

### சிரிய வீரர்களை சுட்டுக்கொல்லும் போராட்டக்காரர்கள்

டாமாஸ்கஸ், மே 18
தம்மால் கைது செய்யப்பட்ட பதினொரு சிரிய வீரர்களைச் சுட்டுக் கொல்லும் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளனர் சிரிய போராட்டக்காரர்கள்.

அந்தக் காணொலியில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் முழங்காலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சிரிய வீரர்களின் மீது பின்னால் இருந்து ஒருவர் துப்பாக்கியால் சுடுகின்றார்.

போராட்டக்காரர்களின் இத்தகைய செயற்பாடுகளுக்கு மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன. (ற)



நேபாளத்தின் பெகாரா விமான நிலையத்தில் இருந்து 22 சுற்றுலாப் பயணிகளுடன் புறப்பட்ட சிறிய ரக விமானம் ஓடுபாதையில் இருந்து விலகி அருகில் இருந்த ஆறு ஒன்றின் அருகே வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

அதில் 8 ஜப்பானியர்கள், 11 நேபாளியர்கள், விமான ஊழியர்கள் உட்பட 22 பேர் காயமடைந்தனர்.

உடனடியாக அந்தப் பகுதிக்கு வந்த மீட்புப் படையினர் காயமடைந்த அனைவரையும் மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

விபத்துக் குறித்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர்களை விட வாக்குகள் அதிகமாம்

## தலையைப் பிய்த்துக் கொள்ளும் பாகிஸ்தான் தேர்தல் அதிகாரிகள்

இஸ்லாமாபாத், மே 18
பாகிஸ்தானில் கடந்த 11ஆம் திகதி நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், சில வாக்குச் சாவடிகளில் வாக்காளர்களின் எண்ணிக்கையை விட அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாம்.

நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தம் 8,119 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் 49 சாவடி களில் இவ்வாறு வாக்காளர் களின் எண்ணிக்கையை விட, வாக்குப்பதிவு அதிகமாகநடந்துள்ளது என்று கண்டுபிடித்துள்ளனர் தேர்தல் அதிகாரிகள்.

அதையடுத்து அதிர்ச்சியடைந்துள்ள பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் அதுகுறித்து உடனடி விசாரணையை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது. (ற)

# 'தடா' நீதிமன்றில் சரணடைந்தார் சஞ்சய் தத்

மும்பை, மே.18
உச்சநீதிமன்றம் மறு ஆய்வு மனுவை நிராகரிப்புச் செய்ததை அடுத்து நடிகர் சஞ்சய் தத் நேற்று முன்தினம் மும்பையில் உள்ள தடா நீதிமன்றத்தில் சரண் அடைந்தார்.


மும்பாயில் 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய, குண்டுதாரரின் துப்பாக்கியை வைத்திருந்த வழக்கு ஒன்றில் தனக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையை அனுபவிப்பதற்காக இந்திப் பட நடிகர் சஞ்சய் தத் சிறைக்கு சென்றிருக்கிறார்.

அந்தத் தாக்குதலில் 257 பேர் உயிரிழந்தனர். நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் சஞ்சய் தத் சரணடைந்தார்.

மும்பாய் தாக்குதலை நடத்திய குண்டுதாரியிடம் இருந்து வாங்கிய ஒரு ரைபிளையும், கைத்துப்பாக்கியையும் வைத்திருந்ததற்காக சஞ்சய் தத்துக்கு 5 வருடச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. அதில் ஏற்கனவே அவர் 18 மாதங்களை சிறையில் கழித்து விட்டார். தனக்கு பல திரப்படங்களுக்கான பணி இருப்பதாகக் கூறி மீதமான தண்டனையை அவர் தாமதித்து வந்தார்.

ஆனால் அதற்கான அவரது மேன்முறையீட்டை நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

ஆயுதங்களை வைத்திருந்ததற்காக 2006 இல் சஞ்சய் தத்துக்கு இந்த தண்டனை வழங்கப்பட்டிருந்தாலும், சதி குறித்த குற்றச்சாட்டில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். (வ)



# மதுரையில் குண்டுவெடிப்பு 3 பேர் காயம்

மதுரை பெத்தானியாபுரம் அண்ணா பிரதான வீதிக்கருகில் உள்ள குப்பைத் தொட்டியில் குண்டு வெடித்ததில் 3 பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் அப்பகுதியில் பெரும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மதுரை மாநகராட்சி சார்பில் அங்கு அமைக்கப்பட்டுள்ள இரும்பு குப்பைத் தொட்டியிலிருந்து மாநகராட்சி ஊழியர்கள் தினமும் குப்பைகளை லொறியில் ஏற்றிக் கொண்டு செல்வது வழக்கம்.

அங்கு வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டியில் மர்ம ஆசாமிகள் யாரோ வைத்திருந்த நாட்டு வெடிகுண்டு நேற்றுமுன்தினம் காலை 9.40 மணியளவில் திடீரென்று பயங்கர சத்தத்துடன் வெடித்தது.

இவ்வெடிப்புச் சம்பவத்தால் இரும்பு குப்பைத் தொட்டி துண்டு துண்டாகச் சிதறிப் பறந்தது. இதில் அந்த வழியாக சென்ற 3 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். சம்பவத்தில் படுகாயமடைந் தவர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். (வ)

# மீண்டும் முழங்குக

**லண்டன் வாழ் ஈழ உறவுகளுக்கு வைகோ அழைப்பு**



லண்டனில் இன்று நடைபெறவுள்ள முள்ளி வாய்க்கால் துயரத்தின் 4 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் லட்சக் கணக்கில் கலந்து, கல்லறைகளில் உறங்கும் எங்கள் உறவுகளுக்கு மறுக்கப்பட்ட நீதி வேண்டி உரக்கக் குரல் கொடுக்குமாறு லண்டன் வாழ் தமிழ் மக்களை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறைகூவல் விடுத்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு இலங்கையில் நடைபெறுவதைத் தடை செய்ய வேண்டியும் புலம் பெயர் தமிழ் மக்கள் அனைவரும் குரல் எழுப்ப வேண்டும் என்றும் அவர் மேலும் வேண்டியுள்ளார்.

# இலங்கையைப் புறக்கணிப்போம்

## பிரசாரப் போராட்டத்தில் தமிழக இளைஞர்கள்

சென்னை, மே.18
ஈழத் தமிழ் மக்களுக்கான போராட்டத்துக்கு மேலும் வலிமை சேர்க்கும் வகையில் தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இலங்கையை புறக்கணிப்போம் என்ற பிரசார போராட்டத்தை தமிழகம் முழுவதும் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை இனவாத அரசு மேற்கொண்ட இனப்படுகொலைகளும் அதற்கான ஆதாரங்களும் விவாதங்களும் உலக அரங்கில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றன.

தாயகத்தில் வாழும் எம் உறவுகளுக்கு பேச்சுரிமை மறுக்கப்பட்ட நிலையிலும் அவர்களுக்கான தமிழக, புலம் பெயர் தமிழ் மக்களது அறப் போராட்டம் மென்மேலும் பல் மடங்கு பலம் கொண்டு எழும் என்பதை உலகுக்கு இந்த SAVE TAMILS அமைப்பின் இளையோர் பறை சாற்றுகின்றனர்.

கடந்த நவம்பர் மாதம், தாயகத்திலிருந்தும், தமிழகத்திலிருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருந்தும் பல அரசியல் பிரமுகர்களும் தமிழர் அமைப்புகளும் கலந்து கொண்ட உலகத் தமிழர் மாநாட்டை பிரிட்டன் தமிழர் பேரவை லண்டனில் ஏற்பாடு செய்திருந்தது.

அந்த மாநாட்டில், இலங்கைக்கு எதிராக பல்வேறு வகையிலும் பல திசைகளிலும் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென் றும், தாயகத்தில் இடம் பெற்றது ஓர் இனப்படுகொலை என்றும் சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக மேற்படி அமைப்புகளுடன் கலந்தாலோசித்து இந்த தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கான பல்வேறு வேலைத் திட்டங்களை பிரிட்டன் தமிழர் பேரவை தீட்டியது.

அண்மையில் பிரிட்டன் தமிழர் பேரவை விடுத்த வேண்டுகோளுக்கமைய தமிழக அமைப்புக்கள் இலங்கையைப் புறக்கணி, இலங்கைப் பொருள்கள், சுற்றுலா மற்றும் கிரிக்கட் என்பனவற்றைப் புறக்கணி என்ற போராட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளன.

இந்த வகையான சிறிய தீப்பொறிகளே, இன்று தமிழ் நாட்டிலும் உலகளவிலும் பெரியதொரு தீப்பந்தமாய் உருப்பெற்று, ஈழத்தமிழர்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலையை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட உதவுகின்றது.

இது காலத்தின் அவசியம். இதன் அடிப்படையில் வையகப் பரப்பெங்கும் வாழுகின்ற அனைத்து தமிழ் மக்களும், தமிழ் அமைப்புகளும், தமிழ் நாட்டை சேர்ந்த அனைத்துக் கட்சிகளும் 'Boycott Sri Lanka' போன்ற பரப்புரைகளை முன்னெடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறோம்- என்றுள்ளது. (வ)







### சொத்துக் குவிப்பு வழக்கு

# மே 20 இற்கு ஒத்தி வைப்பு


பெங்களூர், மே.18
தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. வருமான வரித் துறை இயக் குநரை எதிர்வரும் 31 ஆம் திகதி நேரில் முன்னிலையாக சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக முதல்வர் ஜெய லலிதா, அவரது தோழி சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீது வருமானத்துக்குப் பொருந்தாத வகை யில் சொத்துகள் சேர்த்ததாக வழக்குத் தொடரப்பட்டது. அது குறித்த விசாரணை பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி எம். எஸ். பாலகிருஷ்ணா முன்னிலையில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற விசாரணையில், வருமான வரித் துறையினர் சொத்துக் குவிப்பு வழக்கு தொடர்பான 30 ஆவணங்களைத் தாக்கல் செய்தனர்.

அவற்றைப் படித்துப் பார்க்க ஜெயலலிதா தரப்பில் கால அவகாசம் கோரப்பட்டது.

அதையடுத்து, இந்த வழக்கு விசாரணையை நீதிபதி பாலகிருஷ்ணா நாளை மறுதினம் திங்கட்கிழமைக்கு ஒத்திவைத்தார். (வ)



புதுடில்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில், பூட்டானுக்கான முன்னாள் இந்திய தூதர் பவன் குமார் வர்மா, அவருடைய 'சாணக்கியாஸ் நியூ [illegible]' என்ற புத்தகத்தை ஜனாதிபதி [illegible] வழங்கினார்.

# ஹெலி ஊழல் விவகாரம்

## விமானப்படை அதிகாரியிடம் விசாரணை

டில்லி, மே 18
இத்தாலி நிறுவனத் துடனான ஹெலிகொப்டர் பேர ஊழல் தொடர்பாக விமானப் படையின் மூத்த அதிகாரியிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணை நடத்தினர்.

இதுகுறித்து சி.பி.ஐ. தரப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

முக்கியப் பிரமுகர்களுக்காக 12 அதிநவீன ஹெலிகொப்டர் வாங்குவதற்காக அகஸ்டா வெஸ்ட் லேண்ட் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக, சாட்சி என்ற வகையில் எயர்மார் ஷலுக்கு நிகரான விமானப்படை அதிகாரி ஒருவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

எனினும், விசாரணைக்கு உள்படுத்தப்பட்ட அதிகாரி யின் பெயரை சி.பி.ஐ. அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

இந்த விவகாரத்தில் முன்னாள் விமானப்படை தலைமைத் தளபதி எஸ்.பி. தியாகி மற்றும் அவரது உறவினர்கள் 3 பேர் உட்பட மொத்தம் 13 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக, தியாகியின் இல்லம் உட்பட 14 இடங் களில் சி.பி.ஐ. அதிகாரிகள் சோதனை மேற்கொண்டிருந்தனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துச் சபை ஊழியர்கள் 60 வயது வரை பணியாற்ற வேண்டும்

## போக்குவரத்துச் சேவை சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, மே 18
இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு 60 வயது வரை பணியாற்றுவதற்கு வாய்ப்பு வழங்க வேண்டும்.
இவ்வாறு அகில இலங்கை போக்குவரத்துச் சேவை சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
அரச ஊழியர்களுக்குச் சமனான விதத்தில் அரசமைப்பு சார் நிறுவன ஊழியர்களின் சேவைக்காலத்தை 60 வயது வரை நீடிப்பதற்கான உரிமை வழங்கப்படுள்ளது. எனினும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு அந்த உரிமை கிடைக்கவில்லை என்று சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.
இலங்கை போக்குவரத்துசபை பணிப்பாளர்கள்சபை உறுப்பினர் மத்தியில் நிலவும் உட்பூசல்கள், கருத்து மோதல்களின் காரணமாக 60 வயது வரையிலும் பணியாற்றும் உரிமை இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்குக் கிடைக்கவில்லை என்று சங்கத்தின்பொதுச்செயலர் சேபால லியனகே தெரிவித்தார்.
57 வயது வரையில் சேவை நீடிப்புக்கள் வழங்கப்பட்டுள்ள அனைத்து இலங்கைப் போக்குவரத்து ஊழியர்களதும் சேவைக்காலத்தை 60 வயது வரை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறினார்.
நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய அரசமைப்பு நிறுவன ஊழியர்களது சேவைக் காலம் அரச ஊழியர்களுக்குச் சமனானதாக 60 வயது வரையிலும் நீடிக்கப்படும் உரிமை வழங்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)



படையினர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு திருகோணமலை, பழைய கச்சேரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா, கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்புக்கு வரும் ரயிலில் நுளம்பை விரட்டும் பயணிகள்




மட்டக்களப்பு,மே 18
கொழும்பிலிருந்து புறப்பட்டு மட்டக்களப்பு வந்து சேரும் இரவு நேர இன்ரசிற்றி ரயிலில் நுளம்புத் தொல்லை தாங்க முடியாமல் பயணிகள் அவஸ்தைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
1250 ரூபா செலுத்தி முற்கூட்டிய ஆசனப்பதிவு செய்து உறங்கலிருக்கை ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் பயணிகள் ஆசனத்தில் அமர்ந்தது தொடக்கம் ரயிலை விட்டு இறங்கும் வரை நுளம்புக் கடியால் அவதியுறுகின்றனர்.
ரயில் பெட்டிகள் தகுந்த பராமரிப்பில்லாத முறையில் நுளம்புகள்ஒழிந்துவாழக்கூடிய தாக கவனிப்பாரற்றுக் கிடப்பதே இதற்குரிய காரணம் என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.
கொழும்பு -மட்டக்களப்பு இன்ரசிற்றியில் கால்களை கீழே வைக்க முடியாமல் ஆசனத்தில் மடித்து வைத்து போர்வைகளால் போர்த்துக் கொண்டு பயணிகள் நுளம்புகளை விரட்டுவதிலேயே தமது இராப்பொழுதை கழிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொது பல சேனாவுக்கும் 'நோபல் பரிசு' வழங்கலாம்

## தமிழர் மீது அவர்களுக்குத் திடீர் அன்பாம் என்கிறார் ஹமீட்



கொழும்பு, மே 18
பொதுபல சேனாவுக்கு அற்புதங்கள் செய்த விஞ்ஞானிகளுக்கு வழங்கும் 'நோபல் பரிசை' வழங்குவது பொருத்தமானது என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் செயலர் வை.எல்.எஸ்.ஹமீட் தெரிவித்தார்.
முஸ்லிம்கள் மீது அநியாயங்களை மேற்கொள்ள முயற்சிக்கும் பொது பலசேனா அமைப்பினரின் செயற்பாடுகளைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
''பொது பல சேனாவுக்கு தமிழ் மக்கள் மீது திடீர் அன்பு பிறந்துள்ளது. பொதுபல சேனா அமைப்பு அமெரிக்காவில் ஒரு மாதம் ஓய்வெடுத்துவிட்டு மீண்டும் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்துள்ளது.
பொதுபலசேனாவின் சரியான நிறத்தை சிங்கள மக்கள் இனங்கண்டு விட்டனர். பொய் மற்றும் குரோதத்தை முதலீடாகக் கொண்ட எந்த வியாபாரமும் இலாபம் அடைவதில்லை.
அவர்கள் அமெரிக்காவில் தங்கியிருந்த விகாரையிலிருந்து துரத்தப்பட்டமை ஏற்கனவே இலங்கை மக்களுக்கு தெரியும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அதனால் தான் தமக்கு அங்கு பலத்த வரவேற்பு கிடைத்தாகக் கூறுகின்றனர்.
இலங்கைக்கு எதிரான ஜெனிவா பிரேரணையின் முழு மூச்சாக புலம் பெயர்ந்தோர் அமைப்புக்கள் செயற்பட்டதாக கடந்த காலங்களில் குற்றஞ் சுமத்தப்பட்டது. அது உண்மை என்றால் அவர்களுடன் பேச்சு நடத்திய பொது பல சேனாவை ஏன் விசாரணை செய்யவில்லை?
பொது பல சேனாவின் புதிய கண்டுபிடிப்புத்தான் அமைச்சர் விமல் வீரவன்ச- சிவசேனா தொடர்பு. இவ்வாறான கண்டுபிடிப்புக்களைச் செய்பவர்கள் நிச்சயம் நோபல் பரிசுக்கு தகுதியானவர்கள். போல்டன், நியூட்டன் போன்ற விஞ்ஞானிகள் உயிருடன் இருந்தால் பொதுபல சேனாவின்கண்டுபிடிப்புக்களைபோன்று தம்மால் கண்டு பிடிக்க முடியவில்லை என வெட்கித் தலை குனிந்திருப்பார்கள்.
முஸ்லிம் அடிப்படைவாதம், அல்கெய்தா, தலிபான் போன்றவை தொடர்பான விவாதத்தை நாடாளுமன்றத்தில் நடத்த வேண்டும் என்று அவர்கள் கோரியிருப்பது நாடாளுமன்றத் தேர்தலில் இவர்கள் களமிறங்குவதற்கான வியூகம் என்பதை இந்த நாட்டு மக்கள் அறியாமல் இல்லை.
நாம் தேர்தலில் குதிக்கமாட்டோம் என்று பொதுபலசேனா கூறுவது தேர்தலில் போட்டியிடுவோம் என்று மறைமுகமாக கூறுவதாகும்.
எனவே பொதுபலசேனாவினுடைய சித்து விளையாட்டுக்களை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி)

# கிருமிநாசினி தெளித்தவுடன் சந்தைக்குவரும் மரக்கறிகள்


## கல்முனை நுகர்வோர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,மே 18
மட்டக்களப்பு, கல்முனை பிரதேசங்களில் உள்ள பொதுச் சந்தைகளில் விற்பனைக்கு வரும் மரக்கறி வகைகள் கிருமிநாசினி தெளித்த கையோடு அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு வருகின்றன என்று பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.
குறிப்பாக வெண்டி, பயற்றை,கத்தரிபோன்ற உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளுக்கு கிருமிநாசினி தெளிக்கப்பட்டு போதியளவு அவகாசமில்லாமல் அறுவடை செய்யப்பட்டு சந்தைக்கு வருவதால் பாவனையாளர்களுக்கு சுகாதாரப் பாதிப்பு ஏற்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



இந்த மரக்கறிவகைகள் வாங்கும் போது கிருமிநாசினிகளின் மணம் இல்லாத போதும், சமைத்த பின் இந்த வாடை வீசுவதால் சமைத்த கறிகளை உண்பதற்கு பயன்படுத்தமுடியாத நிலை காணப்படுகிறது என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இத்தகைய மருந்து தெளிக்கப்பட்ட மரக்கறிகளை உண்பதால் பல்வேறு நோய்களின் பாதிப்புக்கு ஆளாக வேண்டிய அபாயம் உள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.
எனவே இத்தகைய மரக்கறிவகைகளின் விற்பனை குறித்து சுகாதாரப் பரிசோதகர்கள் உரிய பரிசோதனைகளை மேற்கொண்டு அதைத் தடுக்க வேண்டும் என்று பாவனையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# மட்டு.மின்சார சபைக்கு ரூ.37 லட்சம் வருமானம்



மட்டக்களப்பு,மே 18
சட்டவிரோதமாக மின் மானிகளை உடைத்து மின்சாரம் பெற்ற குற்றத்தின் பேரில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதம் மூலம் இலங்கை மின்சார சபைக்கு கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 37 லட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது.
இவ்வாறு இலங்கை மின்சார சபையின் புலன் விசாரணைக்குப் பொறுப்பான புலனாய்வு அதிகாரி எம்.ஆர்.எம்.பி. தஸநாயக்க தெரிவித்தார்.
மட்டக்களப்பு,வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் ஐம்பது [illegible] பேருமாக கைது செய்யப்பட்ட தொண்ணூற்றி ஐந்து பேரிடமிருந்து மின்சார சபைக்கு தண்டப்பணமாக முப்பத்தேழு லட்சம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது என்று அவர் கூறினார்.
மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள[illegible] திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-ரி)

# ஆள்பதிவு திணைக்களத்தில் ஊழியர்களுக்கு வெற்றிடம்

## பணிகளை நிறைவேற்றுவதில் சிரமம்

கொழும்பு,மே 18
ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் நிலவும் அலுவலக ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாதுள்ளதால் அன்றாடக் கருமங்களை செய்வதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.
ஆள்களைப் பதிவு செய்யும் கருமங்களை மேற்கொள்ளும் பணிகள் தொடர்பான செயலணியில் 600 பேர்கள் வரையில் பணியாற்ற வேண்டியிருக்கும் நிலையில்,தற்போது 483 பேரே சேவையில் உள்ளனர். அதனால் 117 பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

**ஆள்பதிவு திணைக்களத்தின் அலுவலக ஊழியர்கள் பதவிக்கு 117 பதவி வெற்றிடங்கள் நிலவுகின்றன**

இந்தத்திணைக்களத்தில்நாளொன்றில் 400 வரையிலான தேசிய ஆள் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன.
ஒவ்வொரு அடையாள அட்டையும் கைகளால் எழுதி நிரப்பப்பட்டே விநியோகிக்கப்படுகின்றன. இந்தப் பணிகளை 40 எழுதுவினைஞர்கள் மாத்திரமே மேற்கொள்கின்றனர் என்று கூறப்படுகிறது. (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாபாரத் திட்டமிடல் தொடர்பாக பயிற்சி

யாழ்ப்பாணம், மே 18
ஐக்கிய நாடகள் அபிவிருத்தி நிகச்சித் திட்ட நிறுவனத்தால யாழ்.மாவட்த்தில் இயங்கும் மூன்று கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான வியாபாரத் திட்டம் தயாரித்தல் தொடர்பான பயிற்சி நெறியை எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளனர்.
இந்தத் திட்டத்தில் காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் பணியாளர்களுக்கு இந்தப் பயிற்சிநெறிகள் வழங்கப்படவுள்ளன.
எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை நான்கு நாள்கள் காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும் எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் பணியாளர்களுக்கும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## மணிவிழா நிகழ்வுகள்

வலி.வடக்கு.மே 18
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனின் மணிவிழா நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராசா தலைமையில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் நிதி நிர்வாக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம் பிள்ளை வரவேற்புரையையும் ஆசியுரைகளை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரம் தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்.மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்பணி ஏ.அகஸ்தீன், யாழ்.முஹமதியா ஜும்மா பள்ளிவாசல் பலாகஜிபேஷ இமாம் மௌலவி எம்.ஐ.மஹ்மூத். முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் வழங்கவுள்ளனர்.
மணிவிழா மலரான யோகநாதன் மலர் வெளியீட்டைத் தொடர்ந்து விழா நாயகன் எழுதிய ''கல்வியில் தர மேம்பாடு'' எனும் நூல் வெளியீடும் இடம்பெறும்.
நயப்புரையை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி த.கலாமணியும் வாழ்த்துரைகளை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா, யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறையின் செயலர் எஸ்.சத்தியசீலன் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலனும் நிகழ்த்துவர். (ஒ-86)

## நயினாதீவு ஆலயச் சூழலில் 85 மின் குமிழ் பொருத்த முடிவு

யாழ்ப்பாணம்,மே 18
நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு 85 மின்குமிழ்களை ஆலயப் பகுதியில் பொருத்த ஆலய அறங்காவலர் சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று அறங்காவலர் சபையின் தலைவர் ப.க.பரமலிங்கம் தெரிவித்தார்.
கடந்த வருடத்திலும் பார்க்க மிகவும் கூடுதலான பக்தர்கள் இந்தமுறை திருவிழாவில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் இரவு வேளைகளில் மின் வெளிச்சம் தீவின் முக்கிய பகுதிகளில் நல்ல முறையில் வழங்கப்படவேண்டும் என்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆலய ஏற்பாடுகள் தொடர்பான கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.
தற்போது நிலவும் கடும் வெயில் காரணமாக மக்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களைக் குறைக்கக் கூடியதாக நயினாதீவு துறைமுகத்தில் இருந்து ஆலயம் வரை பந்தல் அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.
ஏற்கனவே அன்னதான சபை ஆலயத்தின் தெற்கு வீதியில் பந்தல் ஒன்றை அமைக்கவும் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)



மாகாண மட்ட விசேட கூத்து நிகழ்வில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (ம-253)

# கடலுணவுக்காக யாழ். நகரை நாடும் அல்லைப்பிட்டி மக்கள்

கொழும்புத்துறை, மே 18
அல்லைப்பிட்டி பகுதி மக்கள் தமது உணவுத் தேவைக்கான கடலுணவுகளைக் கொள்வனவு செய்ய யாழ். நகருக்குச் செல்லவேண்டிய நிலை காணப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.
அல்லைப்பிட்டி கடற் பகுதிகளில் அங்குள்ள மீனவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றபோதிலும் அவற்றை அந்தப் பகுதியில் விற்பனை செய்வதைத் தவிர்த்து யாழ். நகரச் சந்தைகளுக்கும் கொண்டு செல்வதே அதற்குக் காரணமென அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
தமது பிரதேசத்திலுள்ள கடல் வளம் பயன்களை வேறு பகுதிக்குச் சென்று கூடிய விலை கொடுத்து கொள்வனவு செய்யும் பரிதாப நிலையில் தாம் உள்ளதாக மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.
அதேவேளை அல்லைப் பிட்டியில் இதுவரை சந்தை வசதிகள் ஏற்படுத்தப்படாமையும் இதற்கு ஒரு காரணமெனக் கூறப்படுகிறது.
கடற்றொழிலாளர்கள் தாம் பிடிக்கும் கடலுணவுகளில் ஒரு பகுதியையாவது அந்தப் பகுதியில் விற்பனை செய்ய முன்வந்து மக்களின் கடலுணவுக்கான தட்டுப்பாட்டையும், வீண் அலைச்சலையும் போக்கு வேண்டுமென மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.
இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமெனமக்கள் கோரிக்கை விடுகின்ற னர். (வ-135)



> அல்லைப்பிட்டியில் இதுவரை சந்தை வசதி கள் ஏற்படுத்தப்படாமையும் இதற்கு ஒரு காரணம்

## 'பிக்கப்' மோதி வயோதிபர் காயம்

தென்மராட்சி ,மே 18
'பிக்கப்' வாகனம் மோதியதில் சிறிய மோட்டார் சைக்கிளில் பயணித்த வயோதிபர் படுகாயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.
சாவகச்சேரி நுணாவில் சந்தி வர்த்தகரான மகேஸ்வரன் (வயது-65) என்பவர் காயங்களுக்கு இலக்காகி சுயநினைவை இழந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

## தென்மராட்சிப் பகுதியில் மீள்குடியமர்ந்தோருக்கு மலசலகூடவசதி

தென்மராட்சி பிரதேசத்தில் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்ற அமைச்சால் மலசலகூடங்கள் அமைத்துக் கொள்ளப்படவுள்ளன.
கைதடி- நாவற்குழி, தனங்களப்பு,மறவன்புலோ, கரம்பகம், எழுதுமட்டுவாழ் தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கு மலசலகூடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மக்கள் பங்களிப்புடன் தலா 60 ஆயிரம் ரூபா செலவில் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## காங்கேசன்துறை சாரணர் கிளைக்கு புதிய ஆணையாளர்

யாழ்ப்பாணம் ,மே 18
இலங்கைச் சாரணர் சங்கத்தின் காங்கேசன்துறை சாரணர் மாவட்டக் கிளையின் புதிய ஆணையாளராக செ.சற்குணராசா சாரணர் ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.
கடந்த ஏப்ரல் இரண்டாம் திகதி தொடக்கம் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## சங்காபிஷேகம்

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மகாகும்பாபிஷேக தின 1008 சங்காபிஷேகமும் பாற்குட பவனியும், அன்னதானமும் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளன.
அன்றைய தினம் காலை 6 மணிக்கு குமிழடி விநாயகர் கோயிலில் இருந்து பாற்குட பவனி ஆரம்பமாகி முத்துமாரி அம்மன் கோயிலைச் சென்றடையும்.
காலை 7 மணிக்கு அன்னை ஸ்ரீமுத்துமாரி அம்பாளுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா சங்காபிஷேகம் நடைபெறும்.
பகல் அன்னதானம் இடம்பெறுவதைத் தொடர்ந்து மாலையில் திருவூஞ்சல், மணவாளக் கோலம் நடைபெற்று பரிவார மூர்த்திகள் சகிதம் அம்பாள் வீதி உலா வருவார். (ம-8)

## கலந்துரையாடல்

தென்மராட்சி ,மே 18
வேள்ட் விஷன் நிறுவனத்தின் தென்மராட்சி பிர தேசத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ள குடிதண்ணீர், மலசலகூடம் உட்பட வேலைத்திட்டங்கள் தொடர்பாக பிரதேச நிறுவனங்களின் துறைசார் அலுவலர்களுடனான கலந்துரையாடலை நடத்தவுள்ளனர். எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ். பொது நூல் நிலைய மண் டபத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## உள்ளூராட்சி சபைகளுக்கு ஆலோசகர் நியமனம்

யாழ்ப்பாணம்.மே 18
உள்ளூராட்சி சபைகளுக்கு சபை தொடர்பிலான ஆலோசனைகளை வழங்குவதற்காக இளைப்பாறிய உதவிக் கணக்காளர் த.பாலசுப்பிரமணியத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சபைத் தலைவர்கள் நியமித்துள்ளனர்.
சபை நடவடிக்கை தொடர்பான சபை ஒழுங்கு விதிகள், சபை சட்ட விதிகள், உப சட்ட விதிகள், சட்ட பீதியான சுற்றறிக்கைகள் தொடர்பில் ஆலோசனைகள் வழங்குவதற்கு இளைப்பாறிய உதவிக் கணக்காய்வாளர் நாயகம் பாலசுப்பிரமணியத்தை நியமிக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சபைத்தலைவர்கள்தீர்மானித்துள்ளனர்.
இது தொடர்பில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.
இவர் சபையின் நிதி, நிர்வாக நடவடிக்கை தொடர்பான கடமைகளை மேற்கொள்ளமாட்டார் எனவும் சபையின் கூட்டங்களிலும், விசேட கூட்டங்களிலும் கலந்து ஆலோசனை வழங்குவார் என்றும் இதற்கெனவே நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் சபைத் தலைவர்கள் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## ரூ.8 லட்சம் காசோலை மோசடி

### வர்த்தகர் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 18
புடைவைகளை கொள்வனவு செய்து 8 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி செய்த குற்றச்சாட்டில் புடைவைக்கடை உரிமையாளர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்.நகரில் முனீஸ்வரன் வீதியில் உள்ள கடை ஒன்றின் உரிமையாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்.விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.
கோப்பாயைச் சேர்ந்த வியாபாரி ஒருவர் கொழும்பிலிருந்து புடைவைகள் எடுத்து வந்து யாழ்ப்பாணத்தில் உள்ள கடைகளுக்கு விற்பனை செய்து வருகிறார். சந்தேகநபரும் கோப்பாயைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர் புடைவைகளைக் கொள்வனவு செய்துவிட்டு காசோலையைக் கொடுத்துள்ளார்.
ஆனால் வங்கிக் கணக்கில் பணம் இல்லாததால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முன்னாள் பீடாதிபதி S.K. யோகநாதன் அவர்களின் மணிவிழா சிறப்பு மலர்

### அருளாசிச் செய்தி
### யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தைக் கட்டிக்காத்தவர் பீடாதிபதி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி S.K.யோகநாதன் அவர்கள் இன்று 60 ஆவது அகவை அடைந்து மணிவிழாக்காண்பதைனயிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். யாழ்ப்பாணக் கல்விப் பாரம் பரியத்தைக் கட்டிக்காக்கும் வகையில் தேசியக் கல்வியியற் கல்லூரியில் 2ஆவது பீடாதிபதியாகக் கல்விப்பணி ஆற்றியது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. ஒழுக்கம், கல்வியில் நிறைவான சேவை, கட்டமைப்பான மாணவர் சமூகம் இலங்கையிலே தனித்துவமான கல்லூரியாக இந்தத் தேசிய கல்வியியற்கல்லூரி பல வளர்ச்சிகளைக் கண்டு வளர்ச்சி அடைந்து இருப்பதற்குக் காரண கர்த்தாவாக விளங்கியவர் S.K. யோகநாதன். இவருடைய எளிமையான தோற்றம், இனிமையான பேச்சு, இறை நம்பிக்கை, எடுத்த விடயத்தைச் செவ்வனே ஆற்றும் செயற்றிறன் அனைத்தையும் கொண்ட S.K.யோகநாதன் பல்லாண்டு காலம் சுகதேகியாக வாழ வாழ்த்துகின்றேன்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்

### 60 ஆவது அகவையை நிறைவுசெய்யும் பீடாதிபதி S.K.யோகநாதன் அவர்கள்



காலத்தால் அழிவுறாதது கல்விச் செல்வம். அதனைத் தான் பெற்றதுடன் வருங்கால சந்ததிக்கும் கற்றுக் கொடுக்கும் பணியில் விருப்புடன் ஈடுபட்டவர். எதிர்கால ஆசிரிய சமூகத்தை உருவாக்கும் பணியில் முக்கிய பங்கை வகித்து அதனைப் பொறுப்புடன் நிறைவேற்றுவதற்காகத் தன்னையே அர்ப்பணித்தவர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதியாக விளங்கும் இவரை நானும் நன்கு அறிவேன்.

தான் கொண்ட மதத்திற்கு மட்டுமல்லாமல் எல்லா மதங்களையும் மதித்து வாழும் நற்பண்புடையவர். இவர் கிறிஸ்தவ பாடநெறியினைத் தற்காலிகமாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் உள்வாங்கி, ஆசிரியப் பயிலுநர்கள் அப்பாடநெறியை நன்கு கற்றுத் தேறவும், அங்குள்ள கிறிஸ்தவ ஆலயத்தை அழகுறக் கட்டி முடிக்கவும் என்னுடன் ஆலோசித்து எடுத்த முயற்சிகளையும் நான் நன்கு அறிவேன்.

இவ்வாறு சேவைநல நோக்கோடு எல்லோரையும் அணுகி, ஆசிரியப்பயிலுநர்களை நன்நெறியில் உருவாக்கிய S.K.யோகநாதன் அவர்கள் பாராட்டத் தக்கவர். இவர் தனது அறுபதாவது அகவையை நினைவு கூரும் வேளை இவரை வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடை கிறேன். வாழ்வு எனும் கொடையை இவருக்கு அளித்த இறைவன், தொடர்ந்தும் இவருக்கு நல் உடல், உள, ஆன்மிக நலன்களை வழங்கி இவரை ஆசீர்வதிக்க இவருக்காக இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறி நிற்கின்றேன்.

பேரருட்திரு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ். ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

### பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே அல்ஹம்துலில்லாஹ்



வரலாற்றில் தடம் பதித்த ஓர் ஆசிரியர் பீடத்தின் பீடாதிபதி ஓய்வு பெறுகின்ற நல்நிகழ்வுக்கு ஆசியுரை வழங்குகின்ற அரிய வாய்ப்பினைத் தந்தமைக்கு என் ஆசிகள். பீடாதிபதி யோகநாதன் ஒரு வரலாற்றுப் புருசர். இனமத பேதத்திற்கு அப்பால் அவர் ஒரு பூரண மனிதத்துவம் நிறைந்த ஒரு மாமனிதர். அவருடன் உரையாடிய போது தான் அவருடன் மனிதம் நிறைந்த மானிடம் பொதிந்திருப்பதைக் கண்டேன்.

தமிழ், முஸ்லிம் என்று வேற்றுமை பாராது மாணவர்களிடம் பழகுகின்ற பண்பை அவரிடத்தில் கண்டேன். அவருடைய வழி கட்டலில் கல்விகற்ற, கற்றுக்கொண்டு இருக்கின்ற மாணவ, ஆசிரிய ஆசிரியைகள் அனைவரும் அவரது வரலாற்றுக் காலத்தை மறந்து விடாது கற்றுத்தந்த அனைத்து ஆசான்களுக்கு நன்றி உடையவர்களாக ஆசானை மதிக்கின்ற மேலான பண்பு உள்ளம் கொண்டவர்களாக வாழ வேண்டும்.

அவரின் சேவையைப் பாராட்டுவதுடன் அன்னவருக்கு ஆண்டவன் தேகசுகத்தையும் அன்னவருடைய ஆயுளையும் நீடித்து அருள வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வஸ்ஸலாம்

மௌலவி. எம்.ஐ.மஹ்மூத் (பலாஹி),
பேஷ் இமாம் (புதுப்பள்ளி)
முஹம்மதிய்யா ஜும்மா பள்ளி வாசல், யாழ்ப்பாணம்.

### பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி S.K யோகநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். 1970 களின் பிற்பகுதியில் பீடாதிபதி அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனது மாணவனாக விளங்கினார். அவர் புவியியல் சிறப்புப் பட்டதாரி, பல்கலைக் கழகக் கல்வியின் பின் ஆசிரியப் பணிக்குள் பிரவேசித்து, பல உயர்வுகளை அடைந்தார். மேலும் கல்வியில் பல மேற்படிப்புக்களையும் பட்டங்களையும் பெற்றார். பல உள்நாட்டு, வெளிநாட்டுக் கல்விக் கருத்தரங்குகளிற் பங்குபற்றித் தன் புலமையை விருத்தியாக்கி, எமது கல்விச் சமூகத்தின் மத்தியிற் பாடசாலைக் கல்வித்துறையில் ஒரு புலமையாளராக மிளிர்ந்தார்.

யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி 2000ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, பல்வேறு இடர்பாடுகளைக் கடந்து இன்று அது சிறப்பு நிலையில் இருப்பதற்கும் பெரும்பங்கு வகித்தவர்கள் முதலாவது பீடாதிபதி கமலநாதனும், இரண்டாவது பீடாதிபதி யோகநாதனும் ஆவார்கள். யோகநாதன் காலத்திற் கல்லூரியின் கட்டட வேலைகள் முழுமை பெற்றதுடன், மாணவர் எண்ணிக்கையிலும், கற்கைநெறி எண்ணிக் கையிலும் மற்றும் கல்விசார் செயற்பாடுகளிலும் கல்லூரி வளர்ச்சியும், மேம்பாடும் அடைந்ததெனலாம். மாறிவரும் கற்றல் கற்பித்தல் வகுப்புச் சூழ்நிலைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய ஆசிரியர்களை உருவாக்கு வதிலும் வசதி வாய்ப்புக்கள் இல்லாத பின் தங்கிய புறம் தள்ளப்பட்ட கிராமிய மாணவர்களின் சூழ்நிலைக்கு ஈடு கொடுத்துக் கற்பிக்கக் கூடிய அர்ப்பணிப்புள்ள, கருணை நிறைந்த ஆசிரியர்களை என்றும் உருவாக்குவதிலும் அவர் வெற்றிகண்டவர். அவரது சாதனைகள் என்றும் கல்வி உலகில் நினைவு கூரப்படும்.

பீடாதிபதி யோகநாதன் அவர்கள் தற்போதைய பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்த பின்னர் தொடர்ந்தும் கல்விப் பணியும், சமூகப் பணியும் மேற்கொண்டு எமது சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக விளங்க வேண்டும் என வாழ்த்துகிறேன். அவரின் வாழ்வு மேலும் சிறக்க இறைவன் அருள் புரிவாராக.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்/முன்னாள் துணை வேந்தர்.



### மணிவிழா நாயகன் S.K.யோகநாதன் அவர்களின் சுயவிவரம்

1. பிறப்பு : 28.04.1953
2. பாடசாலை: யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
   யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
3. பல்கலைக்கழகக் கல்வி :
   பேராதனைப் பல்கலைக்கழகம் -புவியியல் சிறப்பு
   திறந்த பல்கலைக்கழகம் - பட்டப்பின் கல்வி டிப்ளோமா
   ஆசிரிய கல்வியில் முது கலைமாணி-
   மலேசியப் பல்கலைக்கழகம் - வாண்மைத்துவ ஆங்கில தேர்ச்சிச் சான்றிதழ்
   (Cert.in. Prefessienal English)
4. கல்விச் சேவை :
   ஆசிரியர் - சிலாபம் சென்.பெர்டேற் தமிழ் மகாவித்தியாலயம்
   ஆசிரிய ஆலோசகர்: சிலாபம் கல்வி வலயம்

ஆசிரியர் கல்வியியலாளர் சேவை:
சிரேஷ்ட விரிவுரையாளர் - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
துறைத் தலைவர் - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
இணைப்பாளர் - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
உப பீடாதிபதி - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
மேலதிக பீடாதிபதி - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
பீடாதிபதி - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி




### Message from Hon.Governor, Northern province for the Diamond Jubilee of Mr.S.K.Yoganathan, Rector of National College of Education, Jaffna.



It is with pleasure that this message of blessing is made in connection with the celebrations of the Diamond Jubilee of S.K.Yoganathan, Rector of the National College of Education, Jaffna, who is now 60 Years of age.

The establishment of the National College of Education is a tremendous advancement in the system of education in the country. With advanced mode of training imparted and made avilable, the institution can take pride in producing quality teachers who are capable of moulding our children to be good citizens.

Mr. Yoganathan has contributed very much towards the raising of the standards education during the past two decades especially in the capacity of Deputy Rector of the National College of Education, Vavuniya and the National College of Education, Jafna.

Congratulations to the Organizing Committee of the Diamond Jubilee Celebrations. May very special wishes and blesings for a Healthy Life and a Happy Retirement period!!

**G.A Chandrasiri, Governor,Northern province.**

### மணி விழா அமைப்புத் தலைவர் கலாநிதி லயன் வை. தியாகராஜா அவர்களின் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இலங்கையின் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் முதன்மையான முன்மாதிரிக் கல்வியியற் கல்லூரியாகச் செயலாற்றி வருகின்றது. இதற்கு முன்னாள் பீடாதிபதி S.K.யோகநாதன் அவர்களின் சேவை முதன்மையானது.

சமகால சவால்களை எதிர்கொண்டு விடா முயற்சியுடனும், தலைமைத்துவ ஆற்றலுடனும், மனிதநேய அணுகு முறையாலும் வெற்றிகரமான பீடாதிபதியாகச் செயலாற்றியவர் S.Kயோகநாதன். இவர் பதவியைப் பொறுப்பேற்ற காலம் பயங்கரமான யுத்தகாலம், பாதை பூட்டப்பட்டிருந்த காலம், உணவுக்குத் தட்டுப்பாடான காலம், இப் பிரச்சினை களைத் தீர்க்க தன்னையே அர்ப்பணித்தவர். வெளி மாவட்ட மாணவர்களை கப்பலில் அழைத்து வந்தவர். அவர்களுக்காக உணவு தேடி அலைந்தவர். மூடப்பட வேண்டி இருந்த கல்லூரியை இயக்கியவர். முகிழ்நிலை ஆசிரியர்களுக்குத் தந்தையாய் இருந்து வழிகாட்டியவர், எதையும் எதிர்பார்க்காத எளிமையான பண்புடையவர்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியை சோலையாக்கி, மைதானத்தைப் புனரமைத்தமை, பெறுமதியான பஸ் ஒன்றைப் பெற்றமை Skype மூலம் உலகின் கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக் கழகங்களுடன் முகிழ்நிலை ஆசிரியர்களைத் தொடர்பு கொள்ள வைத்து தரமான கற்றல் கற்பித்தலை மேற்கொண்டமை எம் பிரதேச ஆசிரியர் நலம் கருதி முதன் முதலாக ஆங்கில மொழி மூல BEd, Med. பாடநெறிகளை கல்லூரிக்குக் கொண்டு வந்தமை, நோய் வாய்ப்பட்ட மாணவர்களை இரவு ஊரடங்கு சட்ட வேளை தானே வாகன சாரதியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லு தல் என ஏனைய எந்தக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதியும் செய்யாத சேவைகளை செய்த அவருக்கு முகிழ்நிலை ஆசிரியர்களின் பெற்றோரும், நாமும் இணைந்து மணிவிழாவை இதய பூர்வமாக மேற் கொண்டு இன்று உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

### வாழ்த்துச் செய்தி
### அர்ப்பணிப்புடனான செயற்பாடுடைய பீடாதிபதி



யாழ்ப்பாணம் தேசிய கல்யியற் கல்லூரியின் பீடாதிபதி S.K.யோகநாதன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதிற் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இக் கல்லூரிக்குச் சேவையாற்ற வந்ததிலிருந்து அவர் முகங்கொடுத்த சவால்கள், வெற்றிகள், வேதனைகள், கடின உழைப்பு, விடா முயற்சி அர்ப்பணிப்பு, உறுதியான செயலாற்றுகைகள் அவரைச் சிறந்த கல்விச் சேவையாளராக உருவாக்கியுள்ளது. கல்லூரியின் நீர்வடிகால் தொடக்கம் கட்டடங்கள், பூமரங்கள், பயன்தரு தென்னை, மா, வாழை போன்ற மரங்கள் ஒவ்வொன்றும் S.K. யோகநாதன் அவர்களின் அர்ப்பணிப்புடனான செயற்பாடு களை எடுத்தியம்புகின்றன.

S.K யோகநாதன் அவர்கள் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள், கல்வியலாளர்கள், கல்விசாரா அலுவலர்கள், நண்பர்கள், உறவினர், அயலவர் என்று அனைவர் முன்னேற்றத்திலும், வளர்ச்சியிலும், நலனிலும் அக்கறை கொண்டவர், அனைத்து மதங்களையும் மதிக்கும், உயர் பண்பு கொண்டவர், சிறந்த வழிகாட்டி, அவரின் செயற்றிறன் மிக்க வழிகாட்டலில் இக்கல்லூரி தலை நிமிர்ந்து நிற்கின்றது. பெரியவரின் வாழ்வு மேன்மேலும் சிறப்பாக அமைவதுடன் மணிவிழா சிறப்புற நடைபெறவும், மணிவிழா மலர் புதுப் பொலிவு டன் வெளிவரவும் எல்லாம் வல்ல வித்தகரும், முடி மன்னர் வைரவரும் அருள் பாலிப்பாராக. மேலும், கல்விச்சேவை தொடர்ந்து எமது சமூகத்திற்குக் கிடைக்கவும் அனைத்துச் செல்வங்களையும் பெற்று வாழவும் வாழ்த்துகின்றேன்.

திரு.எஸ். அமிர்தலிங்கம்
பீடாதிபதி,யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,

### வாழ்த்துப் பாமாலை

முகத்தில் பண்பும்
அகத்தில் அன்பும்
இத வழி காட்டிடும்
இதழின் புதியதோர் பாகம்!

கறுசுறுப்பும் மலர் முகமும்
சுவாரசியப் பேச்சழகும்
சுந்தரப் பேரழகா!
வல்லெழில் சாவகச்சேரி
உதித்த
வளமொழில் மீசாலை
வளர்ந்த நல் சீரழகா!

எண்பத்தி ரண்டினில்
எழிலாய் நீர் உதித்தீர்!
தன் நிகர் பட்டத்தை
தளிர்த்த பேராதனையில்
தகைமையாய் நீர் முடித்தீர்!

கல்வியியற் கல்லூரியினைக்
காத்திட்ட காவலன் நீர்!
வல்லெழில் கதிரவேலு
வண்ணமிகு பொன்னம்மா
வளர் தவப் புதல்வன் நீர்!

இளைய உள்ளங்களின்
நிறைவு காத்திட்ட ஏணி!
நிறைவாய்க் கல்லூரி
கவின் நிலை பேணியே
திகழ்ந்திட்ட கல்லூரி ஞானி!

ஆக்கம்: மானிப்பூர் ரட்னேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் மா வகைகள் பரிசோதனைக்கு

### சுகாதார அமைச்சு தகவல்

கொழும்பு,மே 18
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகளின் தரங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



குறித்த பால்மாக்களில் டி.சி.டி எனப்படும் இரசாயன பதார்த்தம் கலக்கப்படவில்லை என உறுதிப்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளில் இரசாயனப் பதார்த்தங்கள் கலந்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையிலேயே சுகாதார அமைச்சு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. இதேவேளை, சுகவீனமுற்ற ஒருவரை தங்கவைத்து சிகிச்சையளிப்பதற்கு அரசுக்கு நாளொன்றுக்கு 4 ஆயிரம் ரூபா வரை நிதி செலவினமாகிறது என்று சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். அவசர சிகிச்சைப் பிரிவில் ஒருவரை அனுமதித்து சிகிச்சையளிக்கும் போது 10 ஆயிரம் ரூபாவரை அவருக்கு செலவிடப்படுகிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ச)




சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 இன் 8 ஆவது மாநாடு வத்தளை பெகாசஸ் ரீப் ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றபோது 2012/2013 ஆண்டின் வலய தலைவருக்கான சாதனை விருது தேசமானி லயன் எஸ்.ஜே. செல்வராஜா (எம்.ஜே.எப்.) வுக்கு வழங்கப்பட்டது. (ஒ)

# உயர்நீதிமன்ற புதிய நீதியரசர் பதவியேற்பு

### வைபவத்தை புறக்கணித்த 3 நீதியரசர்கள்

கொழும்பு,மே 18
உயர்நீதிமன்ற புதிய நீதியரசர் பதவியேற்பு நிகழ்வில் மூன்று நீதியரசர்கள் கலந்துகொள்ளவில்லை.
நீதித்துறைக்கும் உத்தியோகப்பற்றற்ற சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் இடையில் கருத்து வேறுபாடுகளும் மோதல்களும் உள்ள நிலையில் புதிதாக நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர் ரோகினி மாரசிங்கவின் வைபவ ரீதியான அமர்வின் போது பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. எனினும் இந்த அமர்வில் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் 10 பேரில் ஆர்.ஏ.என். காமினி அமரதுங்க, சந்திர ஏக்கநாயக்க, ஈவா வனசுந்தர ஆகிய மூன்று நீதியரசர்களும் கலந்து கொள்ளவில்லை.
நீதியரசர் எஸ்.ஐ.இமாம் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியான ரோகினி மாரசிங்க உயர் நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெசாக் தினத்தில் தானம் வழங்காதீர்




கொழும்பு,மே 18
வெசாக் போயா தினத்தன்று வெசாக் தோரணம், வெளிச்சக்கூடு காட்சிப்படுத்தல் மற்றும் தானம் வழங்குதல் என்பன செய்யக்கூடாது என்று பௌத்தசாசன மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

**வெளிச்சக் கூடு காட்சிப் படுத்தலை 25 இல் செய்யுங்கள் என்கிறது பௌத்த சாசன அமைச்சு**

வெசாக் தினத்தில் சமய வழிபாடுகளில் மாத்திரமே ஈடுபட வேண்டும் என்று அமைச்சால் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
வெசாக் தோரணம், வெளிச்சக்கூடு காட்சிப்படுத்தல் மற்றும் தானம் வழங்குதல் எதிர்வரும் 25 ஆம் திகதியில் இருந்தே மேற்கொள்ளப்பட வேண்டும்.
இசை நிகழ்ச்சி, பக்தி பாடல் நிகழ்ச்சி போன்றவை வெசாக் தினத்தன்று நடத்தக்கூடாது. வெசாக் தினத்தன்று அறக்கருத்துக்களை போதிக்கும் நிகழ்வுகள் மாத்திரம் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
வெசாக் தினத்தில் சமய வழிபாடுகளில் ஈடுபடாது குழுவாக இணைந்து செயற்படக் கூடாது.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# செய்மதி கருவிகள் சிக்கின

கொழும்பு,மே 18
இந்தியாவில் இருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 103 செய்மதி தொடர்பாடல் கருவிகளை சுங்கப் பிரிவினர் மீட்டுள்ளனர்.
சென்னையில் இருந்து இலங்கைக்கு வந்த இந்திய நபர்கள் இருவரிடம் இருந்து இந்தக் கருவிகள் மீட்கப்பட்டன என்று சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.
குறித்த நபர்களிடம் இருந்து 64 கிலோ பெரிய வெங்காய விதைகளும் மீட்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.
இதேவேளை, போலி ஆவ




ணங்களைச் சமர்ப்பித்து ஜப்பானில் இருந்து நான்கு வாகனங்களை இறக்குமதி செய்த வியாபாரியும் அவருக்கு உதவியவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குறித்த வாகனங்களின் பெறுமதி 1 கோடி 50 லட்சத்துக்கும் அதிகம் என்று சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச)

# வடக்கு தேர்தலுக்கு வலுக்கிறது எதிர்ப்பு

### இராவணா சக்தியும் போர்க்கொடி

கொழும்பு,மே 18
காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களுடன் வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால், அதிக பாதிப்புகள் ஏற்படும். அதனை அரசால் கூட தடுக்க முடியாது போகும் என்று இராவணா சக்தி அமைப்பின் ஏற்பாட்டாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸதேரர் தெரிவித்தார்.
இந்தியாவினால் பலவந்தமாக ஏற்படுத்தப்பட்டு, மக்களின் பணத்தை அழிக்கும் இந்த மாகாண சபைகளுக்கான தேர்தலை வடக்கில் மாத்திரமல்ல, எந்த மாகாணத்திலும் நடத்தக் கூடாது என்று அவர் கூறினார்.
போருக்கு முன்னர், வடக்கில் வாழ்ந்த சிங்கள மக்களை அங்கு மீள்குடியேற்றாது தேர்தலை நடத்துவது சிங்கள மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாகும் என்பதால் அதற்கு எதிராக தேசப்பற்றாளர்களை அணித்திரட்டப் போவதாகவும்



அவர் குறிப்பிட்டார்.
அரசுக்குள் இருந்து கொண்டு, மக்களின் பணத்தில் வாழும், அமைச்சர்கள் டியூ. குணசேகர, திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தேசத்துரோகிகளாக வடக்கில் தேர்தலை நடத்தி, அதிகாரங்களை வழங்க வேண்டும் எனத் தெரிவித்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று தேரர் தெரிவித்தார். அதேவேளை, பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு நடத்தப்படுவதற்கு முன்னர், வட மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என இந்தியாவுக்கு அரசு உறுதி வழங்கியதா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.
அதேபோல், கச்சதீவை இந்தியா மீண்டும் பெற்றுக்கொள்ளும் முயற்சியைத் தடுப்பதற்காக 5 ஆயிரம் பேரை அழைத்துச் சென்று அந்தத் தீவில் குடியேறப் போவதாகவும் தேரர் கூறியுள்ளார். (ச)

# பெற்றோலின் தரத்தை உயர்த்தத் தீர்மானம்

கொழும்பு,மே 18
இலங்கைச் சந்தையில் விநியோகிக்கப்படும் பெற்றோலின் தரத்தை அதிகரிக்க பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.
அதற்கமைய 90 ஒக்டேன் பெற்றோல் 92 ஒக்டேனாகவும் 95 ஒக்டேன் பெற்றோல் 98 ஒக்டேனாகவும் தர அதிகரிப்புக்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பெற்றோலிய கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.
இதனூடாக வாகன இயந்திரங்களுக்கு ஏற்படும் சேதத்தையும் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பையும் குறைக்க முடியும்.




வளிமண்டலத்துடன் சேரும் காபனின் அளவும் அதன் மூலம் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
ஒக்டேன் அளவை அதிகரிப்பதுடன் பெற்றோல் கட்டணத்தை உயர்த்துவதா என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச)

# போர் வெற்றிவிழா காலிமுகத்திடலில்

### ஜனாதிபதி மஹிந்த தலைமையில் இன்று அணிவகுப்புகள்

கொழும்பு,மே 18
போர் வெற்றியின் நான்காவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெற்றிவிழா அணிவகுப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு, காலிமுகத்திடலில் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு கோலாகலமாக இடம்பெறவுள்ளது.
வெற்றிவிழா அணிவகுப்பை மிகவும் பிரமாண்டமாக நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்தார்.
இந்த முறையும் வழக்கம்



போல் இராணுவம், கடற்படை, விமானப் படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படை [illegible] அணிவகுப்பு இடம்பெறவுள்ளது.
மிகவும் கோலாகலமாக நடைபெறவுள்ள வெற்றி அணிவகுப்பை இம்முறையும் பொது மக்கள் நேரடியாக கண்டு களிக்கத் தேவையான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.
போர் வெற்றி விழா அணிவகுப்பைப் பார்வையிட வருபவர்கள் இன்று காலை 7.30 மணிக்கு வருகை தர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செத்துப் பிழைத்த கதை கேளீரோ?

கனிச்சுரபி

'ஐயோ! ஐயோ! அம்மா கடவுளே என்னைக் காப்பாத்து….' இப்போதும் எனக்குள் அந்த கதறல் ஒலி மனக் கண்முன் வந்து போய்க்கொண்டிருக்கிறது. 'மே 18' ஏதோ ஒன்றை இழந்து, உறவுகளைத் தொலைத்து மண்ணுக்கும் இரையாகக் கொடுத்த நாளாகவே எனக்குள் வந்து போகிறது. என்னுள் இருந்த வலியை என்னுடன் அனுபவித்த ஒவ்வொரு உறவுகளும் இதைத்தான் கூறுவார்கள். அந்த நாளில் என் கண்முன் நான் கண்ட காட்சிகளையும் சாட்சியங்களாக உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன். நான் யாழ்ப்பாணத்திலிருந்து என் உறவினர் வீட்டுத் திருமண வைபவத்துக்கு கிளிநொச்சிக்குச் சென்ற போது விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையில் போர் மூண்டதால் ஏ-9 பாதை மூடப்பட்டது. அப்போது நான் தனித்துப் போனேன். எனது ஊருக்கு திரும்பிவர முடியாத நிலைமை. எதையும் செய்ய முடியாத சூழல். அங்கேதான் இருக்கவேண்டியதாயிற்று. எனது உறவினருடன் நானும்தங்கவேண்டியதாய்போயிற்று. அம்மா, அப்பா, சகோதர்கள் என் அன்புக்குக்குரிய எப்போதும் எனக்காக சுண்டல் வாங்கிக் கொண்டு தினம் வீட்டுக்கு வரும் தாத்தா. இப்படி ஒவ்வொரு உறவுகளையும் நினைக்கும் போது எனது சொந்த ஊருக்குப் போக வேண்டும் என்ற ஆசை. எல்லாம் நிராசையானது. உக்கிரமான போர் மூண்ட சூழலில் எனது உறவினர்கள் கிளிநொச்சியில் இருந்து வள்ளிபுனத்தில் ஒரு வெற்றுக் காணியில் கொட்டில் போட்டு குடியேறினார்கள். அவர்களுடன் நானும் ஒட்டிக்கொண்டேன். கொட்டில் போட்ட அன்றைய இரவுகூட அங்கு தங்க முடிவில்லை. சராமாரியான கிபிர் தாக்குதல். நாங்கள் இருந்த குடிசைக்கு 150 மீற்றர் தூரத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் மீது கிபிர் தாக்குதல். அங்கு கிட்டதட்ட சிறுகுழந்தைகள் உட்பட ஏழு பேர் இறந்து விட்டதாக சித்தப்பா வந்து தகவல் சொன்னார்.

நாங்கள் நான்கைந்து குடும்பம் சேர்ந்துதான் ஒன்றாக இருந்ததால் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு வீட்டில் இருந்த பெரியவர்களுக்கு இருந்தது. அன்றைய தினம் இரவே வள்ளிபுனத்திலிருந்து தேவிபுரம் என்ற இடத்துக்கு இடம் பெயர்ந்து சென்றோம். அங்கு கிடைத்த தடிகளையும், தறப்பாள்களையும் சுற்றிக்கட்டி ஒரு குடிசையை அமைத்துக்கொண்டு குடியமர்ந்தோம். கூடவே சாப்பாட்டுக்கென கொண்டுவந்த கோதுமை மாவை பிசைந்து தேங்காய், எண்ணெய் இல்லாத ஓட்டு றொட்டி சுட்டுச் சாப்பிட்டுவயிற்றுப்பசியைஅடக்கினோம். நான்கைந்து நாள்களாக அங்கிருந்து எங்கும் நகர முடியவில்லை. கிபிர் சத்தம் பீதியை கிளப்பியதால் எம்மால் எதுவும் செய்யமுடியவில்லை. வீட்டில் இருந்த பெரியவர்கள் எவருக்குமே நிம்மதியான தூக்கம் இல்லை. இரவோடு இரவாக பங்கர் வெட்டும் பணியில் ஈடுபட்டார்கள். எப்போது யாருக்கு என்ன நடக்குமோ என்ற பயம். ஒரு பாயில் ஐந்து பேர் நெருக்கமாகப் படுத்துக் கொள்வோம். எனது உறவினர்களில் ஆறு குழந்தைகள் அதில் நான்கு குடும்பம் இளம் குடும்பத்தினர். சித்தப்பாவின் மகன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போர்ச் சூழலின் முன்பே இணைந்தபடியால் நாங்கள் 'போராளி குடும்பம்' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டோம். ஒரு நாள் மதியம் 1.30 மணி இருக்கும். வானொலியில் வீரவணக்கம் ஒலி பரப்பும். போராளிகள் மரணம் அடைந்ததை சொல்லிக்கொண்டிருந்தார்கள். 'சுபதீபன்' எனது சித்தப்பாவின் மகன். வானொலியில் அவனது பெயருக்கும் வீரவணக்கம் செலுத்தினார்கள். எங்கள் உறவுகளால் அவனது உடலுக்கு அஞ்சலிகூட செலுத்த முடியவில்லை. அதன் பிறகு நாங்கள் இருந்தால் என்ன செத்தால் என்ன என்ற வெறுப்புணர்வு எல்லோரிடமும் தோன்றியது. சுபதீபன் அடிக்கடி எங்களுக்குள் நினைவாக வந்துபோனான். மே 16 சராமாரியான ஷெல்த் தாக்குதல்களும், கிபிர் தாக்குதல்களும் மாறி மாறி நடந்தன. பாதுகாப்பான இடமாக முள்ளிவாய்க்காலுக்கு செல்லுமாறு அறிவிப்பு கிடைத்தது. ஆளுக்கு ஒரு பெட்டியையும் தண்ணீர்ப் போத்தல்களையும் சுமந்து கொண்டு அந்த வனாந்தரத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தோம். சாப்பாட்டுக்குக்கூட எதுவும் இல்லை. இருந்த உணவுகளையும் சுதந்திரபுரத்தில் பறிகொடுத்து விட்டோம். இரண்டு நாள்கள் காடுகள் தாண்டி கடற்கரைப் பக்கம் சென்றோம். அந்தப் பகுதி 'புதுமாத்தளன்' என்று சொன்னார்கள். நாங்கள் போகும் முன்னரே ஆயிரக்கணக்கான குடிகள் தறப்பாள்களால் மறைக்கப்பட்டு ஒவ்வொரு கொட்டில்களுக்கும் மேலாக வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இத்தனைக்கும் எங்களோடு வந்த உறவினர்களில் ஒரு குடும்பத்தை வனாந்தர வெளியில் தவறவிட்டுவிட்டோம். உயிர் பிழைக்கும் ஆசை எமக்குள்ளும் இருந்ததால் தான் காடு மேடெல்லாம் தாண்டி வனாந்தர வெளியாகக் கிடந்த புதுமாத்தளன் பகுதி மட்டும் வந்து விட்டோம் என்று நினைத்துக்கொண்டோம். நாளாந்தம் நூற்றுக்கணக்கானோர் கண்ணுக்கு முன்னே மண்ணுக்கு இரையாகிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் இருந்த இடத்திலேயே (வீட்டுக்குள்ளேயே) பங்கர் வெட்டி அதற்குள் தான் எங்கள் பொழுது கழிந்தது. இயற்றை உபாதைகளைக்கூட கழிக்க முடியாத அவஸ்தை. அதற்குக் கூட கடற்கரைப் பக்கம் தான் செல்ல வேண்டும். ஆண், பெண்வேறுபாடின்றி அருகருகே இருந்து இயற்கை உபாதைகளைக் கழித்தார்கள். அலை எப்பவடா கரைக்கு வரும் அசிங்கத்தை கழுவுவதற்கென்று பார்த்திருப்பார்கள். அந்தக் கடற்கரையில் மீனுக்குப் பதிலாக கரையொதுங்கியது மனித மலம்தான். மூக்கைப் பொத்திப் பிடித்துக்கொண்டு தான் கொஞ்சத்தூரம் வெளியே வர வேண்டும். மலம் கழிக்கப்போன இடத்தில் பிணமானவர்களும் ஒரு புறம். இப்படியாக நான்கு நாள்கள் எங்கள் பொழுது நரகத்துக்குள் கழிந்தது. மறுநாள் காலை 6.30 மணி இருக்கும். கொச்சைத் தமிழில் 'எங்களிடம் வந்து விடுங்கள், நாங்கள் உங்களைப் பாதுகாப்போம், இல்லையென்றால் உங்களுக்கு அங்கு சாவுதான்' என்று இராணுவம் ஒலி பெருக்கியில் ஒலிபரப்பும் சத்தம் கேட்டது. சனமெல்லாம் கூக்குரலிட்டு பரபரக்கத் தொடங்கியது. நாங்கள் குடியிருந்த தறப்பாள் கொட்டிலுக்கு முன்னால் ஒரு கிறிஸ்தவ குடும்பம் இருந்தது. அதில் ஒருவர் பாதர். அவரது போதனைக்கும் வேண்டுதலுக்குமாக இருபது பேருக்கு மேல் ஒன்றாகக்கூடி ஜெபம் செய்துகொண்டிருந்தார்கள். கணப்பொழுதில் ஐயோ! ஐயோ! என்ற அலறல் கேட்டது. எனது கண்முன்னால் அந்தப் பாதர் இரத்த வெள்ளத்தில் மிதந்ததைப் பார்த்தேன். அவரது கால்களைக் காணவில்லை. துண்டுதுண்டாகி விட்டது. கூடவே இருந்த நான்கைந்து பேர் அந்த இடத்திலேயே மரணமானார்கள். அதில் ஒரு பெண் மார்புகள் கிழிக்கப்பட்டு சிதைந்து கிடந்தாள். ஷெல் துகள்கள் அவர்களது உடலங்களை பதம் பார்த்திருந்தன. கண்முன் கண்ட காட்சிகள் எங்கள் உறவினர்களை கதிகலங்க வைத்தன. அங்கிருந்து வேறு இடத்துக்கு புறப்படலாம் என ஆயத்தமான போது (ஒரு மாதக் கைக் குழந்தையுடன் ஒரு இளம் தாய்) எங்களிடம் தஞ்சமடைந்தாள். தனது கணவர் காலையில் ஷெல்லடியில் இறந்து விட்டதாகக் கூறினாள். தனக்கு யாரும் இல்லை. உதவி புரியுங்கள் என அழத்தொடங்கினாள். அந்தக் கைக்குழந்தையுடன் நாங்கள் அங்கிருந்து இரவு 2 மணி இருக்கும் இராணுவத்திடம் தஞ்சம் அடையலாம் என எங்களிடம் கூட இருந்த பொருள்களையெல்லாம் வீசிவிட்டு அடையாள அட்டைகளை மட்டும் எல்லோரும் சித்தப்பாவிடம் கொடுத்தோம். சனத்தோடு சனமாக நாங்கள் அங்கிருந்து கடற்கரை எல்லையை (நந்திக் கடல்) சென்று விட்டோம். ஷெசல்லடித் தாக்குதல் அகோரமானது. தப்பித்துக் கொள்ள பதுங்கு குழிகூட அங்கு இருக்கவில்லை. எல்லோரும் நிலத்தில் படுத்துக்கொண்டே கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்தோம். அப்போது எங்களோடு ஒட்டிக்கொண்ட பெண்ணின் கைக்குழந்தை மீது செல்த் துகள்கள் வந்து விழுந்ததால் தாயின் கையில் இருந்தபடியே அக்குழந்தை இரத்தவெள்ளத்தில் உயிர் துறந்தது. அந்த இளம் தாய் பைத்தியம் போல கத்த ஆரம்பித்தாள். மயக்கமுற்றாள். அப்போதும் உயிரற்ற தனது குழந்தையின் உடலை அவள் கைநழுவ விடவில்லை. இறுக்கிப் பற்றிக்கொண்டிருந்தாள். கடல் எல்லைக்குள் வந்தவுடன் தூரமாக 'லயிற்' வெளிச்சம் தெரிந்தது. அப்போது இராணுவம் அங்கே இருப்பதாகக் கூறினார்கள். 2 அடி உயரத்துக்கு தண்ணீர் இருக்கும். அரை கிலோமீற்றர் தூரம் தாண்டிப்போனால்தான் இராணுவத்திடம் போக முடியும். எங்களோடு கூட வந்த பெண் குழந்தையை விட்டுப் பிரிய மனமில்லாமல் தொடர்ந்து வர மறுத்தாள். எதுவும் செய்ய முடியாது. 'கடைசியாக எமது நிலத்தை விட்டுப் போறோம்' என்று சித்தப்பா கடற்கரை மணலை கைகளால் கிண்டி அதற்குள் அந்தக் குழந்தையைப் புதைத்துவிட்டு அந்தத் தாயை எங்களுடன் கூட்டி வந்தார். எல்லோரும் உயிர்ப் பயம் போன சந்தோசத்தில் கடல் தண்ணியைத் தாண்டி கடல் எல்லையை அடைந்தோம். நாங்கள் அங்கு போகும் போது 3.30 மணி இருக்கும். அங்கே எங்களுக்குப் பின்னாலும் நான்கைந்து லைனில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை சனம். இராணுவத்தின் வருகைக்காக காத்திருந்தன. காலை 9 மணி இருக்கும். இராணுவம் சோதனையிடத் தொடங்கியது. ஆண் வேறு பெண் வேறு என்று இல்லாமல் தம்மால் முடிந்த வரை சோதனையிட்டார்கள். தங்களது எல்லையைத் தாண்டும் போது தண்ணீர்ப் போத்தலும் கிறீம் கிறேக்கர் பிஸ்கற் பைக்கற்றும் தந்தார்கள். பசியின் கொடுமை கண்களைச் சுற்றியதால் அவர்கள் நஞ்சைத்தந்தாலும் குடிப்போம் என்ற நிலையில் வெட்ட வெளியில் ஒன்றாக இருந்து பிஸ்கட்டையும் சாப்பிட்டு தண்ணீரையும் குடித்தோம். இரவுதான் உங்களை வவுனியாவுக்கு கொண்டுபோவினம் என்று இராணுவம் கதைத்தார்கள். இராணுவத்தினர் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் பாதுகாப்பாக பொல்லுகளுடனும் றைபிள்களுடனும் இருந்தார்கள். மதியம் 2 மணி. பெரிய ஒரு லொறியில் சாப்பாட்டுப் பாசல்கள் கொண்டு வந்தார்கள். 'சாப்பிட வாங்க' என்று அறிவிக்க சனம் ஆயிரக்கணக்கில் ஒரே இடத்தில் குவிந்தார்கள். அந்த இடத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு பார்சல் கிடைத்ததே அரிதாக இருந்தது. ஜீப்பில் இருந்து நாய்க்கு எறிவது போல சாப்பாட்டுப் பார்சல்களை எறிந்தார்கள். பிடிக்கத் தெரந்தவர்கள் பாய்ந்து பிடித்து ஒரு பார்சலையாவது எடுத்தார்கள். எங்கள் சித்தப்பாவுக்கும் ஒரு பார்சல் கிடைத்தது. நாங்கள் காலையில் கிடைத்த பிஸ்கட்டின் மீதியை வைத்திருந்தபடியால் அதைத் தின்று பசியாறிக் கொண்டோம். கிடைத்த சோற்றுப் பார்சலை சிறு குழந்தைகளுக்கு சித்தி பிசைந்து கொடுத்தாள். இரவு 10 மணி இருக்கும். ஒரு வாகனத்தில் எங்களை எல்லாம் ஏறச்சொன்னார்கள். அதற்குள் 150 பேருக்கு மேல் இருந்தோம். 2 மணி நேரத்தில் செட்டிகுளம் காட்டுப் பகுதிக்குள் எங்களை இறக்கி விட்டார்கள். எங்களுக்கென்றே காடாக இருந்த நிலம் எல்லாம் உழுதுவிடப்பட்டிருந்தன. இரவு செல்லடியில் இருந்து தப்பிவிட்டோம் என்ற சந்தோஷத்துடன் அந்தத் தரையில் எல்லோரும் நிம்மதியாகப் படுத்துறங்கினோம். விடிந்த பிறகுதான் கூறினார்கள். இது இராமநாதன் நலன்புரி நிலையம் என்று. அப்போதுதான் நினைத்துக்கொண்டேன் இப்போது நாங்கள் சிறைக்குள் அடைக்கப்பட்டு விட்டோம் என்று.

> 'கடைசியாக எமது நிலத்தை விட்டுப் போறோம்' என்று சித்தப்பா கடற்கரை மணலை கைகளால் கிண்டி அதற்குள் அந்தக் குழந்தையைப் புதைத்துவிட்டு அந்தத் தாயை எங்களுடன் கூட்டிவந்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323


விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலுசந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ்' – பஸ்நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் – மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான் : 0775035571.

## விளையாட்டும் சீவன்போதலும்

பூனைகளினதும் எலிகளினதும் விருப்பு வெறுப்புகள் வேறுவேறானவை. அவை எப்போதுமே ஒன்றுக்கொன்று முரணோடு செயற்படுபவை. ஒன்றின் துக்கம் இன்னொன்றின் பேரின்பம். அதனால் தான் 'பூனைக்கு விளையாட்டு. சுண்டெலிக்கு சீவன் போகுது' என்று தமிழில் சொல்வார்கள். இந்த அனுபவ வார்த்தை என்றென்றைக்கும் சாகாவரத்தோடு இயங்கிக்கொண்டே இருக்கின்றது. பூனையும் எலியும் மட்டுமல்லாது மனிதர்களினதும் இயல்பும் கிட்டத்தட்ட அப்படித்தான். பிறரின் துன்பத்தில் சிரிக்கும்நிறையப்பேர் உலகில் இருக்கவே செய்கிறார்கள்.
முள்ளிவாய்க்கால் பேரவலம் நிகழ்ந்து நான்கு வருடங்கள் நிறைவுபெறும் தருணத்தில், ஊழியில் சிக்கி உயிர் நீத்த உறவுகளுக்காக தீபம் ஏற்றி அஞ்சலிக்க தமிழர் தரப்பு தயாராகி வருகிறது. முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த துயரம் 400 வருடங்கள் சென்றாலும் மறக்க முடியாத ஒன்று. அங்கு நிகழ்ந்த கோரங்களை நினைத்தால் எப்போதும் நெஞ்சிலே இரத்தம் சொட்டவே செய்யும்.
இறுதிப் போரின் கடைசிக் கணங்களில் மனிதம் தன் கண்களை இறுகமூட வேண்டியிருந்தது. எங்கும் சாவின் குரல். குண்டுகளால் சிதைக்கப்பட்டு காயங்களோடு போராடிக் கொண்டிருந்தவர்கள் தங்களை மிதித்தபடி உயிரைச் சுமந்தோடும் உறவுகளிடம் ''எங்களை கொன்று விடுங்கள்'' என்று கெஞ்சினார்கள். சாவை விடவும் காயமும் பட்டினியும் அந்தக் கணத்தில் அதிபயங்கரமானவையாக மாறியிருந்தன. சதுப்பு நிலத்துக்குள்ளேயே தொடர்ந்தும் இருப்பதா? அல்லது படைத்தரப்பிடம் தஞ்சமடைவதா? என்ற இரண்டு கேள்விகளுக்கு நடுவே வாழ்வு ஒவ்வொரு விநாடியும் ஊசலாடிக் கொண்டிருந்தது. சீருடையினரிடம் தஞ்சம் அடைவது பற்றி எண்ணுகையிலேயே பச்சை வர்ணத்துக்குள் ஒளிந்திருக்கும் பயங்கரங்கள் பற்றிய எண்ணங்களே மேலெழுந்தன. என்றாலும் சதுப்பு நிலத்தில் தொடர்ந்தும் தங்கியிருக்கா வண்ணம் பசியும், ஓலமும், தொடர்ந்து வீழும் குண்டுகளும், குழந்தைகளின் கண்ணீரும் எல்லோரையும் மண்ணணையைத் தாண்டி படைக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நகர்த்தியது. எவரும் விரும்பிப் போகவில்லை. காலம் அவர்களை விரட்டித் தள்ளியது.
இடைப்பட்ட காலத்தில் அவர்களின் சொத்துகள், சுகங்கள், உறவுகள் எல்லாவற்றையும் ஒரே நொடியில் இழந்திருந்தார்கள். இனி இழப்பதற்கு உயிரைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. யுகம் யுகமாய்க் கண்ட விடுதலை பற்றிய கனவுகளையும், கொத்துக் கொத்தாய் செத்துக் கிடந்த உறவுகளின் உடல்களையும்அப்படியேவிட்டுவிட்டுவந்துவிட்டார்கள். இப்போது அவர்கள் அழவேண்டும். கண்ணெதிரே மாண்டுவிட்ட உறவுகளின் ஆன்மசாந்திக்காக விளக்கேற்ற வேண்டும். கண்ணீரும் தீபமும் கலந்து அஞ்சலிக்க தமிழர் எல்லோரும் தயாராகி வருகையில், ''பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழித்த நாளை கொண்டாடுவோம்'' என்ற சுவரொட்டியால் பேரினவாதம் தமிழர் தாயக சுவர்களை நிறைத்திருக்கிறது. ''நீங்கள் அழுது புலம்புகையில் எக்காளமிடுவதே எமது வேலை'' என்ற பேரினவாதத்தின் மாற்றமுறாச் சிந்தனையையே இந்தச் சுவரொட்டியும் சொல்லி நிற்கிறது. போர் முடிந்த பின்னும் அவர்கள் பூனைகளாக விளையாடிக்கொண்டே இருக்கிறார்கள். எங்களுக்கு எப்போதும் சேடமிழுத்துக் கொண்டே இருக்கிறது.

# இந்திய - இலங்கை உறவில் மாற்றம் ஏற்படுத்த தமிழகத்தால் முடியுமா?

நீண்ட கால இடைவெளியின் பின்னர் தற்போது இந்தியாவின் தமிழ் நாட்டு மாநிலம் சாதி மோதல்கள், வறட்சி, காவேரி நீர்த்தகராறு போன்ற பல்வேறு உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வரும் நிலையில், இலங்கையர்கள் தமது அயல்நாடான இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் எவ்வாறான மாற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை ஆராய்ந்து புரிந்துகொள்வதற்கான தகுந்த காலமாக இது அமையலாம்.
இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் தமக்கிடையேயான உறவை மேம்படுத்துவதில் தமிழ்நாட்டு விவகாரம் அளவுக்கு மீறிய செல்வாக்கைச் செலுத்தாவிட்டாலும் கூட, இலங்கையர்கள் இவ்வாறான விடயங்களை ஆராய்ந்து கொள்ள முற்படலாம். தமிழ் நாட்டைப் பார்வையிடச் செல்லும் இலங்கையர்கள் மீதும், புத்தகாயவைத் தரிசிக்கச் செல்லும் யாத்திரிகர்கள் மீதும் மற்றும் வடஇந்தியாவிலுள்ள மதம்சார் முக்கியத்துவம் பெற்ற இடங்களைப் பார்வையிடச் செல்லும் சிங்கள பௌத்தர்கள் மீதும் தொடர்ந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் இலங்கையர்கள் அசட்டையாக இருக்க மாட்டார்கள்.
சிங்கள பௌத்தர்களின் இந்தியாவுடனான தொடர்பானது, கடந்த பல நூற்றாண்டுகளாகக் காணப்படுகின்ற போதிலும், தற்போது தமிழ்நாட்டுக்குச் செல்லும் இலங்கையை சேர்ந்த சாதாரண சிங்கள மக்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது ஏன் என்ற கேள்வி நிலவுகிறது. அசோகச் சக்கரவர்த்தியின் பிள்ளைகளான மகிந்த மற்றும் சங்கமித்த ஆகியோர் இலங்கையில் கிறிஸ்தவ மதம் பரப்பப்படுவதற்கு முன்னர் பௌத்த மதத்தைப் பரப்பிய சம்பவமானது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் காலாதிகாலமாக எவ்வாறான நெருங்கிய தொடர்பு பேணப்படுகிறது என்பதற்கு தக்க சான்றாகும்.
இந்தியர்களுக்கு பெனாரஸ் (காசி) போன்று பௌத்தர்களுக்கு அவர்களின் யாத்திரைத் தலமாக புத்தகாய காணப்படுகிறது. இவை உலகிலுள்ள குறிப்பிடத்தக்க மதம்சார் முக்கியத்துவம் மிக்க இடங்களுள் மிகப் பழமையானவையாகக் காணப்படுகின்றன. இவ்வாறான புனிதமான இடங்களுக்குஇலங்கையில் வாழ்ந்த புராதான கால மக்கள் 'படகுப் பயணங்களை' மேற்கொண்டனர். அதாவது கொழும்புக்கும் சென்னைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட படகுப் பயணங்களைப் பயன்படுத்தி இலங்கை யாத்திரிகர்கள் காசி மற்றும் புத்தகாய போன்ற இந்தியாவிலுள்ள முக்கியத்துவம் மிக்க இடங்களுக்குச் சென்றனர்.
இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்லாது புத்தகாயாவுக்குச் சென்ற இலங்கை பௌத்தர்களும் இந்தப் படகுகளைப் பயணத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டனர். இவ்வாறான தொடர்பாடலானது இலங்கை இந்தியாவுடன் மட்டுமல்லாது தென்னாசியா முழுவதற்கும் தொடர்பைப் பேண உதவியது. இதேபோன்று இலங்கையின் கடல் சார் போக்குவரத்தானது தென்னாசியாவில் மட்டுமன்றி ஐரோப்பிய தேசங்களுடன் வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை வழங்கியது.
கடந்த மார்ச்சில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்ததன் மூலம் இந்தியப் பிரதமர் (மன்மோகன்சிங்) இலங்கையுடனான தனது நாட்டின் நட்புறவில் விரிசல் ஏற்படுத்துவதற்கு தயாராக உள்ளார் என்பதையே சுட்டிநிற்கிறது.
கடந்த இரு ஆண்டுகளாகத் தொடர்ந்தும் ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கையை எதிர்த்து இந்தியா வாக்களித்ததை இலங்கை அரசு தவறாக விளங்கிக் கொண்டிருக்கலாம். மன்மோகன் சிங்கின் தலைமையிலான மத்திய அரசு தனது கடந்த ஒன்பது ஆண்டுகால ஆட்சியில் தனது ஆளும் கூட்டணியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவை இழக்குமளவுக்கு மோசமாக நடந்து கொள்ளவில்லை.
ஆனால் தற்போது இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் விடயத்தில் இந்திய மத்திய அரசு தனது ஆதரவைக்காண்பிப்பதுடன், இலங்கை அரசுக்கு எதிராக முன்வைக்கப்படும் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் எனவும் கோரி தி.மு.க, இந்திய மத்திய அரசுக்கான தனது ஆதரவை விலக்கிக் கொண்டது. இந்நிலையில் மன்மோகன் சிங்கின் தலைமைத்துவமானது கொழும்பை சென்னையின் ஊடாகப் பார்க்கவில்லை.
இந்திய மத்திய அரசாங்கமானது எப்பொழுதும் கொழும்பின் ஊடாகவே சென்னையைப் பார்ப்பதாக அல்லது கொழும்பைச் சென்றடைவதற்கு சென்னையைத் தாவிச் செல்வதாக தமிழ்நாடு குற்றம்சாட்டுகிறது. ஜெனிவாவின் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசியற் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியை இந்தியா மேற்கொள்ளவில்லை எனவும், இலங்கை அரசால் போரின் போது இழைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசு அழுத்தம் கொடுக்கவில்லை எனவும் கூறப்பட்டது. இதன் பின்னர் அமெரிக்காவின் தலைமையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தில் பயன்படுத்தப்பட்ட கடும் தொனியிலான பதங்கள் நீக்கப்படுவதில் இந்தியா முன்னின்று செயற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயத்தில், இந்திய மத்திய அரசானது தமிழ்நாட்டு அரசின் விருப்பிற்கு மாறாகச் செயற்பட்டது.
இது ஒருபுறமிருக்க, இலங்கையர்கள் இந்தியாவை சென்னையின் ஊடாகப் பார்க்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. இந்தியாவின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் சென்னையில் வரையப்படவில்லை. இவை டில்லியில் வைத்தே வரையப்படுகின்றன. இந்திய மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படாது இந்திய மத்திய அரசால் வரையப்படும் எந்தத் திட்டங்கள் தொடர்பிலும் மாநில அரசுகள் உடன்பாடு எட்டிக் கொள்வதில்லை. இதனால் இந்திய அரசு ஆளுநர்களை நியமிப்பதற்கு முன்னர் உத்தியோகபூர்வமாக இது தொடர்பாக மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும். அப்போதே இங்கு வரையப்படும் எந்தவொரு திட்டங்களும் பயனுள்ளவையாக அமையும்.
இலங்கையின் வடக்கு மாகாணத்தில் மாகாணசபையை உருவாக்குவதனாது 'பிரிவினைக்கு' வழிகோலும் என சிங்கள மக்கள் கருதுவது பிழையானது. இவர்கள் 'தமிழ்நாடு பெற்றுக் கொண்ட அனுபவத்திலிருந்து' பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது தமிழ்நாட்டில் தி.மு.க வானது 1962ல் வரையப்பட்ட ஜனநாயகத் திட்டத்தின் கீழ் 'தனியான அரசியற் கட்சியாகப்' பதிவுசெய்யப்பட்டது. தி.மு.க தனியான அரசியற் கட்சியாகப் பதிவு செய்த காலத்தில் இந்திய சீனப் போர் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இதனால் இக்காலகட்டத்தில் பயங்கரவாதப் போக்குடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்தியாவில் தடைவிதிக்கப்பட்டிருந்தது.
இந்நிலையில் 1962ல் தமிழ்நாட்டு சட்டசபைத் தேர்தல்களில் வெற்றி பெற்ற தி.மு.க 'பிரிவினையைக்' கைவிட்டதுடன், பிரதான அரசியல் நீரோட்டத்துடன் கலந்துகொண்டது. இதிலிருந்து பிரிந்து கொண்ட அ.இ. அ.தி.மு.கவும், தி.மு.கவும் பிரிவினையைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. 21ஆம் நூற்றாண்டென்பது 20 ஆம் நூற்றண்டல்ல. இந்நிலையில் இலங்கையானது இந்தியாவுடனான தனது உறவைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். இலங்கையின் இனப் பிரச்சினையானது தமிழ்நாட்டின் உணர்ச்சி மிகுந்த பிரச்சினையாக மாறிவிட்ட நிலையிலும் கூட 1974ல் இலங்கைக்கு இந்தியாவால் தாரை வார்த்துக் கொடுக்கப்பட்ட கச்சதீவு தொடர்பில் தற்போது தமிழ்நாட்டில் எதிர்ப்பலைகள் எழுகின்றன.
1971ல் 'முதலாவது ஜே.வி.பி கிளர்ச்சியை' முறியடிப்பதற்கு இலங்கையானது இந்தியாவின் உதவியைப் பெற்றது. ஆறுமாதங்களின் பின்னர், பங்களாதேஷ் யுத்தத்தின்போது இலங்கையானது பாகிஸ்தான் விமானங்கள் இலங்கையில் எரிபொருள்களை நிரப்புவதற்கான அனுமதியை வழங்கியது. நாடுகள் எப்போதும் தமது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. இந்த நாடுகள் இது தொடர்பில் மிக ஆழமாகச் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. இந்நிலையில், தமிழ்நாட்டிற்கு அப்பால் இலங்கை இந்தியா தொடர்பாகச் சிந்திக்க வேண்டும்.



*(நன்றி-புதினப்பலகை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிக்க முடியாதநிலையில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் வீதி

கொழும்புத்துறை,மே 18

பாஷையூர் சென்.அன்ரனிஸ் வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் பயணிப்போர் பல சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியில் பல இடங்களில் பெரிய குழிகள் காணப்படுவதால் வாகனச் சாரதிகளும் சைக்கிள் பயணிகளும் ஆபத்துக்களை எதிர்நோக்குவதாக அச்சம் தெரிவிக்கின்றனர். புனித அந்தோனியார் ஆலயம், பாடசாலை, மீன்சந்தை என்பவற்றை நாடிச் செல்லும் மக்கள் தினமும் குறித்த வீதியைப் பயன்படுத்துகின்றனர். அதேவேளை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளமையால் விரைவில் இந்த வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)

**தனி அறை வாடகைக்கு**
வங்கி ஊழியர், அரச ஊழியர் விரும்பத்தக்கது.
தனி ஒருவருக்கு மட்டும்.
தொடர்பு: 077 711 0281
(37393)(6.11)

# பாஷையூர் இறங்குதுறையின் கரையோரப் பகுதிக்கு மின் விளக்குகள்

கொழும்புத்துறை,மே 18

பாஷையூரில் புனரமைக்கப்பட்டுள்ள மீனவர் இறங்குதுறையின் கரையோரப் பகுதிகளில் மின் விளக்குகள் பொருத்தும் பணிகள் இடம்பெறுகின் றன.

புதிதாக மின்கம்பங்கள் நடப் பட்டு கடற்பகுதியில் வெளிச்சம் பரவக்கூடிய முறையில் மின் விளக்குகள் அமைக்கப் படுகின் றன.

கரையோரமாக நங்கூரமிடப்படும் வள்ளங் களில் அதிகாலை வேளையில் தொழிலுக்குச் செல்லும் போது கடற்றொழிலாளர் இருளில் எதிர்நோக்கும் சிரமங்களைப் போக்கும் வகை யில் மின் விளக்குகள், வள்ளங்கள் தரித்து நிற்கும் பகுதிகளில் பொருத்தப்படுவதாக புனரமைப்பை மேற்கொள்ளும் நிறுவன அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

குறித்த மீன்பிடி இறங்கு துறை கடந்த செவ்வாய்க்கிழமை திறக்க ஏற்பாடுகள் இடம்பெற்ற போதும் பின்னர் அது பிற் போடப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை-

இறங்குதுறைப் பகுதிப் பணிகள் நிறைவடைந்த போதிலும் தற்போது இறங்கு துறையில் இருந்து ஆழ்கடல் பகுதிக்குச் செல்லும் கால்வாயை ஆழப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-135)

**வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவனம்**
**4 ஆவது அணியினரின்**
**சான்றிதழ் வழங்கல்**

இடம் :- யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
காலம் :- நாளை (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி

பிரதம விருந்தினர்
கௌரவ ஈ.சரவணபவன்
(நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்)
தலைவர் :- க.கேதீஸ்வரன்

**நிகழ்ச்சி நிரல்**

- முதன்மை விருந்தினரை அழைத்து வரல்
- மங்கள விளக்கேற்றல்
- வரவேற்புரை:- திருமதி எம். பாக்கியம் ஆசிரியர்
- தலைமை உரை
- பிரதம விருந்தினர் உரை

சான்றிதழ் வழங்கல்
திருமதி யசோதை சரவணபவன்
நன்றியுரை :-தாட்சாயினி இந்திரகுமார்
ஆக்கத்திறன் கண்காட்சி
பிற்பகல் 4.30 வரை நடைபெறும்.
அனைவரும் வருக
ஆட்சிக்குழு உறுப்பினர்களும்,
ஆசிரியர்கள், பயிற்சியாளர்களும்.
(C/9438)(2.6)

# சதாவதானி சிக்கன கடனுதவி கூ.ச. பொதுக்கூட்டம்

வடமராட்சி,மே 18

மேலைப்புலோலி சதாவதானி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிலைய மண்டபத்தில், நிலையத் தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் செ. இலகுநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி நல்லொழுக்க நிறுவன உப- தலைவர் திருமதி சரஸ்வதி தியாகராஜன், அல்வாய் நக்கீரன் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.கணேசன் ஆகியோர் கலந்து கொள்வர். புதிதாக நிர்வாகத் தெரிவும் இடம் பெறும்.(வ-8)

# பயிற்சி பரீட்சை முடிவுகள் வெளிவந்தன

தென்மராட்சி,மே 18

தென்மராட்சி கல்வி வலயப் பாடாசலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வலய மட்டத்தில் நடத்தப்பட்ட இரண்டாவது பயிற்சிப் பரீட்சையில் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பகுதி I பகுதி II என நடத்தப்பட்ட பயிற்சிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் 117 மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெறக் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.பரீட்சை முடிவுகளின் பிரகாரம் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களான க.சாம்பவி 180 புள்ளிகளையும், இ. தவினுகன் 179 புள்ளிகளையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி வைஷ்ணவி 168 புள்ளிகளையும் பெற்று முதல் மூன்று இடங்களையும் பிடித்துள்ளனர். (வ-9)

**VACANCIES**

We are on the lookout for confident and committed individuals with the necessary qualifications for immediate recruitment

***1. English Lecturer (Full Time / Part Time)***
*The ideal candidate should be competent graduate/trained teachers to teach the subject indicated. Experience in the field of studies at a reputed institution is considered essential. A Degree/Diploma in Education and/or Professional qualification/s will be an added advantage.*

***2. Computer Lecturers & Instructors (Full Time / Part Time)***
*Ideal candidates should be confident and enthusiastic with an internationally recognized IT related Diploma. A Degree/Diploma in Education and/or Professional qualification/s and Previous teaching experience will be an added advantage*

***3. Computer Hardware Technician***
*Ideal candidate should have a suitable hardware and networking qualifications and over two years experience in a similar capacity. Willingness to travel is essential.*

Successful applicants could look forward to a rewarding career, with excellent prospects including relevant training. Please send your complete CV to the following address indicating the position applied for, including names and contact details of two non - related referees.

GATEWAY TECH
Manager / HR
New Gateway Tech
347, Kasthuriyar Road, Jaffna
E - Mail : gatewayjfn@sltnet.lk

**காணி விற்பனைக்கு**
நாவலர் வீதியில் 2¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. கிணறும், நான்கு பக்கமும் மதில்களும் உண்டு.
(36578)(45.6.11)
தொடர்பு:- 077 712 0968

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில் 1½ (ஒன்றரை) பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
(36579)(2.6)
தொடர்பு:- 077 712 0968

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லும்



அமரர் **செல்லையா சுப்பிரமணியம்**

பிறப்பு 08.03.1953

இறப்பு 08.03.2013

கடந்த 08.03.2013 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் செல்லையா சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை சாட்டி வெள்ளைக் கடற்கரை அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெற்று வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (21.05.2013 ) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அனுதாபம் தெரிவித்தும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

வேலணை மேற்கு,
6ஆம் வட்டாரம், வேலணை.

குடும்பத்தினர்.
(37400)(45.6)

# மாற்று வலுவுடையோருக்கு சுயதொழில் உதவித்தொகை

தென்மராட்சி,மே18

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மாற்று ஆற்றல் உடைய 3 பேருக்கு சுயதொழில் உதவித்தொகை மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசரத்தினம் ரவிச்சந்திரன் (நுணாவில் மேற்கு), கதிர்வேலு ரவிச்சந்திரன் (தவசிகுளம் மிருசுவில்), பொன்னன் செல்வராசா (மீசாலை மேற்கு) ஆகிய மூவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா உதவிக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளன.

இந்தக் கொடுப்பனவுக்குரிய பயனாளிகளின் சுயதொழில் விருத்திக்காக அவர்களது வேண்டுகோளுக்கேற்ப ஒருவருக்கு தையல் இயந்திரமும் இருவருக்கு கால்நடை வளர்ப்பும் கொள்வனவு செய்து வழங்கப் படவுள்ளன. (வ-9)

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் இரத்தினம்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் குரும்பைகட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினம் 13.05.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், விசாலாட்சி, சாந்தினிதேவி, சந்திரகுமார், காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் பாலச்சந்திரன் (நந்தன் - சுவிஸ்), உதயகுமார், சாந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் கந்தசாமி, சுலோசனா, கமலேஸ்வரி, மாலதி (சுவிஸ்), நந்தினி, வானதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பொன்னம்மா, காலஞ்சென்றவர்களான மகேந்திரம், நடராசா மற்றும் நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகிர்தா, சுதர்சன், சுயந்தன், சுமணன், சுதாகரன், சுதாயினி, கபிலாகரன், தாரணி, சதீசன், ரமேஸ், தீவிபா, சுரேன், தினேஸ், மயூரி, கண்ணன், மதுசா, மதுரிகா, நிறோஜி, நிறோஜன், விதுசன், வினோதினி, விதுராஜ், அபிராமி, ரஷி, அக்சாயினி ஆகியோரின் பேர்த்தியும், பிரசன்னா, அச்சிகா, தர்வின், சௌமியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்ளுக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மத்தொனி, கரவெட்டி மேற்கு,
கரவெட்டி,
தொ.பே. 077 907 1476,
077 544 4553.

தகவல்:
கந்தசாமி
(மருமகன்)
(35374) (45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதியற்ற நிலையில் வட்டக்கச்சி பொதுச் சந்தை

## சந்தை வர்த்தகர்கள் விசனம்

கிளிநொச்சி, மே 18

கிளிநொச்சி, வட்டக்கச்சி பொதுச் சந்தை திறந்து வைக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்த நிலையிலும் மேற்படி சந்தையின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வர்த்தகர்களிடம் உரிய முறைப்படி கையளிக்கப்படாததால் சந்தை வர்த்தகர்களும், மக்களும் சிரமங்களையும், அசௌகரியங்களையும் எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வட்டக்கச்சி சந்தை அபிவிருத்தி மற்றும் வர்த்தகர்களின் தேவைகள் குறித்த கலந்துரையாடல் கடந்த ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி கரைச்சிப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் வட்டக்கச்சி சந்தையின் புதிய கட்டடத்தில் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் வர்த்தகர்களின் கருத்துக்களும் கேட்டு ஆராயப்பட்டு புதிய மீன் சந்தைக்குரிய இடம் அமைத்தல், சந்தைக்கான பாதுகாப்பு வேலி அமைத்தல், சந்தைக்கு நீர்த்தாங்கி அமைத்து நீர்வசதியை ஏற்படுத்தல், சந்தைக்கு மின்னிணைப்பு ஏற்படுத்தி வழங்கல், உப அலுவலகம் அமைத்தல் போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டு அவற்றை விரைவில் மேற்கொண்டு சந்தையை வர்த்தகர்களிடம் கையளிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டு காலம் கடந்த நிலையிலும் சந்தையில் எவ்வித பணிகளும் ஆரம்பிக்கப்படாது சந்தை வர்த்தகர்கள் பழுதடைந்த கொட்டகைகளினுள் மழை நேரங்களில் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதால் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இந்த நிலையில் வட்டக்கச்சி சந்தையின் நிலை தொடர்பிலும் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் வி.சுவிஸ்கரனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது;

''மேற்படி சந்தை தொடர்பில் எமது சபையிலும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அந்த வர்த்தகர்களைச் சந்தித்து விரைவில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி கையளிக்கவுள்ளதாக கூறப்பட்ட நிலையிலும் இன்னமும் மேற்படி சந்தையின் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பது உண்மைதான்.

தீர்மானங்களில் நிறைவேற்றப்பட்ட குறித்த வேலைகளை செய்வதில் பிரதேச சபை அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மையும் அசமந்தப் போக்குமே இதற்குக் காரணம்'' என்று கூறினார்.

கரைச்சிப் பிரதேச சபையின் கீழ் உள்ள வட்டக்கச்சிச் சந்தை கட்டித் திறக்கப்பட்டு பல மாதங்கள் கடந்து செல்கின்ற நிலையில் உரிய வசதிகளைச் செய்து வர்த்தகர்களிடம் கையளிக்கப்படாதமையால் சிரமங்களையும் அசௌகரியங்களையும் எதிர்நோக்குபவர்கள் வர்த்தகர்களும், இந்தப் பகுதி வாழ் மக்களாகிய நுகர்வோருமே தான்.

எனவே அவர்கள் இதனால் விசனமும் கவலையும் தெரிவிக்கின்றார்கள். (வ-426)

## அக்கராயன் ஆரம்ப வித்தி. புதிய கட்டடத்துக்கு விரைவில்

அக்கராயன், மே 18

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் தனது புதிய கட்டடத்தில் விரைவில் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளது.

அக்கராயன் மகாவித்தியாலயம் 1000 பாடசாலை திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் தனிப் பாடசாலையாக இயங்கத் தொடங்கி இருந்தது.

இந்தப் பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட காணியில் ''சேவா லங்கா'' நிறுவனத்தால் அமைக்கப்பட்ட நிரந்தரக் கட்டடம் ஒன்றும் ''யுனிசெவ்'' நிறுவனத்தால் அமைக்கப்பட்ட தற்காலிக கொட்டகைகளிலும் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் விரைவில் இயங்கவுள்ளது.

171 மாணவர்களைக் கொண்ட இந்தப் பாடசாலையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டிய நிலையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உதவி நிறுவனங்கள், கொடை வள்ளல்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள் என சகலரிடமும் உதவியை நாடி உள்ளது.

அக்கராயன் பகுதியில் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் உருவாக்கம் ஆரம்பக் கல்வி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருக்கும் என்று பல்வேறு தரப்பினர் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம-18)



வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் இடம் பெற்ற புத்தாண்டு விழாவின் போது பெற்றோர்களை மதித்தல் நிகழ்வில் கலந்து கொண்ட பெற்றோரிடம் பிள்ளைகள் ஆசி பெறுகின்றனர். (ஒ-421)

## செஞ்சிலுவை சங்க தினத்தையொட்டி தண்ணீர்ப் பந்தல்

அக்கராயன், மே 18

உலக செஞ்சிலுவை சங்க தினத்தை முன்னிட்டு செஞ்சிலுவைச்சங்க வவுனியாக் கிளையினரால் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

கடந்த 7 ஆம் திகதி இடம் பெற்ற உலக செஞ்சிலுவை சங்க தினத்தையொட்டி இலங்கையில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம் மாவட்ட ரீதியாக உள்ள கிளை களில் பல்வேறு நிகழ்வுகளை நடத்தியுள்ளது.

இதன் ஒரு கட்டமாக வவுனியா கிளையினரால் மன்னார் வீதியில் விசேட தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டு தாக சாந்தி நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

பிற்பகல் ஆரம்பமான இந்த நிகழ்வு மாலை வரை இடம் பெற்றுள்ளது. (வ-402)

# வவுனியாவில் வெட்டப்படும் பழைமை வாய்ந்த மரங்கள்

## வீதி அபிவிருத்திக்காக



வவுனியா பிரதான வீதியில் தறிக்கப்பட்டு துண்டாடப்பட்டு கிடக்கும் மரங்கள்.

வவுனியா, மே 18

வீதி அபிவிருத்திக்காக பழைமை வாய்ந்த மரங்கள் பல வவுனியாவில் வெட்டி வீழ்த்தப்படுகின்றன.

தற்போது வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதி, கண்டிவீதி, குருமன்காடு, மன்னார் வீதிகளில் ஏராளமான மரங்கள் இவ்விதம் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன.

பழைமைவாய்ந்த நிழல்தரும் மரங்களுடன் வரலாற்று சிறப்பு வாய்ந்த இடமாகவும் வவுனியா விளங்கி வந்தது.

வவுனியாவில் இன்னமும் பல பிரதான வீதிகளில் பஸ்தரிப்பிடங்கள் அமைக்கப்பட வேண்டியுள்ள நிலையில், சில இடங்களில் பழைமை வாய்ந்த மரங்களுக்கு கீழ் பல பயணிகள் பஸ்ஸுக்காகக் காத்திருக்க நேர்கிறது. இவ்வாறு மரங்கள் தறித்து வீழ்த் தப்படுவதால் கோடை காலத்தில் கடும் வெய்யிலின் மத்தியில் பஸ்ஸுக்காகக் காத்திருக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு இருப்பதுடன் வயோதிபர்கள், நோயாளிகள் பலர் இளைப்பாறிச் செல்வதற்கு உரிய மர நிழல் இன்றி அவஸ் தைப்படுகின்றனர்.

இந்த மர அழிப்புக்கு எதிராக பல்வேறு தரப்பிலிருந்து எதிர்ப்புக் குரல்கள் வவுனியாவில் எழுகின்றன.

காடுகளில் மரம் தறித்து கொண்டு வருபவர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டு வருகிறது. ஆனால் வீதி அபிவிருத்தி என்ற பெயரில் நூற்றுக் கணக்கான மரங்கள் தறிக்கப்பட்டமை தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் [illegible] (வ-422)

## வவுனியா பாடசாலைகளில் உணவுப் பொருள்கள் திருட்டு

வவுனியா,மே 18

வவுனியாவில் உள்ள சில பாடசாலைகளில் உலக உணவுத் திட்ட உணவுப் பொருள்கள் திருட்டு போயுள்ளதாக கல்வி அதிகாரிகளுக்கு முறையிடப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் மதினா வித்தியாலயம், பிறமண்டு வித்தியாலயம் ஆகியவற்றில் எண்ணெய், மீன்ரின் உட்பட பெறுமதியான உணவுப் பொருள்கள் திருட்டுபோயுள்ளன.

குறித்த பாடசாலைகள் பொலிஸ், இராணுவ கண்காணிப்பு பிரதேசத்தில் இருந்த போதும் பொருள்கள் திருட்டுபோயுள்ளமையால் கல்வி அதிகாரிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா பொலிஸாரிடமும் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர், வவுனியா கோட்டக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், அரச அதிபர், உலக உணவுத்திட்ட கிளிநொச்சி இணைப்பாளர் ஆகியோரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.




இதேவேளை மிக அண்மையில் [illegible] அமைந்துள்ள பிறிதொரு பாடசாலையில் இவ்வாறு திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்று அதில் சம்பந்தப்பட்டோர் பொலிஸாரிடம் சிக்கியமையும் தெரிந்ததொன்றே.

இது தொடர்பில் வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளரால் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கும், ஏனைய பாடசாலை அதிபர்களுக்கும் பாடசாலைகளில் உலக உணவுத்திட்ட பொருள்கள் திருட்டு போனால் அதற்கு பாடசாலை அதிபரே பொறுப்பு கூறவேண்டும். உரிய பாதுகாப்பு ஒழுங்குகளை பாடசாலை நிர்வாகமே மேற்கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் இவ்வாறு திருட்டுக்கள் இடம் பெற்றால் சம்பந்தப்பட்ட பாடசாலைக்கான உலக உணவு விநியோகம் இடை நிறுத்தப்படும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியாவில் ஏற்கனவே பால் விநியோகம் தொடர்பில் பாடசாலை களில் மோசடிகள் இடம்பெற்ற தாகத் தெரிவித்து அது இடை நிறுத்தப்பட்டமையால் பாட சாலை மாணவர்கள் பலர் பாதிக்கப்பட்டு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-402)

## வான் பகுதி சேதமாகிறது டிப்பர்களின் பாவனையால்

அக்கராயன், மே 18

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலிருந்து பூநகரிக்கு நாள்தோறும் தொடர்ச்சியாக டிப்பர்களில் கிரவல் மண் எடுத்துச் செல்லப்படுவதன் காரணமாக அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டிய குளம் ஆகிய குளங்களின் வான் பகுதிக் கட்டுமானங்கள் சேதமடைந்து வருகின்றன.

மீள் குடியேற்றம் நடைபெற்று மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் இந்த இரு குளங்களும் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பூநகரிக்கு கிரவல் மண் நாள்தோறும் எடுத்துச் செல்லப்படு வதன் காரணமாக துணுக்காயில் இருந்து அக்கராயன் பூநகரி வரையான பிரதான வீதி குன்றும் குழியுமாக மாறி வருகிறது. இதனால் வீதிகளில் மக்கள் பயணிப்பதில் பெரும் இடர்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஏற்கனவே போக்குவரத்து வசதிகள் அற்ற நிலையில் உள்ள இந்தக் கிராமங்களின் முக்கிய வீதிகளால் தொடர்ச்சியாக டிப்பர்கள் பயணிப்பதன் காரணமாக பெரும் குழிகள் ஏற்பட்டு வருகின்றன என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?

**மேடர்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**இடபர்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மிதுனர்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**கடகர்:** சோர்வு, களைப்பு வந்து நீங்கும். வேலைச்சுமை அதிகரிக்கும். அடுத்தவர்கள் மனம் காயப்படும் படி பேசாதீர்கள். பண விடயத்தில் கட்டுப்பாடாக இருங்கள். உத்தியோகத்தில் கூடுதல் நேரம் வேலை பார்க்க வேண்டி வரும்.

**சிங்கர்:** எளிதாக முடிய வேண்டிய சில காரியங்களைக்கூட போராடி முடிக்க வேண்டி வரும். உறவினர், நண்பர்களால் பிரச்சினைகள் ஏற்படும். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் மேலதிகாரியை அனுசரித்துப் போங்கள்.

**கன்னி:** பேச்சில் கம்பீரம் பிறக்கும்.. முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**நாளை**

வைகாசி-05 ஞாயிற்றுக்கிழமை 19.05.2013
திதி: நவமி மா. 06.49 வரை
நட்சத்திரம்: பூரம் பி.இ. 02.09 வரை
சுபநேரம்: 08.52 - 10.22 வரை
இராகுகாலம்: 04.22 - 05.52 வரை

**துலாமர்:** குடும்பத்தினரின் எண்ணங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்று நினைப்பீர்கள். பிரார்த்தனைகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**விருச்சிகர்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி கிட்டும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள்.

**தனுசு:** சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லையென்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை வந்து நீங்கும்.

**மகரர்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். சோம்பல், உடல் அசதி, நீங்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**கும்பர்:** ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். உடன் பிறந்தவர்களுடன் இருந்து வந்த மனக் கசப்புகள் நீங்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும்.

**மீனர்:** பணம் தேவையான அளவு இருக்கும். கடன் பிரச்சினைகள் தீரும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 4 | 1 | | 6 | | 2 |
| | | 7 | 6 | | 8 | | | 1 |
| | | 2 | 9 | | 5 | | | |
| 6 | 1 | 9 | | | | 3 | | |
| 2 | | | 1 | | 6 | | | 9 |
| | | 5 | | | | 1 | 6 | 4 |
| | | | 2 | | 1 | 7 | | |
| 4 | | | 8 | | 3 | 9 | | |
| 8 | | 6 | | 4 | 9 | | | 3 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 9 | 8 | 4 | 1 | 7 | 6 | 3 | 2 |
| 3 | 4 | 7 | 6 | 2 | 8 | 5 | 9 | 1 |
| 1 | 6 | 2 | 9 | 3 | 5 | 4 | 8 | 7 |
| 6 | 1 | 9 | 7 | 8 | 4 | 3 | 2 | 5 |
| 2 | 3 | 4 | 1 | 5 | 6 | 8 | 7 | 9 |
| 7 | 8 | 5 | 3 | 9 | 2 | 1 | 6 | 4 |
| 9 | 5 | 3 | 2 | 6 | 1 | 7 | 4 | 8 |
| 4 | 2 | 1 | 8 | 7 | 3 | 9 | 5 | 6 |
| 8 | 7 | 6 | 5 | 4 | 9 | 2 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


**பணியாள்கள் தேவை**

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18–55 வயது வரையான ஆண்கள் தேவை.
தொடர்பு: 077 3033 803
(35179) (6.11)

**வேலையாள்கள் தேவை**

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 18–55 வயது வரையான ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.
தொடர்பு: 077 303 2004 அனுராதபுரம்.

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் சுத்தம் செய்யப்பட்டு 1 Kg 450/= மட்டும்.
விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
(37374)(6.11)

**தேவை**

25000/= - 28000/= சம்பளத்துக்கு PVC தயாரிப்பு கம்பனியில் வேலைவாய்புக்கு 18-50 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
தொடர்புகளுக்கு:
0776289655
(35181) (10.6)

**விற்பனைக்கு**

குழாய் கிணறு அடிக்கும் இயந்திரங்கள் Drilling rig 03 விற்பனைக்கு உண்டு. ஒன்று லொறியுடன் இணைக்கப்பட்டுள்ளது. மற்றையவை இரண்டும் Portable
தொடர்பு: 077 959 1425
(37303)(5.6)


# 7 ஆம் ஆண்டு நினைவு

மலர்வு 21.01.1977 — உதிர்வு 05.05.2006

## கனகரத்தினம் ஜெயசீலன்

திதி: 18.05.2013



என் அருமை மகனே சீலனே
அம்மா என்று என்னுடன் அன்பாய் பேசிடுவாய்
நான் துன்பமுறும் வேளை துயரதனைப் போக்கிடுவாய்
பாசத்தின் உறைவிடமே பண்பின் சிகரமே!
புன்னகையின் திருவுருவே!
என் உயிரினில் கலந்த உறவே!
உன் அம்மாவை ஏங்க விட்டு வானகம் சென்றதேனோ
படியும் பனியின் பொழுதகன்று பாரில் உள்ளோர் எழு முன்னர்
விடியும் பொழுதில் கை தவழும் வெள்ளி நாத வித்தகனே!
இடியும் ஒலியும் ஒன்றிணைந்து இருந்த அந்த நாள் பொழுதில்
முடியும் படியாய் ஜெயசீலன்- உன் மூச்சகற்றிப் போயினையோ?

என்றும் உன் நினைவுகளுடன்
க.விராங்கனை (தாய்)

இல.12, சேவியர் கடைச் சந்தி, ஆனந்தநகர். (35121) (6.11)

# 4 ஆம் ஆண்டு நினைவுகள்



தோற்றம் 17 ✩ 07 ✩ 1950
மறைவு 18 ✩ 05 ✩ 2009

## அமரர் சண்முகராசா நல்லநாதன்

(சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்)

எங்கள் அன்புத் தெய்வமே மண்ணைவிட்டு அகன்று
ஆண்டுகள் நான்கு கடந்தாலும் எங்கள் நெஞ்சினில்
உங்கள் நினைவுகள் நிதம் நிதம் வந்து
எங்கள் வாழ்வை வழிநடத்துகிறது ஐயா
எங்களை வாழ்வாங்கு வாழவைக்க வேண்டும் என்ற
உங்களது இலட்சியம் நீங்கள் இல்லாவிட்டாலும்
எங்களது செயல்களில் தெரிகிறது ஐயா
உங்களுடன் வாழ்ந்த கால நினைவுகள்
என்றும் எங்கள் கண்களில் கண்ணீரைச் சொரிய வைக்கிறது
உருவமாக எங்களுடன் இல்லாவிட்டாலும்
மானசீகமாகக் கூட இருப்பதாகவே நினைத்து
வாழ்க்கையின் நாள்களை நகர்த்துகிறோம்
என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழ்கின்றோம்.

என்றும் மறவா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
மருதங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(36573)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திகதி மாற்றம்

வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக இன்று (18.05.2013) தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவிருந்த இன்னிசை கானம் நிகழ்வு எதிர்வரும் 01.06.2013 சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகம்

## பணி நயப்பு பாராட்டு விழா



**பூவிலிங்கம் தியாகலிங்கம்**
S.L.T.S.-I,BED, SPC.Tri.sc

அவர்கள் இன்று (18.05.2013) சனிக்கிழமை தனது ஆசிரியர் சேவையில் மணிவிழாவையும், எமது பாடசாலையில் வெள்ளி விழாவையும் கண்டு ஓய்வு பெறும் ஆசிரியர் அவர்கள் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.ம.வி.

**வேலை விவரம்**

01. தி/ [illegible] வித்தியாலயம் -02.09.1974 - 19.03.1978
02. தி/ அல் அமீன் மகாவித்தியாலயம் - 20.03.1978 - 11.01.1981
03. யா/ பலாலி ஆசிரியர் கல்லூரி- 12.01.1981 - 30.06.1982
04. கி/ கண்டாவளை அ.த.க.பா- 01.07.1982 - 30.08.1982
05. யா/ [illegible] நாகேஸ்வரி வித்தியாலயம் - 01.09.1982 - 14.09.1987
06. யா/பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க.ம.வி.- 15.09.1987 - 30.06.1991

*பகுதித் தலைவர் உப அதிபர் சேவை,*
*01.07.1991 - 07.01.2002 பகுதித்தலைவர்*
*08.01.2002 - 14.09.2007 உப அதிபர்*
*15.09.2007 - 18.05.2013 பகுதித் தலைவர்*

Best Wishes

# சமய சந்நிதிகளில்

வடமராட்சி, மே 18

துன்னாலை வடக்கு அல்லை யம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகோயில் வருடாந்தப் பெருந் திருவிழா 15 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஒ-8)

★ ★ ★

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய பெருந் திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வியா ழக் கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திரு விழாவும் நடைபெறும்.

பெருந்திருவிழா பிரதம குருவாக ஆலய குரு பிரம்மஸ்ரீ ரா.ரெங்கசாமிக் குருக்கள் பணியாற்றி பெருந்திருவிழாவை நிறைவேற்றி வைப்பார். (வ-8)

★ ★ ★

சுழிபுரம் பறாளை கந்தசாமி ஆலய பெருந் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

★ ★ ★

தென்மராட்சி,மே 18

மந்துவில் மேற்கு சேலம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

## காணி விற்பனைக்கு

வளாக வீதி, திருநெல்வேலியில் மக்கள் வங்கிக்கு அண்மையில் 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 54 68 239

## விற்பனைக்கு

டாஸ் கவுண்ட் (Dash Hound) 45 நாட்கள் நிரம்பிய நாய்க்குட்டிகளும் முயல் குட்டிகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 7172039, 071 8565375

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
07
08
1929



மறைவு
19
04
2013

கடந்த 19-04-2013 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப ஒளி விளக்கு

**அமரர் கமலாம்பிகை தெய்வேந்திரம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

அன்னை இல்லம்
புது வீதி, ஆறுகால்மடம்,
யாழ்ப்பாணம்.

தெ. நகுலேஸ்வரன்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் ஞாபகார்த்த ஆராதனை அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில்
11
*
10
*
1920

விண்ணில்
19
*
04
*
2013



அமரர்

**றுத் மனோன்மணி சோமசுந்தரம்**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்து எம் அன்பு வழி காட்டியாய் இருந்து ஆண்டவர் அடி சேர்ந்த அமரர் றுத் மனோன் மணி சோமசுந்தரம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியர்கள்,மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், அஞ்சலி உரையாற்றியவர்கள், தொலைபேசியூடாக, இணையமூடாக அனுதாபம் தெரிவித்தவர்கள் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரது 31ஆம் நாள் ஞாபகார்த்த ஆராதனை நிகழ்வுகள் நாளை(19.05.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் இந்த ஆராதனை நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

லவ்லேன், உடுவில், சுன்னாகம். (36581)(5.6) குடும்பத்தினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை உயர் பட்டப்படிப்புகள் பீடம்

## புதிய அனுமதிகள்

முதுகலைமாணி – சைவசித்தாந்தம் 2013/14 (அணி IV)
முதுகலைமாணி – தமிழ் 2013/14 (அணி IV)
நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா 2013/14 (அணி III)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1.முதுகலைமாணி – சைவசித்தாந்தம்
2.முதுகலைமாணி – தமிழ்

அனுமதிக்குரிய தகைமைகள்
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏதாவது ஒரு கற்கைநெறியில் பட்டம்
குறிப்பு:- பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடிய வேறு தகைமைகளும் அனுமதிக்குப் பரிசீலிக்கப்படலாம்.

கற்கை நெறிக் காலம்: ஒரு வருடம்
மொழி மூலம் : தமிழ்
தெரிவு முறைமை: நேர்முகத்தேர்வு
கற்கை நெறிக்கட்டணம் : 75000/-

3. நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா
அனுமதிக்குரிய தகைமைகள்

a) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏதாவது ஒரு கற்கைநெறியில் பட்டம்
b) ஆங்கிலத்தில் திருப்திகரமாக தொழில் செய்வதற்கான அறிவு
c) கணினிப் பிரயோகத்தில் திருப்திகரமான அறிவு (முன்னுரிமை)

தற்போது நூலக வேலையுடன் தொடர்புடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கற்கை நெறிக் காலம்: ஒரு வருடம்
மொழி மூலம் : தமிழ்
தெரிவு முறைமை: நேர்முகத்தேர்வு
கற்கை நெறிக்கட்டணம் : 60000/-
விண்ணப்பப் படிவக் கட்டணம்: 500/-

*குறிப்பு:- மேற்படி ஒவ்வொரு கற்கை நெறிக்கும் போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்தில் மட்டுமே அந்தந்தக் கற்கைநெறி மேற்படி 2013/14 கல்வியாண்டில் நடத்தப்படும்.

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் 500/- பணத்தை செலுத்தி விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்ப படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட 23 x 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து (**கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கற்கை நெறியின் பெயரினைக் குறிப்பிட்டு**) உதவிப்பதிவாளர் உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் **21.06.2013** ஆம் திகதிக்குமுன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர். (D/9491)(2.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விடைத்தாள் திருத்தும் பணி

யாழ்ப்பாணம்,மே 18

யாழ். வலய பாடசாலைகளினது மாகாண மட்ட தரம் 5 புலமைப்பரிசில் மாதிரிப்பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி இன்று சனிக்கிழமை ஏற்கனவே அறிவித்த இடங்களில் நடைபெறும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (ஒ-5)


**The Vembadi Girls' High School Old Girls' Association**

The Annual General Meeting of the OGA will be held on 25th May, 2013, Saturday at 3 pm. All the old girls of the school are requested to grace the function.

**Executive Committee**

(36592) (10.6)


# மன்னாரில் இரவு வேளை பயணிகளை நடுவீதியில் தவிக்க விட்ட பஸ் நடத்துநர்

மன்னார், மே 18

தோட்டவெளியில் இருந்து மன்னார் பஸ் நிலையம் நோக்கி பயணித்த இலங்கை அரசு போக்குவரத்து சேவைக்குச் சொந்தமான பஸ் ஒன்று பயணிகளை நடுவீதியில் இறக்கி விட்டு டிப்போவுக்குச் சென்ற சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பயணிகள் தெரிவித்ததாவது:-

மன்னார் பஸ் நிலையத்தில் இருந்து தோட்டவெளி நோக்கி மாலை 6.30 மணிக்கு புறப்படும் பஸ் மாலை 7 மணியளவில் தோட்டவெளி கிராமத்தைச் சென்றடைந்து மீண்டும் அங்கிருந்து மன்னார் பஸ் நிலையத்தை வந்தடைவது வழமை.

ஆனால் கடந்த புதன்கிழமை இரவு 7 மணியளவில் சுமார் 15 பயணிகளுடன் தோட்டவெளி கிராமத்தில் இருந்து மன்னார் பஸ் நிலையம் நோக்கி பயணித்த அரச பஸ் தாராபுரம் வீதியூடாக வந்து பொது விளையாட்டு மைதான வீதியூடாக சென்று மன்னார் பொது வைத்தியசாலை வீதியை அடைந்தது.

பஸ்ஸில் இருந்த சகல பயணிகளையும் பின்னர் குறித்த பஸ்ஸின் நடத்துநரும், சாரதியும் இணைந்து இறக்கிவிட்டு குறித்த பஸ்ஸை டிப்போவுக்கு எடுத்துச் சென்றனர்.

குறித்த பஸ் மன்னார் பஸ் நிலையத்துக்குச் சென்று பயணிகளை இறக்கி விட்டுச் செல்வதே வழமை.

இந்த நிலையில் குறித்த பயணிகளை இரவு நேரத்தில் நடுவீதியில் இறக்கி விட்டுச் சென்றமையால் ஆண்கள்,



பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என அனைவரும் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்தனர்.

வைத்தியசாலை சந்தியில் இருந்து குறித்த பயணிகள் நடந்தும் தனியார் வாகனங்களிலும் பயணித்தே மன்னார் பஸ் நிலையத்தைச் சென்றடைந்ததாகவும்,

தோட்ட வெளியில் இருந்து மன்னார் பஸ் நிலையம் வரை கட்டணமாக 30 ரூபா அறவிடப்பட்ட போதும் தம்மை இடைநடுவே இறக்கிவிட்டுச் சென்றதாகவும்,

இதேவேளை மாலை 7 மணிக்கு தோட்டவெளியில் இருந்து மன்னார் பஸ் நிலையம் நோக்கி பயணிக்கும் குறித்த பஸ் கடந்த 3 தினங்களுக்கு மேலாக உரிய பாதையில் செல்வதைத் தவிர்த்து குறுக்கு வீதியூடாகச் சென்று பயணிகளை நடு வீதியில் இறக்கி விட்டு டிப்போவுக்குச் சென்று விடுகிறது என்றும் பாதிக்கப்பட்ட பயணி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக விசாரித்தறிய அரச போக்குவரத்துச் சேவையின் மன்னார் சாலை முகாமையாளரைத் தொடர்பு கொண்ட போதும் தொடர்பை ஏற் படுத்திக்கொள்ள முடியவில்லை. (வ-12)


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்**

தோற்றம் 02.06.1940

மறைவு 29.05.2012



**திருமதி பஞ்சலிங்கம் விக்னேஸ்வரி**

**திதி: அட்டமி**

இன்று (18.05.2013) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காரைக்கால் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில். (36591)(2.6)

குடும்பத்தினர்.


## புனரமைப்புக்கு தயார் நிலையில் யாழ். 5 ஆம் குறுக்கு வீதி

குருநகர், மே 18

யாழ்.நகரில் ஐந்தாம் குறுக்குவீதி யாழ்.மாநகரசபையால் திருத்தியமைக்கப்படவுள்ளது.

வீதியின் ஓரங்களில் கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. வீதியோரங்களில் வளர்ந்திருந்த புற்கள், செடிகள் யாழ். மாநகரசபைத் தொழிலாளர்களால் வெட்டப்பட்டு துப்புரவு செய்யப்படுகின்றன.

சில தினங்களில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகி விடும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)

## யாழ். குடாநாட்டில் இனங்காணப்பட்ட 440 காச நோயாளர்

குருநகர், மே 18

கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் 440 காச நோயாளிகள் இனங்காணப்பட்டனர் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் திரட்டப்பட்ட புள்ளி விவரம் கூறுகிறது.

இந்த நோயாளிகளில் 11 பேர் சிகிச்சை பயனளிக்காமல் இறந்துள்ளனர் என்று அந்த புள்ளி விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-51)

## வடமாகாண விவசாய போதனாசிரியருக்கான ஒன்றுகூடல் இன்று

யாழ்ப்பாணம், மே 18

வடமாகாணத்தின் விவசாய போதனாசிரியர்களுக்கான ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-17)


# மரண அறிவித்தல்



**சவிரியான் அலெக்சாண்டர்**

(புறஞ்சி ரெட்ணசிங்கம்)

குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவிரியான் அலெச்சாண்டர் 14.05.2013 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புறஞ்சி - வரவணிக்காமேரி மெற்றலின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கறாணியின் பாசமிகு கணவரும், றேமன் ஜோசப், மேரி கலிஸ்ரா, அன்ரனி றொபின்சன், யோண் நிக்சன், அன்ரனி டியூறஸ்றிச்சட் பேக்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மலக்கியாஸ் ஜேம்ஸ், ஜெனிற்றா, செறின் றெக்சலா, அஞ்சனா, ரேக்கா ஆகியோரின் மாமனும், றாணி, இந்திரன், றதி, எட்மன், றிச்மன், யசிந்தா, வவி, அருட்தந்தை இயூஜின் பிரான்சிஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிலேந்திரன், றாணி, குணம், பொன்றோஸ், ஜெயந்தி, காலஞ்சென்ற ருவைனர் மற்றும் அல்பிறட் லூர்த்தம்மா, டோனாஸ், காலஞ்சென்ற பாக்கிய நாதர் மற்றும் மகேந்திரன், பட்டு, ராசன், றாணி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான வேதநாயகம், கிறேஸ்மணி மற்றும் குணம், இளவரசு, சத்தியபவானி, சின்னப்பிள்ளை, சந்திரகுமார் ஆகியோரின் சகலனும், குயின்ரஸ், றாஜ் மோகன், பிறேமினி, சுரேன், றதனி ஜெனிபர், ஸ்ரியான், கரீசன், எர்வின், இம்மானுவேல், நிக்சலா, ஆஸ்லி, அந்திரியா, மிஷேல், கிருஷிக்கா, பெனிஷா, தெபோறா, ஏனோக் ஆகியோ ரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.05.2013) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இல. 6, கொண்டடி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (36594) (45.6)

தகவல்:
குடும்பத்தினர்.



# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி




அமரர் **கணேசையா ஜெனரட்ணசிங்கம்**

(யாழ். பாடசாலை வைத்திய அதிகாரி பணிமனை, பணியாளர்)

திதி: 18.05.2013

ஆண்டிரண்டு ஆனதுவோ துணையாளன் குரல் கேட்டு
நீண்டெழும் மாதுயரம் நாளெல்லாம் வாட்டிடுதே
கண்ணெனக் காத்து அன்பினால் அரவணைத்தாய்
பெண்ணவள் நானும் மகன் ராம்ஜி குடும்பமும்
துடுப்பிழந்த படகென துணைதேடி தவிக்கின்றோம்
இமைமூடும் வேளையிலும் உம் இன்முகந்தான் தோணுதையா
உமையுருக்கி நாம்வாழ ஒளிதந்த தெய்வமே
எம்பெருமான் திருவடியில் சாந்திபெற வேண்டுகிறோம்.

31, சென் மேரிஸ்
முதலாம் ஒழுங்கை,
கொழும்புத்துறை.

(36593)(20,6)

திருமதி ஜெனரட்ணசிங்கம்
ராம்ஜி (மகன்)
வினோசிகா (மருமகள்)
ஜெனுஸ்ரிக்கா (பேர்த்தி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் விநியோகத்தில் தடை

யாழ்ப்பாணம், மே 18

வீதி அகலிப்புப் பணிகளுக்காகவும் மின் மார்க்கங்களின் புனரமைப்புப் பணிகளுக்காகவும் சில பகுதிகளில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.- இன்று சனிக்கிழமை சுன்னாகம், மல்லாகம், மாவிட்டபுரம், கீரிமலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, தட்டாதெரு தொடக்கம் முட்டாஸ் கடைச் சந்தி வரையான பிரதேசம், மனோகரா பிரதேசம், புன்னாலைக்கட்டுவன், புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, வடமராட்சிப் பிரதேசத்தின் வல்லை முதல் மந்திகை வரையான பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும்- நாளை ஞாயிற்றுக்கிழமை பரமேஸ்வராச் சந்தி, பலாலி வீதி, விஞ்ஞானபீடப் பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வீதி, வைமன் வீதி, கோவில் வீதி, றக்கா வீதி, இராசாவின் தோட்டம், பழைய பூங்கா, அத்தியடி புதுவீதி, சோமசுந்தரம் அவனியூ முலவைச் சந்தி, ஆஸ்பத்திரி வீதி, கச்சேரி, நல்லூர் வீதி, கச்சேரியடி, புங்கன்குளம், ஈச்சமோட்டை, பாஷையூர், குருநகர், கந்தர் மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படி பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமானாறு வீதிப் பிரதேசம், குஞ்சர் கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டமானாறு வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில் ஆகிய இடங்களிலும்- எதிர்வரும் புதன்கிழமை அச்சுவேலி, இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமானாறு வீதிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ)




திருமதி **சாந்தநாயகி நகுலேஸ்வரன்**
அதிபர் S.L.P.S. 2 II (B.A, Dip in Edu, M.Ed)
யா/நுணாவில் மேற்கு அ.த.க பாடசாலை

35 ஆண்டு கால ஆசிரிய சேவையில் எமது பாடசாலையில் ஆசிரியராக 12 வருடமும், அதிபராக 12 வருடமும் சேவையாற்றி இன்று (18.05.2013) இல் ஓய்வு பெறுகின்ற எமது அதிபர் திருமதி சாந்தநாயகி நகுலேஸ்வரன் அவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று தனது குடும்பத்தினருடன் நீடூழி வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
பாடசாலை சமூகம்
யா/நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை
சாவகச்சேரி.
(35030)(10,6)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03.01.1958 — மறைவு 28.05.2012

அமரர்
**தங்கத்துரை வரதராஜன்**
(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: சப்தமி (18.05.2013)
அன்னாரது ஆத்மா சாந்தியடைவதாக

கிராமக் கோட்டடி,
புலோலி.
குடும்பத்தினர்.
(36602)(10,6)

## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித்தருகின்றோம். **அழையுங்கள்** - 077 908 6737
GUNAA BEST PC
52, HOSPITAL ROAD, JAFFNA.
இப்பொழுது கணினிகள் Quick Service முறை GUNAA BEST PC இல் திருத்திக்கொடுக்கப்படும். (36600) (45.6)

## வான் விற்பனைக்கு

252 - XXXX தொடரிலக்கமுடைய டொல்பின் வான் விற்பனைக்குண்டு. (Dual A/C, Alloy Wheel, White Colour கொண்ட Model)
தொடர்புகளுக்கு: இல.06, கற்பக விநாயகர் லேன், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8604, 075 650 8660.
(36598) (45.6)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் பழைய பூங்கா வீதியில் மூன்று அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. தொ.பே. 077 376 2771
(சி/9097) (45.6)

## வீடு வளவு விற்பனைக்கு

தண்ணீர் தொட்டி வீதி, மூளாய் தெற்கு சுழிபுரத்தில் 14 ¼ பரப்பு வீடு வளவு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ளவும்:
T.P: 021 4912180 (37244) (10,6)

## கடை வாடகைக்கு

NO.124D, பலாலி வீதியில் (இலுப்பையடிச் சந்திக்கும் அம்மன் வீதிக்கும் இடையில்) அமைந்துள்ள கடைத்தொகுதியில் ஒரு கடை வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு: 077 5819704

## பொது அறிவித்தல்

**சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை**

பொதுக் கூட்டத்துக்கும்,
புதிய நிர்வாக சபைத் தெரிவுக்குமான அழைப்பு -2013

இடம் : சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மண்டபம்
காலம் : 2013.06.01 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9.30 மணி
தலைவர் : யோ.ஜெயக்குமார் அவர்கள்

பிரேரணைகள், ஆலோசனைகள் அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் 2013.05.25 ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, சாவகச்சேரி என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

பொதுச்சபை உறுப்பினர்கள், நலன்விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யோ.ஜெயக்குமார்,
தலைவர்
ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை,
சாவகச்சேரி.

Dr.செ.அம்பிகைபாகன்
செயலாளர்.
(C/9283)(10.6)

# திருவிழிப்பு ஆராதனை


கொழும்புத்துறை,மே 18

தூய ஆவியின் பெருவிழாவையொட்டி திருவிழிப்பு ஆராதனை யாழ்.புனித மாட்டீனார் குருமட மைதானத்தில் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிமுதல் மறுநாள் அதிகாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

யாழ்.மறைமாவட்ட இறை தியானக் குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தத் திருவிழிப்பு ஆராதனையில் இன்று இரவு 7 மணிக்கு திருவிழிப்புத் திருப்பலியும், அதிகாலை 3 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றத்துடன் தூயஆவியார் அருட்பொழிவு வேண்டி அபிஷேக ஆராதனையும் நடைபெறும். அதிகாலை 4 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் தூய ஆவியார் பெருவிழா கூட்டுத் திருப்பலி இடம்பெறும். (ந-135)

## 31ஆம் நாள் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்: 13 * 11 * 1952



இறைவன் அடியில்: 18 * 04 * 2013

**அமரர் செல்லத்துரை பரமலிங்கம்**
(ஸ்ரீ விநாயகர் வெதுப்பக உரிமையாளர்)

கடந்த 18-04-2013 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் செல்லத்துரை பரமலிங்கம் அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபச் செய்திகள் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் அச்சிட்டு வழங்கியவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 15-05-2013 புதன்கிழமை இரவு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றதோடு, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18-05-2013) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.
(C/9453)(10,6)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**சண்முகராசா இராசரெத்தினம்**
(முகாமையாளர், சாரங்கா நகைமாடம்)

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகராசா இராசரெத்தினம் 14.05.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகராசா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவஞானவதியின் பாசமிகு கணவரும், ஜனார்த்தனி, ஜனகோபன், ஜலதாரிணி, ஜெயகபில் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலட்சுமி, இராசலட்சுமி, மனோகரன், காலஞ்சென்ற மனோரஞ்சிதம் மற்றும் ஈஸ்வரி, தையல்நாயகி, ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரன், இராஜேந்திரா மற்றும் பாலேஸ்வரன், கணாதீபன், சிவகுமாரன், சிவானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**இ.சிவஞானவதி (மனைவி),**
**பிள்ளைகள்.**

185, (14/3) [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/9456) (45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்புப்பட்டி அணிந்து இன்று மக்களுடன் சந்திப்பு

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு தினத்தை முன்னிட்டு பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் பொ.ஸ்ரீஸ்கந்தராசா இன்று கறுப்புப்பட்டி அணிந்து பாதிப்படைந்த மக்களை நேரடியாகச் சந்தித்து ஆறுதல் கூறுவார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களில் நூற்றுக்கணக்கான மக்கள் பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். அந்த வகையில் தமது உறவுகளை இழந்தவர்கள், காணாமல் போனவர்கள் என இன்னும் கண்ணீர் வடிக்கும் குடும்பங்களும் உள்ளனர். அவர்கள் தமது துன்பத்தையும் துக்கத்தையும் சொல்லிக் கதறியழ முடியாத சூழலில் உள்ளனர்.

உயிரிழப்புக்குப் பதிலாக நாட்டில் வெற்றி விழா கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில் துக்கத்தை அனுஷ்டிப்பவர்கள் ஆட்சியாளர்களுக்கு எதிரிகளாகக் கருதப்படுவார்கள். போரின் பின்னர் சமாதானம் என்ற நிலையில் வெற்றி விழா அவசியமானால் உயிரைப் பறிகொடுத்தவர்கள் எப்படி அழாமல் இருக்க முடியும். தோல்வியடைந்தோருக்கு துன்ப நினைவுகளும் அவசியம். இது உளவியல் ரீதியான முடிவு.

தமிழினத்தவர்களும் தமது நல்வாழ்வுக்காக எதை எதையோ எல்லாம் செய்கிறார்கள்.

இதனால் மனதுக்குள் வெதும்பிப்புழுங்கியழும் உள்ளங்கள் தான் எத்தனை?

இவ்வாறானதொரு சூழலில் வெளிப்படையாகக் கறுப்புப்பட்டி அணிந்து உயிரிழந்தகளுக்கு மதிப்பு கொடுக்கும் போது உறவுகள் ஓரளவு மன நிம்மதி அடைவர்.

அந்த வகையில் இன்றைய தினம் கறுப்புப் பட்டி அணிந்து பாதிப்படைந்த மக்களை நேரடியாகச் சந்தித்து ஆறுதல் கூறவுள்ளதாக அவர்-தெரிவித்துள்ளார். (ந-14)

---

## பகவத்கீதை சொற்பொழிவு

சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு வேதாந்த மடத்தின் ஏற்பாட்டில் யாழ். சின்மயா மிஷன் நடத்தும் ''செயல் திறம்பட வேண்டுமா? கீதை தரும் ஆலோசனைகள்'' எனும் தலைப்பில் ஸ்ரீமத் பகவத்கீதை தொடர்பான சொற்பொழிவு -

இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன் கிழமை வரை தினமும் மாலை 6 மணிக்கு இல.18 குமாரசாமி வீதி கந்தர்மடத்தில் இடம் பெறவுள்ளது.

சொற்பொழிவை யாழ். சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைத்தன்யா நிகழ்த்துவார். (ஓ-14)

---

## கூட்டம்

மானிப்பாய் கட்டுடை சைவ வித்தியாசாலை பழைய மாணவர் நலன் விரும்பிகள் சங்க அங்குரார்ப்பண கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும்.

கட்டுடை சைவ வித்தியாசாலையின் கல்வி நிலை, கட்டட வசதி, வளப்பற்றாக்குறை, மாணவர் எண்ணிக்கையை அதிகரித்தல் போன்ற விடயங்களிலும் ஆராயப்படும் என அதிபர் எஸ். சிவஞானம் அறிவித்துள்ளார். (ஓ-41)

---


## வேலை வாய்ப்பு

கொழும்பில் இயங்கிவரும் தனியார் கட்டட நிறுவனத்துக்கு சுறுசுறுப்பாகவும், சகல வேலைகளும் செய்யக் கூடியவர்களான ஆண்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

* Plumbing * Welding * Aluminum Fitting
* Painting * A/C * Mason

சம்பளம் மாதம்:
35,000/=, முதல் 42,000/= வரை
வயது எல்லை: 18-35 வரை
(36653)(5.6)
தொடர்பு: 077 706 5127

## காணி விற்பனைக்கு

* மீசாலை மேற்கு, பங்களா வீதி, ஏரம்பு வீதியில் வீடு கட்டக்கூடிய 3½ பரப்புக் காணியும்,
* மீசாலை பழைய ஸ்ரேசன் சந்தியில் இருந்து கந்தசாமி வீதியில் 16 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 451 9986, 077 990 7122.
(35032)(45.6)


## துயர் பகிர்வு

அரியாலையை பிறப்பிடமாகவும், இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட, எமது ஆலய பொதுச்சபை உறுப்பினராகிய

### கனகரத்தினம் செல்வராசா

அவர்கள் இறைபதம் அடைந்துவிட்டார். எமது ஆலய திருப்பணிக்கு பாரிய நிதியுதவியை வாரி வழங்கி திருப்பணி நிறைவு பெறுவதற்கு தம்மால் இயன்ற பங்களிப்பை செய்திருந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானை வேண்டுவதுடன், அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்துக்கு தேவஸ் தான நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாக சபை
அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு (36613) (10.6)
ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 03 * 12 * 1946
மறைவு 09 * 06 * 2000

திதி : வைகாசி அட்டமி

அமரர் நாகலிங்கம் சிவசோதி
(முன்னாள் அதிபர், யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்)

உங்கள் நினைவுகளோடு என்றும் வாழும்
குடும்பத்தினர்

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
(36651)(6-2)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 29*05*1932
மறைவு 18*04*2013

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் சோடா கம்பனி வீதியை வாழ்விடமாகவும், தற்போது வெள்ளவத்தையை வாழ்விடமாகவும் கொண்ட

### திருமதி இராசபூவதி மாணிக்கவாசகர்

கருவாகி நாம் உருவான நாள் முதலாய்
பெருந்துன்பம் அனைத்தும் பொடியாக்கி
எங்களுக்கு எல்லாமாய் வாழ்ந்தீர்கள்
உங்கள் பிரிவால் எல்லாம் இழந்தோமே
எங்கள் உள்ளத்தில் தெய்வமாய் இருப்பீர்கள்
உங்களை நினைத்து என்றும் தொழுதிடுவோம்
இறைவன் திருவடியில் சாந்தி பெறுவீர்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் அம்மாவின் பிரிவின்போது தேடிவந்து துயர் பகிர்ந்தும். தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவிகள் செய்து ஆறுதல் தந்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.05.2013) சனிக்கிழமை வெள்ளவத்தையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

வெள்ளவத்தை,
கொழும்பு - 04.

குடும்பத்தினர்.

## அறிவித்தல்

190ஆம் கட்டை, நுணாவில் மேற்கில் இயங்கும் டிஷ்னா மகளிர் வாழ்வாதார பயிற்சி நிலையத்தினரால்'டிஷ்னா உற்பத்தி-இளைய தலைமுறையினைருக்கான வாழ்வாதார பயிற்சி நிலையம்' என்ற பெயரில் தயாரிக்கப்பட்ட கடிதத்தலைப்பில்(Letter Head) ரஞ்சனா நவரத்தினம் என்ற எனது பெயரும், பதவிப் பெயரும், எனது அனுமதியின்றி, எனக்கு அறிவிக்காமலே Chair Person ஆகக் குறிப்பிடப் பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. எனக்கும் இந்த நிறுவனத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. எனவே இந்தக் கடிதத் தலைப்பை உபயோகித்து இந்த நிறுவனத்தினர் இதுவரை மேற்கொண்ட மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ள கடிதத் தொடர்பாடல்கள், நிதி தொடர்பான நடவடிக்கைகள் எவற்றிற்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதை இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

(36655)
(5.6)

ரஞ்சனா நவரத்தினம், உதவிப் பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், தென்மராட்சி.


## விற்பனைக்கு

5000km ஓடிய Kinetic Safari (45) ஒரு கைப்பாவனை, விற்பனைக்கு உண்டு.

K.பஞ்சாட்சரநாதன்,
குளங்கரை,கொக்குவில்
(36652) (5.6) தொ.பே.: 021 300 6646

## விற்பனைக்குண்டு

பியூட்டி பார்லர் உபகரணங்களும் அழகுசாதனப்பொருள்களும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 903 7288, 077 193 0272
(36605) (45.6)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவகாமசௌந்தரி சபாரட்ணம் (ஞானம்)



கல்வியங்காடு, நல்லூரைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமசௌந்தரி சபாரட்ணம் வியாழக்கிழமை 16.05.2013 கனடாவில் காலமனார்.


அன்னார் காலஞ்சென்ற நடராஜா (வாத்தியார்) மற்றும் தில்லைப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற சபாரட்ணத்தின் அன்பு மனைவியும், சரவணபகவான், சண்முகானந்தன், ஆனந்தசௌந்தரி, காலஞ்சென்ற ஸ்காந்தன் மற்றும் ஸ்ரீஸ்காந்தன், சோமஸ்காந்தன் ஆகியோரின் அன்பு சகோதரியும், கௌரி, ஞானசபா, ஸ்ரீமுருகன், ஞானவேல் ஆகியோரின் பாசமிகுதாயும், ஸ்ரீஸ்கந்தராஜா, கஜனி, யாமினி, சாந்தரூபி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

92, பலாலி வீதி, திருநெல்வேலி.
0771932082 (36615)(10.6)

தகவல்:
முருகன் (சகோதரன்)



### நாகலிங்கம் முத்துலிங்கம்

யாழ்ப்பாணம், கலட்டி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், பிரம்படி, கொக்குவிலை வசிப்பிடமாகவும், தற்போது 32/9, குட்செட் வீதி, தோணிக்கல்லை நிரந்தர வசிப்பிடமாகக்கொண்ட நாகலிங்கம் முத்துலிங்கம் 14.05.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அருளம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பராசக்தியின் பாசமிகு கணவரும், திருமாவளவன், திருமாலினி, திருச்செல்வம், மதியழகன், தனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணகல்யாணி, முருகதாஸ், தட்ஷாயினி, சிவனேஸ்வரி, சிவகுமாரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், விஜய், விஸ்ணு, விஸ்மன், பிரித்தா, அஜயி, அஜித், திவ்யன், திவிஷன், அக்ஷனா, அக்ஷயன், சிந்துஜா, சத்தியா, சச்சின் ஆகியோரின் பாசமிகு பேரனும், யோகலிங்கம், புஸ்பராணி, இராசலிங்கம், சுந்தரலிங்கம், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மகிழரத்தினம், சாந்தினிகேதன், இந்திராதேவி, ரதி, காலஞ்சென்றவர்களான சுந்தரம், கணேஷ், வேலாயுதபிள்ளை, பாலசிங்கம் மற்றும் சீதேவிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அரவது இல்லத்தில் நாளை (19.05.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

32/9, குட்செட் வீதி,
தோணிக்கல், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
(35191) (45.6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சாதித்தது சன்றைசர்ஸ்

ஐ.பி.எல்.தொடரின் மிக முக்கியமான ஆட்டத்தின் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை ஹைதராபாத் சன்றைசர்ஸ் அணி தக்கவைத்துக் கொண்டது.

நேற்று ஹைதராபாத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சன்றைசர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆயினும் ஆரம்பத்தில் அந்த அணி மளமளவென்று இலக்குகளைப் பறிகொடுத்தது. பட்டேல் (2), தவான் (1), வைற் (0), விஹாரி (19) என்று நம்பிக்கை தரக்கூடிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர். ராஜஸ்தான் அணியின் ப்ல்க்னர் அபாரமாகப் பந்துவீசி எதிரணியை நிலைகுலையச் செய்தார். எனினும் பின்னர் சமன்ரே, டெரன்சமி, திஸர பெரேரா ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தால் சன்றைசர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. சமன்ரே 55 ஓட்டங்களையும், சமி 23 ஓட்டங்களையும், திஸர பெரேரா ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களையும் பெற்றனர். பல்க்னர் 5 இலக்குகளைச் சரித்தார்.

137 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற சுலபமான இலக்கு நோக்கி முன்னேறிய ராஜஸ்தான் அணி 7ஆவது பந்துப்பரிமாற்றத்துக்குப் பின்னர் திடீரென வீழ்ச்சியைச் சந்தித்தது. அந்த அணியின் தலைவர் ட்ராவிட் 25 ஓட்டங்களையும், கெவின் கூப்பர் 26 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனையோர் சொற்ப ஓட்டங்களோடு வெளியேற ராஜஸ்தான் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 113 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் சன்றைசர்ஸ் அணி 23 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. நான்கு பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி வெறும் 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளைச் சரித்த அமித் மிஸ்ரா ஆட்ட நாயகனானார்.

(ங)



## புறொயிலர் இறைச்சி விலை ஏறுமுகத்தில்

யாழ்ப்பாணத்தில் புறொயிலர் கோழி இறைச்சியின் விலை உயர்வடைந்துள்ளது. தற்போது ஒரு கிலோ இறைச்சி ரூபா 540 ஆக விற்பனை செய்யப்படுகிறது. முன்னர் இதன் விலை 500 ரூபா முதல் 520 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது. (ஒ-51)

## துன்னாலைப் பகுதி கடையில் திருட்டு

வடமராட்சி, மே 18

துன்னாலை வடக்கு அல்லையம்பதியில் உள்ள சிறு கடை ஒன்றில் சுமார் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான சில்லறைப் பொருள்கள் இனந்தெரியாதோரினால் திருடப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த புதன் கிழமை அதிகாலை வேளை கூரைத் தகடுகளைப் பிரித்து உள் நுழைந்து இத் திருட்டு நடைபெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)

# ஆபத்தானவர் அமெரிக்கத் தூதர் நாட்டை விட்டு வெளியேற்றுக

### சூழ்ச்சிக்கு துணை போகிறது கூட்டமைப்பு; சிங்கள தேசிய அமைப்புகள் போர்க் கொடி

கொழும்பு, மே 18

இராஜதந்திர விதிமுறைகளை மீறிச் செயற்படும் அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் சிஸனை 'ஏற்றுக்கொள்ள முடியாத நபர்' எனப் பிரகடனப்படுத்தி அரசு நாட்டை விட்டு உடனடியாக வெளியேற்றவேண்டும் என்று சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், கடற்கரையில் குப்பை பொறுக்கி "படம் காட்டும் இந்த அமெரிக்க அம்மையார் மிகவும் ஆபத்தானவர் என்றும் அந்த ஒன்றியம் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கத் தூதுவருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குமிடையில் நடைபெற்ற அவசர சந்திப்பானது கடும்போக்குடைய சிங்கள அமைப்புகளைக் கொதிப்படைய வைத்துள்ளது. இந்தச் சந்திப்பானது இராஜதந்திர விதிமுறைகளை மீறும் செயல் எனக்கூறி இதற்கெதிராக அவ்வமைப்புகள் போர்க் கொடி தூக்கியுள்ளன.

இந்நிலையில், அமெரிக்கத் தூதுவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புசந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார கூறுகையில், "ஏனைய இராஜதந்திரிகளை விட அமெரிக்கத் தூதுவர் முற்றிலும் வித்தியாசமானவராக இருப்பதோடு அவரின் செயற்பாடுகள் இராஜதந்திரச் செயற்பாடுகளா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. உள்நாட்டு விவகாரங்களில் அவர் அளவுக்கதிகமாகத் தலையிடுகின்றார். எனவே, ஏற்றுக் கொள்ள முடியாத நபராகக் கருதி மிச்சேல் சிஸனை அரசு உடனடியாக வெளியேற்ற வேண்டும். டேவிட் பிளஸ்டனை பிரேமதாஸ விரட்டியதுபோன்று இவரையும் அரசு விரட்டலாம்" - என்றார்.

அதேவேளை, இவ்விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர்,

"அமெரிக்காவானது ஏனைய நாட்டு உள்விவகாரங்களில் மூக்கை நுழைப்பதைத் தமது கொள்கையாகக் கொண்டு செயற்படுகின்றது. அந்த அடிப்படையிலேயே இங்குள்ள தூதரும் செயற்படுகின்றார்.

"அரசின் அனுமதியின்றி உள்நாட்டு விவகாரங்களில் இவரால் தலைபோட முடியாது. மிச்சேல் சிஸன் மட்டும் இதனைச் செய்யவில்லை. இதன் பின்னணியில் வெள்ளை மாளிகை நிர்வாகமுள்ளது.

"சூழ்ச்சிக்காரர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று துணைபோகின்றது. எனவே, அமெரிக்காவின் சதிவலையில் தமிழர்கள் விழுந்துவிடக் கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறோம்" - என்றும் தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்கத் தூதுவர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திப்புக்கெதிராக ஏனைய சில சிங்கள அரசியல் கட்சிகளும் போர்க்கொடி தூக்கியுள்ளன.

## நுளம்பு நோய் விழிப்புணர்வு கண்காட்சியும் கருத்தரங்கும்



தென்மராட்சி, மே 18

மலேரியா மற்றும் நுளம்புகளால் பரப்பப்படும் தொற்று நோய்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்கும் கண்காட்சியும் கடந்த வியாழக்கிழமை நாவற்குழி மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

மலேரியா அற்ற இலங்கையை உருவாக்கவும் பாடசாலை மாணவர்களுக்கு உணர்த்துவதற்கும் அறிவை அபிவிருத்தி செய்வதற்குமான செயற்றிட்டத்தின் கீழ் யாழ். பிராந்திய மலேரியா ஒழிப்பு இயக்கமும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து கண்காட்சியினையும் கருத்தரங்கினையும் ஏற்பாடு செய்திருந்தனர்.

யாழ். பிராந்திய மலேரியா ஒழிப்பு இயக்க பொறுப்பதிகாரி வைத்தியக் கலாநிதி எஸ். ஜெயக்குமார், நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம் ஆகியோர் கூட்டாக கண்காட்சியைத் திறந்து வைத்தனர்.

கண்காட்சியை கைதடி, நாவற்குழி பிரதேசங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் பொது மக்களுமாக 2 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பார்வையிட்டனர்.

மாணவர்கள் கண்காட்சியினைப் பார்வையிடுவதற்கு வசதியாக யாழ். சுகாதாரத் திணைக்களத்தினால் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. இந்த நிகழ்வுக்கு வேள்ட் விஷன் நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

# வடக்கில் முன்னாள் போராளிகளை களமிறக்குவது ஜனநாயக விரோதம்

### தேர்தல் தொ ர்பில் ஐ.தே.க. குற்றச்சா ்டு

கொழும்பு, மே 18

வடமாகாண சபைத் தேர்தலில் தயா மாஸ்டரையும், கமலினியையும் (தமிழினி) அரசு களமிறக்குவதானது நாட்டின் ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்"

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி நேற்று சுட்டிக்காட்டியது.

கொழும்பு இராஜகிரியவில் அமைந்துள்ள ஐ.தே.கவின் தொழிற்சங்கப் பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அதன் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

"இந்த அரசு தனது குறைகளை மறைப்பதற்காக எதிர்க் கட்சிகள் மீது குற்றஞ்சாட்டி வருகின்றது. ஆனால், இந்த நாட்டின் நாசகாரச் செயல்களுக்கு நாம் காரணமல்ல.

தற்போது சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் எண்ணெய் இல்லை. ஆனால் எண்ணெய்க் கொள்கலனுடன் கப்பல் ஒன்று வருகிறது என அரசு தெரிவித்தாலும் இதுவரையிலும் துறைமுகத்திற்கு கப்பல் வரவில்லை. இதுவரையிலும் அரசு எண்ணெய்க்கான கோரல் விடுக்காதுள்ளமையே இதற்கான காரணமாகும். இதனால் தற்போது பல ஆயிரம்கோடிக் கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, பொதுநலவாய மாநாட்டிற்காக 'ரூள்ஸ் ரைஸ்' கார்களை அரசு இறக்குமதி செய்யவுள்ளது. இந்த பலகோடி ரூபா பெறுமதியான கார்களை இறக்குமதி செய்வதன் மூலம் எந்தவித [illegible] மேலும், இதனால் ஏற்படும் நஷ்டமும் மக்களையே மேலும் பாதிப்படையச் செய்யும்.

வடமாகாணசபைத் தேர்தலில் முன்னாள் போராளிகளான தயாமாஸ்டரையும், கமலினியையும் களமிறக்க இந்த அரசு தீர்மானித்துள்ளது. இச்செயற்பாடு மிகவும் மோசமான ஒன்றாகும்.

30 வருட காலமாக நாட்டையே உலுக்கிவைத்த போரை நிறைவுக்கு கொண்டுவந்த சரத் பொன்சேகாவை தேசிய பாதுகாப்பைக் காரணம்காட்டி இரண்டு [illegible] தள்ளியது [illegible] ஆனால், போரில் ஈடுபட்ட அவர்களிருவரையும் தேர்தலில் இறக்கி ஜனநாயகத்திற்கு எதிராக செயற்படுகிறது அரசு. இதனை எதிர்க்க முற்பட்டால் எம்மையும் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்துவிடுகிறது. ஆனால் மக்கள் இப்போது முன்னர் போலல்லாது தெளிவாகிவிட்டார்கள். எதிர்வரும் 21 ஆம் திகதி எம்மால் நடத்தப்படவிருக்கும் பெரியளவிலான போராட்டத்தில் மக்களைக் கலந்துகொள்ள நாம் அழைக்கின்றோம். நாம் நிம்மதியாக வாழும் காலம் வரும்வரை தொடர் போராட்டங்களை நடத்திக் கொண்டேயிருப்போம்" - என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாவம் கிரிக்கெட் ரசிகர்கள்




இந்திய கிரிக்கெட் வீரர்கள் மூவர் ஐ.பி.எல். ஆட்டங்களின்போது சூதாட்டத்தில் ஈடுபட்டமைக்காகக் கைது செய்யப்பட்ட பரபரப்பு அடங்கு முன்னர் அந்த விவகாரம் குறித்து மேலும் பரபரப்புத் தகவல்களை வெளியிட்டு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி தருகிறார்கள் டெல்லி பொலிஸார்.

''குறித்த வீரர்கள் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டமை தொடர்பான வீடியோ ஆதாரங்கள் உட்பட அனைத்து ஆதாரங்களும் எம்மிடம் இருக்கின்றன'' என்று கூறுகின்றார் டில்லி பொலிஸ் பொறுப்பதிகாரி நிரஜ் குமார்.

''ராஜஸ்தான்–புனே அணிகளுக்கு இடையே நடந்த ஆட்டத்தின்போது அதிக ஓட்டங்கள் விட்டுக் கொடுக்க வீரர்கள் ஒப்புக்கொண்டனர். அது தொடர்பான ஆதாரம் எம்மிடம் உண்டு'' என்று கூறியதோடு நிற்காது அங்கிருந்த செய்தியாளர்களுக்கும் அந்த உரையாடல் ஆதாரத்தை போட்டுக் காட்டினார் நீரஜ் குமார்.

''குறிக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்களில் அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். ஆனால் அது எந்தப் பந்துப்பரிமாற்றம் என்பதை வீரர்கள் சைகை மூலம் தரகர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற உடன்பாடு வீரர்களுக்கும், சூதாட்டக்காரர்களுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டிருந்தது.'' என்று கூறிய நீரஜ் குமார் சூதாட்டம் நடந்த விதம், சூதாட்டக்காரர்களுடன் வீரர்கள் மேற்கொண்ட சைகைகள் ஆகியவற்றையும் அவர் காணொலி மூலம் திரையில் போட்டுக் காண்பித்தார்.

''குறிப்பிட்ட சைகையை வீரர்கள் காண்பித்ததும் தரகர்கள் தங்கள் சூதாட்டத்தைத் தொடங்குவார்கள். அவ்வாறுதான் ராஜஸ்தான் றோயல்ஸ் வீரர் சாண்டிலா தரகர்களின் பேரத்தின்படி, முன்கூட்டியே ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார்.

ஆனால், அவ்வாறு ஓட்டங்களை விட்டுக் கொடுப்பதற்கு முன்னதாக அதற்குரிய சமிக்ஞைகளை தரகர்களுக்கு அவர் வெளிப்படுத்தவில்லை.

அதனால், அவருக்கு முன்னதாக வழங்கப்பட்ட ரூ.20 லட்சம் பேரத் தொகையை தரகர்கள் திரும்பிக் கேட்டுள்ளனர். புனே வாரியர்ஸ் அணிக்கெதிராக மே 5ஆம் திகதி நடந்த போட்டியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

சாண்டிலா வானத்தைப் பார்க்க வேண்டும். ஆனால் அவர் பார்க்கவில்லை. அதே நேரம், சாண்டிலா அந்த பந்துப்பரிமாற்றத்தில் வீசிய 6 பந்துகளில் உத்தப்பாவும் பின்ச்சும் 14 ஓட்டங்களை எடுத்தனர். அதுவும் முன்னரே தீர்மானிக்கப்பட்டதுதான்.

ஆனால் தரகர்கள் சூதாட்டம் நடத்த வசதியாக சண்டிலா அடையாளங்கள் எதையும் அவர்களுக்குக் காட்டவில்லை. இதனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட பணமும் திருப்பிக் கேட்கப்பட்டது'' என்று அதிர்ச்சி கொடுக்கிறார் டில்லி பொலிஸ் ஆணையாளர்.

''மே 9ஆம் திகதி மொகாலியில் நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகளுக்கு இடையேயான ஆட்டத்தில், ஸ்ரீசாந்த் தனது இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தை வீசுவதற்கு முன் தனது காற்சட்டையில் வெள்ளை கைக்குட்டை ஒன்றைப் போட்டுக் கொள்ளவேண்டும். இது தான் அடையாளம்.

அதாவது, அந்தப் பந்துப் பரிமாற்றம் சூதாட்ட பந்துப் பரிமாற்றம் என்பது பொருள். அதேபோல் ஸ்ரீசாந்த் கைக்குட்டையைப் போட்டுக் கொள்கிறார்.

அந்தப் பந்துப்பரிமாற்றத்தை வீசத் தொடங்கு வதற்கு முன் நாங்கள் 'பெட்டிங்' செய்ய நேரம் வேண்டும். எனவே ஏதாவது செய். ஆனால் என்ன செய்யப் போகிறாய் என்பதை தெரிவித்து விடு என்று தகவல் தரகரால் ஸ்ரீசாந்த்துக்கு வழங்கப்பட்டது. சிறிது நேரம் பயிற்சி செய்து நேரம் எடுத்துக் கொண்ட ஸ்ரீசாந்த் பின்னர் அந்தப் பந்துப் பரிமாற்றத்தில் 13 ஓட்டங்களை வாரிக் கொடுத்தார்.

கடைசியாக, கடந்த புதன் கிழமை நடந்த மும்பை இண்டியன்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகளுக்கு இடையிலரன ஆட்டத்தில், சாண்டிலா, சவான் இருவரது செயற்பாடுகளும் சூதாட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டின.

அந்த ஆட்டத்தில் சாண்டிலா களத்தில் இறங்கி ஆடவில்லை. எனினும் சாண்டிலாதான் சூதாட்டத் தரகர்களுக்கும், சவானுக்கும் இடையே இடைத்தரகு வேலை செய்தார்.

இவரிடம் 60 லட்சம் ரூபாய் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பந்துப் பரிமாற்றத்தில் சவான் 13 ஓட்டங்கள் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

அதன்படி, தாம் ஏற்கெனவே வீசிய முதல் பந்துப்பரிமாற்றத்தில் கட்டுக்கோப்பாக வீசி 2 ஓட்டங்களை விட்டுக் கொடுத்த சவான், இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தில், முதல் மூன்று பந்துகளிலேயே இரண்டு சிக்ஸர்கள், ஒரு இரண்டு ஓட்டங்கள், என்று 14 ஓட்டங்களை விட்டுக் கொடுத்துவிட்டு அடுத்த மூன்று பந்துகளை கட்டுக்கோப்பாக வீசினார். இது சூதாட்டக்காரர்கள் சொன்ன ஓட்டங்களை விட ஒரு ஓட்டம் கூடுதலாகும்'' என்று அதிரடித் தகவல்களை வெளியிட்டு அதிர்ச்சி தருகிறார் நிராஜ் குமார்.

''இந்தத் தகவல்கள் ராஜஸ்தான் அணி வீரர் சண்டிலாவுக்கும் சூதாட்டக் காரர்களுக்கும் இடையே நடைபெற்ற தொலைபேசி உரையாடல், குறுஞ்செய்திகள் மூலமாகத்தான் எமக்குக் கிடைத்தன. இந்த விவகாரம் தொடர்பாக விசாரணகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் இந்த விவகாரத்தில் வேறு எவருக்காவது தொடர்பு உண்டா என்பதைக் கண்டுபிடிப்போம்'' என்று முடித்தார் அவர். (ற)




மும்பையைச் சேர்ந்த ஒருவர் சூதாட்டத்தில் ஈடுபடுவதாகவும், அதற்காக கிரிக்கெட் வீரர்களையும், தரகர்களையும் தொடர்பு கொண்டு வருகின்றார் என்றும் எங்களுக்கு தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் விசாரணையைத் தொடங்கினோம். அவர்கள் அனைவரையும் எங்களின் கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வந்தோம். அவர்களின் தொலைபேசி உரையாடல்கள் கண்காணிக்கப்பட்டன. அப்போது, ஸ்ரீசாந்த் உட்பட 3 வீரர்களும் சூதாட்டத்தில் ஈடுபடப் போவது உறுதியானது. அவர்களை கையும் களவுமாக பிடிக்கும் வாய்ப்புக்காகக் காத்திருந்தோம்.

''குறிக்கப்பட்ட பந்துப்பரிமாற்றங்களில் அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். ஆனால் அது எந்தப் பந்துப்பரிமாற்றம் என்பதை வீரர்கள் சைகை மூலம் தரகர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்ற உடன்பாடு வீரர்களுக்கும், சூதாட்டக்காரர்களுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டிருந்தது.''





## ஒப்புக் கொண்டனர் குற்றத்தை

சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள கிரிக்கெட் வீரர்கள் ஸ்ரீசாந்த், அங்கித் சவான் மற்றும் சாண்டிலா ஆகியோரர் தங்களது குற்றங்களை ஒப்புக் கொண்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. சூதாட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள 3 கிரிக்கெட் வீரர்களையும் 5 நாள் காவலில் வைத்துள்ள டில்லி பொலிஸார் அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். தம்மிடமுள்ள ஆதாரங்களைக் காட்டி பொலிஸார் நடத்திய விசாரணையில் மூவரும் தங்களது தொடர்புகளை ஒப்புக் கொண்டுள்ளனர் என்று தெரிகிறது.

தமது நண்பரும் சூதாட்ட தரகருமான ஜிஜு இதில் தன்னைச் சிக்க வைத்துவிட்டார் என்று ஸ்ரீசாந்தும், தான் மாபெரும் தவறு செய்துவிட்டேன் என்று அங்கித் சவானும் விசாரணையில் கூறியுள்ளனர்.

விசாரணையின்போது ஸ்ரீசாந்த, அங்கித் சவான் ஆகியோர் கண்ணீர் விட்டு அழுதனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதே நேரத்தில் ஸ்ரீசாந்த் ஒரு அப்பாவி என அவரது வழக்கறிஞரும், குடும்பத்தினரும் தெரிவித்துள்ளனர். (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே18
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டம் இன்று சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. அதில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து கொழும்பு உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. (ற-23)

***

யாழ்ப்பாணம், மே 18
முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த கிரிக்கெட் அணிகள் பங்குபற்றும் '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

**காலை 7 மணி**
புதிய பாரதி விளையாட்டுக் கழக அணி எதிர் மகாதீபம் விளையாட்டுக் கழக அணி
**காலை 10.30 மணி**
யுனைற்றட் விளையாட்டுக் கழக அணி எதிர் வித்தியானந்தா வி.க. அணி
மதியம் 1.30மணி
நியூஸ்ரார்வி.க.அணிஎதிர்உதயசூரியன் வி.க. அணி.(ற-23)

***

யாழ்ப்பாணம், மே 18
ஸ்ரீலங்கா கிரிக்கெட் நடத்தும் 'பிரிவு 3' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் யாழ் மாவட்ட அணிகளைத் தெரிவு செய்வதற்கான தெரிவு போட்டிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.
மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் ஓல்ட் கோல்ஸ் வி. க. அணியை எதிர்த்து கிராஸ்கோப்பஸ்வி.க. அணி மோதவுள்ளது. (ற-23)

***

யாழ்ப்பாணம் மே 18
வடமாகாண விளையாட்டு திணைக்களம் மாவட்டங்களுக்குஇடையேநடத்தும் ஆண்களுக்கான ரைக்கொண்டோ மற்றும் பளுதூக்கு போட்டிகள் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.
இதில் ரைக்கொண்டோ போட்டி பருத்தித்துறையில் அமைந்துள்ள அஞ்சலி அகத்திலும், பளுதூக்கு போட்டி பருத்தித்துறை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம் பெறவுள்ளனது. (ற-23)

***

யாழ்ப்பாணம், மே18
இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதி யாட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:-
மாலை 4 மணி
பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழகம் எதிர் இணுவில் அண்ணா விளையாட்டுக்கழகம். (ற-23-288)

### மன்னார் பிரீமியர் லீக்

# யங்ஸ்ராரை வீழ்த்தியது இந்து முன்னணி வி.க.



யாழ்ப்பாணம், மே 12
மன்னார் பெரிய கடை ஸ்ரார்ஈகிள் விளையாட்டுக் கழகம் நடத்தும் '20/20' பிரீமியர்லீக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் கடந்த ஞாயிறுக்கிழமை இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்து முன்னணி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 19.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது. அதில் விஜயன் 23 ஓட்டங்களையும், பிரதீபன் 14 ஓட்டங்களையும், வேங்கை 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.
பந்து வீச்சில் இந்து முன்னணி விளையாட்டுக் கழகம் சார்பில் வசந்தன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், தர்சன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
103 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்து முன்னணி விளையாட்டுக் கழகம் 13.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. அதில் தர்சன் 38 ஓட்டங்களையும், அஜந்தன் 20 ஓட்டங்களையும், உதயா 19 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.
பந்து வீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் வேங்கை 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், விஜயன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.(ற-23)



முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட எறிபந்துப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகிய மு/கோட்டைகட்டியகுளம் அ.த.க.பாடசாலை 19 வயது அணியினர்.

## யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட தெரிவு

வலி.வடக்கு, மே 18
யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தால் நடத்தப்படும், 2013 ஆம் ஆண்டுக்கான யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணித் தெரிவுக்கான பயிற்சிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.
மாவட்ட அணித் தெரிவுக்காக அனைத்துக் கழகங்களும் தகுதியான வீராங்கனைகளை அனுப்பிவைக்குமாறு யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளர் சுரேந்தினி சிதம்பர நாதன் அறிவித்துள்ளார். அத்துடன் இம்முறை கலப்பு வலைப்பந்தாட்ட அணித் தெரிவும் இடம் பெற உள்ளதால், வீரர்களை அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ற-86)

### தேசிய மெய்வல்லுநர் தட்டெறிதலில்

## வவுனியா மாணவிக்கு வெள்ளிப் பதக்கம்

யாழ்ப்பாணம், மே 18
இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி பியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இரண்டாம் நாளான நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 20 வய்துக்கு பட்ட பெண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் வவுனியா மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் சார்பாக பங்குபற்றிய வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி ஆர். தர்சிகா 30.40 மீற்றர் தூரம் ஏறித்து இரண்டாவது இடத்தைப் பெற்று வெள்ளி பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.
இவர் 18 வயதுப்பிரிவு பெண்களுக்கான சம்மட்டி ஏறிதல் போட்டியில் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடதக்கது. (ற-23)

## கிளிநொச்சி மாவட்ட பெருவிளையாட்டு



யாழ்ப்பாணம், மே 18
கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்களின் தொடர்ச்சி:
**கிரிக்கெட்**
**19 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம் கனகபுரம் மகா வித்தியாலயம்
2ஆம் இடம் ஜெயபுரம் மகா வித்தியாலயம்
3ஆம் இடம் புனித திரேசா பெண்கள் கல்லூரி
**மேசைப்பந்தாட்டம்**
**15 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம்இடம் சிவநகர் அ.த.க. பாடசாலை
2ஆம் இடம் புனித பற்றிமா றோ.க.த. பாடசாலை
3ஆம் இடம் கிளிநொச்சி இந்துக்கல்லூரி
**19 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம் கிளிநொச்சி இந்துக் கல்லூரி
2ஆம் இடம் சிவநகர் அ.த.க. பாடசாலை
3ஆம் இடம் கனகபுரம் மகா வித்தியாலயம்.
**சதுரங்கம்**
**15 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம் கிளிநொச்சி மகா வித்தியாலயம்
2ஆம் இடம் உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
3ஆம் இடம் வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
**19 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம் வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
2ஆம் இடம் இரமநாதபுரம் மகா வித்தியாலயம்
3ஆம் இடம் கிளிநொச்சி மகா வித்தியாலயம்
**பூப்பந்து**
**15 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம் கிளிநொச்சி மகா வித்தியாலயம்
2ஆம் இடம் கிளிநொச்சி இந்துக்கல்லூரி
3ஆம் இடம் கனகபுரம் மகா வித்தியாலயம்
**19 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம் கிளிநொச்சி மகா வித்தியாலயம்
2ஆம் இடம் தர்மபுரம் மகா வித்தியாலயம்
3ஆம் இடம் கனகபுரம் மகா வித்தியாலயம்
**கரம்**
**15 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம்இடம் இரமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை
2ஆம் இடம் பூநகரி மகா வித்தியாலயம்
3ஆம் இடம் கிளிநொச்சி இந்துக் கல்லூரி
**19 வயதுப்பிரிவு பெண்கள்**
1ஆம் இடம் கனகபுரம் மகா வித்தியாலயம்
2ஆம் இடம் கிளிநொச்சி இந்துக் கல்லூரி
3ஆம் இடம் புநகரி மகா வித்தியாலயம்
**உடற்பயிற்சி போட்டி**
19 வயதுப்பிரிவு பெண்கள்
1ஆம் இடம் இரமநாதபுரம் மகா வித்தியாலயம்
2ஆம் இடம் பிரமந்தனாறு மகா வித்தியாலயம்
3ஆம் இடம் விவேகானந்த வித்தியாலயம்.
(ற-23)

## மெய்வல்லுநர் தொழில்நுட்ப குழுவில் தமிழர்

யாழ்ப்பாணம், மே 18
யாழ். மாவட்ட மெய்வல்லுநர் தொழில் நுட்ப அலுவலர் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் தம்பிரஜா சிவசோதி, இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் தொழில்நுட்பக் குழுவின் உறுப்பினராக கடந்த ஏப்ரல் மாதம் 20 திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சர்வதேச, தேசியப் போட்டிகளில் நடுவராகக் கடமையாற்றி வருவதுடன் இலங்கையின் தேசிய நடுவர் என்ற பதவியையும் பெற்றுள்ளார்.



மெய்வல்லுநர் சங்கத்தின் தொழில்நுட்பக் குழுவின் இடம்பெற்ற ஒரே ஒரு தமிழர் இவர் என்பது குறிப்பிடதக் கது. (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவரை விடுவிக்காவிட்டால் இலங்கைத் தூதரகம் முற்றுகை

## தமிழக மீனவர் அமைப்புக்கள் எச்சரிக்கை

சென்னை,மே 18

இலங்கையில் சிறைவைக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிடுவோம் என்று தமிழக மீனவர் அமைப்புக்கள் எச்சரித்துள்ளன.

தமிழகம் மற்றும் காரைக்கால் பகுதியில் இருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்றும் மீனவர்களைத் துப்பாக்கி முனையில் கைது செய்கின்றனர் என்றும் தமிழக மீனவர் அமைப்புகள் குற்றம்சாட்டி வருகின்றன.

காரைக்கால் மாவட்ட மீனவர்கள் 26 பேர் கைது செய்யப்பட்டு இதுவரை விடுவிக் கப்படாத நிலையில் மீனவர்களின் பிரச் சினைக்கு மத்திய அரசு உடனடியாக நட வடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி நேற்று வெள்ளிக்கிழமை அங்கு முழுநாள் கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது.

11 மீனவர் கிராமங்களைச் சேர்ந்த கிரா மத் தலைவர்களின் ஏற்பாட்டில் பெட்டிக் கடைகள் உட்பட, பலசரக்குக் கடைகள், ஹோட்டல்கள் அனைத்தும் நேற்று காரைக் கால் மாவட்டத்தில் மூடப்பட்டன.

இந்தக் கடையடைப்பு போராட்டத்தின் போது மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக் காவிடில் தாம் சென்னை இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிடப் போவதாக மீனவர் அமைப்புகள் எச்சரித்துள்ளன.

(த-14)

# மக்களின் காணிகளில் அடாத்தாகப் படைகள்

## தீவுப் பகுதி மக்கள் கொதிப்பு

யாழ்ப்பாணம்,மே 18

எழுவைதீவு, அனலைதீவு பகுதிகளில் தனியார் காணி களில் படையினர் அடாத்தாக நிரந்தர இராணுவ முகாம் களை அமைத்து வருகின்றனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர் பிரிவில் மெலிஞ்சிமுனையில் 7.39 ஏக்கர் காணி இராணுவ முகாம் அமைப்பதற் காக சுவீகரிக்கும் அறிவித் தல்கள் ஒட்டப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக எந்தவித சுவீகரிப்பு அறிவித்தல் களும் விடுவிக்கப்படாமல் தனியார் காணிகளில் நிரந்தர இராணுவ முகாம் அமைக்கும் நடவடிக்கை யைக் கடற்படையினர் முன்னெடுத்துள்ளனர்.

எழுவைதீவு 4 ஆம் வட்டாரத்தில் 12 பரப்புக் காணியில் நிரந்தர முகாம் அமைக்கும் நடவடிக்கையில் கடந்த திங்கட்கிழமை முதல் கடற்படையினர் ஈடுபட்டு வருவ தாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேபோன்று அனலை தீவு மேற்கிலும் தனியார் காணியொன்றில் கடற்படை யினர் நிரந்தர இராணுவ முகாம் அமைப்பதற்கு நட வடிக்கை எடுத்து வருகின்றனர்.

(த-5)

# குமுழமுனையில் முதலைக்கு இரையான குடும்பஸ்தர்

முல்லைத்தீவு, மே 18

முல்லைத்தீவு, குமுழமுனை பேராறில் மீன்பிடிக்கச் சென் றவரை முதலை இழுத்துச் சென்றுவிட்டது.

வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு மீன்பிடிக்கச் சென்ற ஆறுமுகத்தான் குமுழமுனை யைச் சேர்ந்த சிவலிங்கம் ஞானசீலன் (28 வயது) என்ற இரு பிள்ளைகளின் தந்தை யையே முதலை இழுத்துச் சென் றுள்ளது.

பலத்த தேடுதல் நடவடிக்கைக ளின் பின்னர் பேராற்றில் இருந்து ஞானசீலனின் சடலம் வெள்ளிக்கிழமை 2 மணிக்கு மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ-ழி)

# சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வே வேண்டும்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

முள்ளிவாய்க்காலில் ஆகுதி யான உறவுகளுக்குத் தீப மேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய வாசலில் நேற்று வெள்ளிக்கிழமை நடை பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- அரசியல் ரீதியாகப் போராடு வதாக இருந்தால் மாணவர்களால் முடியும். மாணவர் சக்தி என் றைக்குமே மிகவும் பலமான தாகத்தான் இருந்துள்ளது.

நாங்கள் சுதந்திரமாகச் சிந் திப்பதற்கும் சுதந்திரம் வேண் டும். தமிழ் மக்களுக்கு சுதந் திரமான சம உரிமையுடன் கூடிய வாழ்க்கை இன்னும் இல்லை. அது எங்களுக்கு வேண்டும். சமாதானமுறையில் தான் நாம் அதனை அடைய வேண்டும்.

10 வருடங்களாக சம்பந்தப் பட்ட சர்வகட்சி மாநாடு 2009 உடன் முடிந்துவிட்டது. அதனால் எமக்கு நன்மை எதுவும் ஏற் படவில்லை.

இங்குள்ள பட்டதாரி பயிலுநர் களுக்கு நிரந்தர நியமனம் என்று கூறி கொழும்புக்கு அழைத்துச் சென்றனர். ஆனால் என்ன நடந்தது? மக் களை ஏமாற்றுகின்றார்கள்.

உங்கள் உறவுகளை சரியான முறையில் வகைப்படுத்த வேண் டும். அழுத்தம் கொடுத்து சரி யான தீர்வைப் பெறவேண்டும். இறுதிப்போரில் குடும்பத்தில் 5 பேரை இழந்தவர்களும் இருக் கின்றனர். அவ்வாறிருக்க நாம் ஏன் ஒன்றிணைந்து எமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத் தக் கூடாது. வெற்றிவிழா கொண்டாடுபவர்கள் கொண்டா டட்டும். நாம் துக்கதினம் கொண் டாடித்தானாக வேண்டும் - என்றார்.

(த-4)

# 3 பாலகிகளை கிணற்றில் வீசிக் கொன்றார் தாய்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாயார் மீட்கப்பட்டு தற்போது வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த அவலச் சம்பவத்தில் வி.லதுர்சிகா (வயது -6), வி.சன்சிகா (வயது -2), வி.சுதர்சிகா (வயது - 1) ஆகிய 3 பெண் குழந்தை களே பரிதாபகரமாக உயிரிழந்தன.

உயிரிழந்த 3 பெண்குழந்தைகளுக்கும் மூத்தவர்களான இருவர் பாடசாலை சென்று விட்டனர். அதன் பின்னரே தாயார் 3 குழந்தை களையும் கிணற்றில் வீசியுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

அயலவர்கள் இது குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலங்களை மீட்டு வவு னியா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

குறித்த பெண் கணவனை விட்டுப் பிரிந்து வாழ்கிறார் என்றும் மன நலம் பாதிக்கப்பட்டவர் என்றும் விசாரணைகளில் தெரிய வந்துள் ளதாகக் கூறப்படுகிறது.

(த-4-402-422)

# வவுனியாவில் 'ட்ரக்' விபத்தில் சிப்பாய் சாவு

வவுனியா,மே 18

வேகக் கட்டுப்பாட்டை இழந்த இராணுவத்தின் 'ட்ரக்' தடம் புரண்டு விபத்துக்குள்ளான தில் அதில் பயணித்த ஓர் இரா ணுவச் சிப்பாய் உயிரிழந்தது டன், 18 பேர் படுகாயமடைந் துள்ளனர்.

இந்தச் சம்பவம் வவுனியா செட்டிக்குளம் ரயில் நிலையத் துக்கு அருகில் உள்ள வீதியில் நேற்றுக் காலை இடம்பெற் றுள்ளது.

குறித்த 'ட்ரக்' வேகக் கட்டுப் பாட்டை இழந்து தடம் புரண்டு நீண்டதூரம் உருண்டது. இத னால் அதில் பயணித்த படை யினரில் ஒருவர் உயிரிழந்தார். 18 பேர் காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பாக செட்டிக் குளம் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்தில் காயமடைந்த படை யினர் வவுனியா பொது வைத் தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

(த-14-402)

# தமிழர் தாயகத்தில் இன்று துயர் பகிர்வு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா நகரசபை மண்டபத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில், மாட்டீன் வீதியி லுள்ள தமிழரசுக் கட்சி அலுவல கத்தில் மாலை 5 மணிக்கு சுடரேற் றும் நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையும் இடம்பெறவுள்ளது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி உருத்திரபுரம் புனித பற்றிமா ஆலயத்தில் உள்ள இறுதிப் போரில் உயிரிழந்தவர்களின் நினை விடத்திலும், கிளிநொச்சியில் உள்ள இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங் களிலும் விசேட பூசை வழிபாடுக ளும் பிரார்த்தனைகளும் இடம்பெற வுள்ளன.

அத்துடன் வீடுகளிலும் உயிரிழந்த உறவுகளுக்கு வணக்கம் செலுத் தும் நிகழ்வுகளும் இடம்பெறும்.

**கிழக்கு மாகாணம்**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் மட்டக்களப்பு மாவட்டத்திலும் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ் வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. தமிழர் தாயகத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் முள்ளிவாய்க் கால் நினைவேந்தல் நிகழ்வுகள் பேரெழுச் சியுடன் உணர்வு பூர்வ மாக அனுஷ்டிக்கப்பட வுள்ளன.

நினைவேந்தல் நிகழ் வுகள் இன்று புலம் பெயர் நாடுகளிலும் தமிழ் மக்களால் பேரெ ழுச்சியுடன் அனுஷ்டிக் கப்படவுள்ளன. கண்ட னப் பேரணிகள், நினை வுப் பேருரைகள் என் பனவும் இடம்பெறவுள் ளன.

பிரான்ஸ் தமிழர் நடுவ கத்தால் மாலை 4 மணி முதல் 7 மணிவரை துரோகத்திரோ மெக்ரோ தரிப்பிடத் தில் முள்ளிவாய்க்கால் நினைவேந் தல் நிகழ்வுகள் இன்று அனுஷ்டிக் கப்படவுள்ளன.

பிரித்தானிய தமிழர் பேரவையி னால் இன்று பி.ப. 1 மணிக்கு பேரணி நடத்தப்படவுள்ளது. இந் தப் பேரணியில் மக்களைக் கறுப்பு உடை அணிந்து பங்கெடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள் ளது. றைட் பார்க்கில் ஆரம்பமாகும் பேரணி வெஸ்ற்மினிஸ்ரரில் முடிவ டையும்.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் இன்று பி.ப. 2 மணிக்கு எக்ரேமில் றெயாரில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

கனடியத் தமிழர் தேசிய அவையி னால் மாலை 5 மணிக்கும் டென் மார்க் தமிழர் அமைப்புக்களின் ஒன்றியத்தினால் காலை 10 மணிக்கும் நினைவேந்தல் நிகழ்வு கள் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

ஜேர்மன் தமிழ் இளையோர் அமைப்பு, ஈழத் தமிழர் மக்கள் அவையினால் பி.ப. 2 மணிக்கு பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள் ளது. செல்போர்டில் ஆரம்பமாகும் பேரணி லால்ட்ராகில் முடிவடை யவுள்ளது.

பெல்ஜியம் தமிழ் இளையோர் அமைப்பு, தமிழர் பண்பாட்டுக் கழகம் ஆகியவற்றால் மதியம் 12 மணிக்கும், நெதர்லாந்து தமிழர் பேரவையால் பி.ப. 1மணிக்கும், சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினால் நண் பகலும் நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ் டிக்கப்படவுள்ளன.

நோர்வேயில் தமிழர் பேரவையால் நோர்வே நாடாளுமன்றத்தின் முன்பாக கவனவீர்ப்பு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

நாடு கடந்த தமிழீழ அரசினால், அமெரிக் காவில் தமிழீழ சுதந்திர சாசனத்துக்காக முரசறைவு நிகழ்வுகள் இன்று இடம்பெற வுள்ளன.

(உ-5)


NALIN IT

195/2,Palaly road, Parameswara Junction,Palaly Road,Jaffna.

MEGA OFFER

- HP 1000 - 1311 TU — Dual core - 2.4GHZ, 2GB Ram, 500GB HDD, 14.0'LED,Dos. — RS. 54,500
- HP Pavilion g6 - 2230 TU — i3-3110 - 2.4GHZ, 4GB Ram, 500GB HDD, 15.6'LED,Dos. — RS. 65,500
- HP 2000 - 2302 TU — i5-3230 - 2.6GHZ, 2GB Ram, 500GB HDD, 15.6'LED,Dos. — RS. 75,500
- HP Probook 4540 S — i3-3110 , 4GB Ram, 500GB HDD, 15.6'LED,Win-8 Original — RS. 81,500
- DELL Insprion 3521 — i3 - 3227 - 4GB Ram, 500GB HDD, 15.6'LED,Win-8 Original — RS. 72,000
- DELL Insprion BTX 5520 — i7 - 3632QM - 4GB Ram, 750GB HDD, 15.6'LED, Dos — RS. 105,000

HeadPhone,Mouse,Bag FREE

Special Price For Dongle, Pendrive,External HDD.

AUTHORIZED BUSINESS PARTNER

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT).LTD

TP:0212221121/1166|0777667975 facebook.com/nalin it

அரிய வாய்ப்பு

கனடாவில் படிக்க, உழைக்க 2 மாதங்களில் செல்லலாம்

A/L, O/L அவசியமில்லை

உணவு, தங்குமிடம் இலவசம்.

6 பேருக்கே அரிய வாய்ப்பு

சட்ட ஆலோசனைகளுக்கு:

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 221 9016, 021 568 9090

36603)(10,6)

கணினி மலிவு விற்பனை

Tablet Pc - 20, 250/= (1Y)

Branded Pc Hp- 24, 750/= தொடக்கம்(1Y)

Assemble Pc Intel - 39, 500/= தொடக்கம் (3Y)

Laptop i3 - 60, 250/= தொடக்கம்(1Y)

Free 4GB Pen/ Skypecam/ Headphone

(15ஆவது வருட சேவையில்)

(சி/9461) (23,6,16)

ST.Antony's

#187, K.K.S. Road, Jaffna Town.

021 222 4865 - 0750698608

மானிப்பாயில் வீடு வளவு விற்பனைக்கு

மானிப்பாயில் மருதடி விநாயகர் ஆல யச் சூழலில் காகில்ஸ் பூட் சிற்றிக்கு நூறு யார் தூரத்தில் மானிப்பாய் இணுவில் வீதியின் விசகடி வைத்தியர் வீதியில் மூன்று பரப்புக் காணியுடன் ஐந்து அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:

071 2124107, 075 6578036 (35586) (10,6)

IELTS A1 B1 B2

Quick Preparation Available Call: 0777302882

Visit: http://edu.kugroup.info/ielts

K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

கணக்காளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல இலத் திரனியல் பொருள்கள் விற்பனை நிலை யத்துக்கு கணினி அறிவுடைய கணக் காளர் (ஆண்கள் மட்டும்) தேவை. கவர்ச்சி கரமான சம்பளம் வழங்கப்படும்.

முகாமையாளர்,

ரீடியா எலக்ரோனிக்

இல. 1-1,H, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

T.P:021 222 4566 (சி/9440) (10,6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# முள்ளிவாய்க்கால் சொல்லித் தந்த பாடங்கள்

■ இளையவன்னியன்

சுதந்திரம் வேண்டி விடுதலைக்காக போராடிய ஒரு தேசத்தின் நழுல அரசின் முடிவு எண்ணப்பட்ட நாள்கள் அவை. இப்படியான நாள்கள் வரும் என்று ஈழத்தமிழர்கள் கனவில்கூட நினைத் திருக்கவில்லை. ஆனால் காலம் அந்த சாவு இருளின் பள்ளத்தாக்கிற்கு அவர்களை கொண்டு சென்ற துடன் கொன்றும் சென்றது.

கடல், தரை, வான் என முப்படைகளையும் சட்டநிர்வாக, நீதி நிதி பரிபாலனம் என்ற கூட்டமைப் புக்களையும் கொண்டு முடிசூடா அரசாக விளங்கிய தமிழரின் அரசை, உரிமைப்போராட்டத்தை- உலக வல்லாதிக்கங்களான அமெரிக்கா, சீனா, இந்தியா உட்பட இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளின் துணை கொண்டு அரச பயங்கரவாதத்தின் மூலம் தமிழ் மக்களை வெற்றி கொண்டது வெறிகொண்ட இலங்கை அரசு. இது நான்கு வருடங்களுக்கு முன்பு இதே காலத்தில் நடந்தேறியது.

அப்பாவித் தமிழ் மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடை யின்றி, இருக்க இடமின்றி சிறிது இளைப்பாறக்கூட முடியாமல் துரத்தி துரத்திக் கொல்லப்பட்டனர். விமானக் குண்டுவீச்சு, பல்குழல் பீரங்கிகள், கொத்தணிக் குண்டுகள், இரசாயனக் குண்டுகளால் மக்களின் உடலங்கங்கள் சிதறிப் போயின.

பலர் பிணத்தோடு தூங்கி, பிணத்தோடு பிணமாக வீழ்ந்தனர். மேலும் பலர் நடை பிணங்களாகினர். நிலமெல்லாம் இரத்தமாக இருந்தது. ஐ.நா. நாற்பதினாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அறிக்கை விட்டது. ஆனால் இறுதிப் போருக்கு முன்பிருந்த சனத்தொகையோடு அளவிடும் போது மாண்டு போனவர்களின் தொகை இதுவரை கணக் கிடப்படாத ஒன்றாகவே இருந்து வருகின்றது.

உடலுறுப்புக்களை இழந்துள்ளோர் பல்லாயிரக்கணக்கிலிருக்க காணமல் போனோர் பட்டியல் மற்றொருபுறம் நீள்கிறது. இரசாயனக் குண்டுகளின் தாக் கத்தால் புற்றுநோய் உட்பட பலநோய்களுக்கு எமது சமூகம் உள்ளாகி இருக்கிறது.

மே 18 2009 நண்பகல் நேரம் வடக்கு வானம் இருண்டது. சூரியன் சில நிமிடங்கள் தன்னை மறைத்துக் கொண்டான். கருமேகங்கள் ஒன்றாகக் கூடின. கண்கொண்டு பார்க்க முடியாத மின்னல் வெட்டுக்கள். காது கொண்டு கேட்கமுடியாத தொடர் இடி. ஆனால் ஒரு துளி மழை கூட இல்லை. ஒரு தேசத்தின் முடிவை, அறத்துக்கு புறம்பான போரை அந்த அசரீரி காட்டி நின்றது.

தமிழினத்தின் ஆயுதப் போராட்டம் முடிந்துவிட்டது என்பதை இதைக் கொண்டே அநேக மக்கள் உறுதிப்படுத்திக் கொண்டனர். இது கதையோ அல்லது கற்பனையோ அல்ல எம் இன அழிப்பின் உண்மை.

இந்த நூற்றாண்டின் மனித இனப்படுகொலையின் சின்னம், அடையாளம். அதுவே முள்ளி வாய்க்கால். எமக்கும், போராடும் மனித குலத்திற்கும் பல பாடங்களைக் கற்றுத் தந்திருக்கின்றது. அந்தப் பாடங்கள் ஈழத் தமிழர்களால் முழுமையாகக் கற்கப்பட்டு விட்டதா?, உணரப்பட்டுவிட்டதா?, விளங்கிக் கொள்ளப்பட்டு விட்டதா?



> ❝ இந்த நூற்றாண்டின் மனித இனப் படுகொலையின் சின்னம், அடையாளம். அதுவே முள்ளிவாய்க்கால். எமக்கும், போராடும் மனித குலத்திற்கும் பல பாடங்களைக் கற்றுத் தந்திருக்கின்றது அது. அந்தப் பாடங்கள் ஈழத் தமிழர்களால் முழுமையாகக் கற்கப்பட்டு விட்டதா?, உணரப்பட்டு விட்டதா?, விளங்கிக் கொள்ளப்பட்டு விட்டதா?

எம்முள் இருக்கும் ஒற்றுமையின்மையே எமது முதல் எதிரியும், துரோகியும் ஆகும். வேறு எந்த இன விடுதலைப் போராட்டத்திலாவது இந்த அளவுக்கு காட்டிக் கொடுப் புகளும், துரோகத்தனங்களும் இருந்திருக்கிறதா என்று தெரியவில்லை.

இவ்வளவு இழப்புக்களுக்கு பின்னும் அதன் தாற்பரியத்தை உணராதவர்களாகவே எமது சமூகம் இன்றும் இருக்கின்றது. சுயாட் சிக்காக, உரிமைக்காக, அடக்கு முறைக்கு எதிராகப் போராடும் ஒரு சமூகம் சாதாரணமாக அரசியல் வாதிகள் செய்யும் அரசியலை செய்ய முடியாது. அப்படிச் செய்யின் அது விடுதலைக்கு உலை வைப்பதாய் அமையும். இந்த விடயத்தில் தமிழ் அரசியல்வாதிகள் இதுவரை ஒற்றுமைப்பட்டு ஒரு திசையில் செல்ல முடியாதவர்களாய் இருக்கின்றார்கள். பொது மேடையில் மண்ணுக்காக மாண்டவர்களுக்கும், மக்களுக்கும் அக வணக்கம் செலுத்தும் இவர்கள் எதற்காக அவர்கள் இறந்தார்கள் என்பதை இன்னமும் சரிவரப் புரிந்தவர்களைப் போல் நடந்துகொள்ளத் தவறியிருக்கிறார்கள். எப்போது ஒற்றுமைப்படுகிறோமோ அப்போதுதான் எமக்கு விடுதலை. அது எப்போது நடக்கும்?

> ❝ இவ்வளவு இழப்புக்களுக்கு பின் னும் அதன் தாற்பரியத்தை உணராத வர்களாகவே எமது சமூகம் இன்றும் இருக்கின்றது. சுயாட் சிக்காக, உரி மைக்காக, அடக்கு முறைக்கு எதிராகப் போராடும் ஒரு சமூகம் சாதாரணமாக அரசியல் வாதிகள் செய்யும் அரசியலை செய்ய முடியாது.

அரசியல் இராஜ தந்திரங்களைப் பொறுத்தவரையில் நிரந்தரப் பகைவனும் இல்லை. நண்பனும் இல்லை. ஆனால் நிலைத்திருப்புக்கு தங்கி வாழுதல் அவசியம் என்னும் நடை முறைக் கோட்பாட்டுக்கமைய நிரந்தர நண்பர்களை கட்டாயம் உருவாக்க வேண்டியுள்ளது. ஓர் அரசாக காட்சி யளித்த நாம் எமக்கு ஒரு இக்கட்டான சுழல் வரும்போது எமக்காக உண் மையாக இருக்கக் கூடிய ஒரு நட்பு நாட்டை நாம் உருவாக்கி கொள்ளத் தவறிவிட்டோம். தமிழர் முள்ளி வாய்க் காலுக்காக இட்ட தவறுகளில் இதுவும் ஒன்று.

தேசிய இனமாக இருக்கும் எமக்கு இன்று சர்வதேச அரசியல் களம் திறக்கப்பட்டுள்ளது. எம்மை ஒரு தரப்பாக சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது. இராஜதந்திர அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் சாணக் கிய அடிப்படையில் தமக்கான சிறந்த நண்பர்களை தமிழர் தரப்பு உருவாக் கிக் கொள்ளவேண்டும்.

கருணாவினுடைய பிளவு தொடங்கி ஆயுதக் கப்பல்கள் மீதான தாக்குதல் கள், சர்வதேச ஆயுதக் கொள்வனவு, வலைப்பின்னல் முடக்கம், இலங்கைக்கான ஆயுததளபாட வசதியளித்தல், செய்மதி ரீதியான உதவிகள், பயங்க ரவாதிகளாகப் பிரகடனம் செய்தல் என பலவற்றை தமிழருக்கெதிராக செய்த அமெரிக்கா இன்று தமிழர் நலன் பேசுகிறது.

அமெரிக்காவுக்கு தமிழர் மீது அன்போ, பாசமோ, அக்கறையோ கிடையாது. மாறிவரும் பூகோளப் புவிசார் அரசியல் அமெரிக்காவுக்கு அந்த நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கையில் அமெரிக்க சார்பு அரசு அமையும் போது இந்த நிர்ப்பந்த அரசியல் தேவையற்றதாகப் போய் விடும் என்பது நிதர்சனம். ஆக இவற்றுள் எமது அரசியல் அடிபட்டுப் போகாதபடி எமக்கானதை நாம் பெறுவதே முதிர்ச்சி அடைந்த அரசியல் ஞானத்தினுடைய பிரயோகமாக இருக்கும்.

முள்ளிவாய்க்கால் முடிவல்ல ஆரம்பம் என்று சொல்லும் நாம், அதற்கேற்றபடி அரசியலை நகர்த்தக்கூடியவர்களாக இருக்கவேண்டும். எமக்குள் ஒற்றுமைப்பட்டு முள்ளி வாய்க்கால் சொல்லித்தந்தவற்றை சரிவர உணர்ந்து செயற்படாது போகுமிடத்து- அதாவது பலவீனங்களை பலப்படுத்துவதோடு கட்டமைக்கப்பட்ட செயற்றிட்டத்தின் ஊடாகப் பயணிக்காவிடின்- எமக்கான இலக்கு நீண்ட தூரத்திலேயே இருக்கும். அதைவிடுத்து எந்த ஏக்கத்துடன் தமிழர்கள் மாண்டார்களோ அதை நிறைவேற்றுவதே தமிழ் மக்கள் அவர்களுக்குச் செய்யும் ஆத்மார்த்த அஞ்சலியாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று வலி
















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் 4





வலிகளை மறந்துவிடலாம்.
வரலாற்றை மறந்துவிடலாகாது.







கடந்தவைகள்
வெறுமனே
மறந்துவிடக்கூடிய
மனித உரிமை மீறல்கள்
மட்டும் அல்ல.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன் வருக முழு வழியும்

வாழைகள் முறிக்கின்ற கோயில் இடிக்கின்ற
பொல்லாக் காற்றை விட வேகூரமாய்
வீசுகின்றது உன் நினைவுகள்!
வீழ்ந்த பின்னாலும் அழகே தரும்,
'பனி', 'மழை', 'கதிர்' மற்றும்
'நீயும்' வானத்தைப் போல!!

அடக்கு வன்மத்துக்குள்ளாகவும்-நீ
வரமளித்த நீள நினைவுகளில் அழுந்தி அழுவதில்
அத்தனை சுகம்!
-கண்ணீரின் ஈரம் காற்றறியாமல், சுவடாமல்
-குமுறும் குரல்வளையை சுவரும்
-கொப்பளிக்கும் கோபம் கூரைக்குப் பரவாமல்,

ஓரமாய் எப்பொழுதும் இருக்கும் உன்னை
நெஞ்சு முழுவதும் நிரவியெடுத்து,
கைகள் பிணைத்து, கறுப்பு வாகனமொன்றில்
தூரத்துப் புள்ளியாய் நீ தொலைந்து போன
நாளில் நனைந்து அழுவதில் அலாதி சுகம்!!


அவ்வளவு சுலபத்தில் அழிந்திடாத சுவடுகளை,
எவ்வளவு துயரிலும் இழந்திடாத இருப்புக்களை,
இவ்வளவு தானென்று எழுதிடாத நம்பிக்கைகளை,
தோளமுந்தச் சுமக்கும் பாதங்களை
இன்னமும் தாங்குவதாய்
இறுமாந்து கொள்கின்றது என் முற்றம்!!
எம் கதவுகளுக்கு பூட்டில்லாத நாளில்,
காவலுக்கு விழித்த உன்னை, 'கள்வன்' என்றழைக்கச் சொன்னார்கள்?

நீயோ-யாருமறியாமல், உருகிப் பின் இறுகி
என் விரல்களில் ஒளிந்து கொண்டாய், திறப்பாக!
சாவின் வர்ணத்தை விழித்திரையில் பூசிக்கொண்டு,
காலத்தின் கட்டளைகளை செவிச்சவ்வில் சொருகிக் கொண்டு,
ஒவ்வொரு விரலாலும் ஊருக்கு உழைத்தவுன்னை,
''சாத்தான்'' என்று வெறுக்கச் சொன்னார்கள்?

நீயோ- உலகத்தை 'உச்சி'விட்டு
உறவாகிப் பின் உயிராகி, உள்ளத்துறை கோயிலில்
கடவுளுக்கும் மேல் ஆசனமொன்றில்,
கால் போட்டமர்ந்து கொண்டாய்.

எப்போதாவது எதிரிகளுடனும்,
எப்போதும் நண்பர்களுடனும்,
போராட வேண்டியிருக்கும் பொல்லாப் பொழுதுகளையல்லவா,
சபித்துப் போனாய் எனக்கு?
அழுது தீர்க்கவும் அவகாசம் கொடாத-அத்துணை
அலுவல்களை 'அடகில்விட்டு' ஏனடா,

அடங்கிப் போனாய்?



விழுதுகளுக்கு 'வேரை'
விளக்கியுரைக்க வேண்டிய
விஷக்காய்ச்சல் பரவும் ஊரில்,
ஒற்றை அருமருந்தையும்
வெட்டிப் புதைத்த,
வீணரில்லையா நாங்கள்??
மரம் நட்டுப், 'பழம்' காண
எண்ணாத மாமணியே!
ஆன்றுயர் இனக் கோபுரத்தின்
அடிக்கல்லாய்
அமிழ்ந்த வேரே!
உயிரை உரைத்து, அரைத்து,
உரசி
ஓயாக் கனவுத் திரிக்கு
ஒளியேற்றிய உண்மையே!
பட்டதெல்லாம் 'பழுதின்றி'

வட்டியோடு மீள் திருப்பும் நாள் டேி,
விண்ணப்பம் இஃதொன்று....
''போகுமெம் பாதையினி பொல்லாக் கும்மிருட்டு!
பொழுதொன்றும் மயங்காமல், முன்வருக முழுவழியும்!!''

[illegible]

# நீ(தி)தீ

என்ன
குறை வைத்தோம்
உன்னில்,
ஏது குறை சொன்னோம்.
பல பண்பாட்டுத் திருவிழாக்களை
ஆடிக்களித்திருந்த
ஊர்களில் இருந்தல்லவா
காவடிகள் தூக்கி வந்தோம்.
தீச்சட்டி ஏந்தி வந்தோம்.
பால்குடம் எடுத்து வந்தோம்.

எப்படித்தகும்?
கிரக பலன்கள் அவர்க்கும்
கிரக பாவங்கள் நமக்கும்.
தோஷங்கள் நமக்கும்
பரிகாரங்கள் அவர்க்கும்.
நீதி கேட்டு
மதுரை மாநகரை எரித்த
சோழ நாட்டாளே,
எதை எரித்து நீதி கேட்பாள்
ஈழ நாட்டாள்?
உனைப்போல முடியாதம்மா.
எரிப்பதற்கு உனக்காவது
மதுரை மாநகர் இருந்தது
நாடே இல்லா ஏதிழையாள்
என் ஈழ நாட்டாள்.

யுத்தம் சுடுகாடு ஆக்கிய
ஊர்களுக்குள் நின்று கொண்டு
நீதி கேட்கிறாள்.
யுத்தம் சப்பித்துப்பிய
மனிதர்களுக்குள்
இருந்து கொண்டு
நீதி கேட்கிறாள்.
மரண ஓலமும் பிணவாடையும்
சுமந்து வரும் காற்றை
சுவாசித்தவாறு நீதி கேட்கிறாள்.
அம்மா! தாயே! என
வாயெடுத்துப்பாடிய
அதே வாய்கள்தானே
அன்றும்,
ஐயோ! அம்மா! என
ஓலமிட்டன.
என் தாயே! ஏன் தாயே!
நீ இரங்கி வரவில்லையே.
ஆயிரம் கண்ணுடையாளே
உந்தன் ஒற்றைக்கண் கூட
திறக்கவில்லையே.

பனிச்சங்காயில் படை
விரட்டியவளே!
கந்தகவெடி அதிர்வில்
எங்கள் தாய்க்குலத்துக்கு
மடி கிழிந்து
குறைப்பபிரசவம் நிகழ்ந்தபோது,
உந்தன் பனிச்சங்காய்களில்
ஒன்றுதானும் அவர்க்கு
சிராய்ப்புக்காயமேனும்
கொடுக்கவில்லையே.
களப்புக்குள் எம் ஆடை களைந்து
களங்கப்படுத்தி
கலவரப்படுத்தியபோது
ஒட்டுத்துணி கூடத்தந்து
நம் மானம் காக்கவில்லையே.

உப்பு நீரில் விளக்கெரியும்
அதிசயம் காட்டியவளே!
சுற்றி வளைத்து
வேலி கட்டி அடிக்கும்போது,
உப்புச்சப்பபில்லாமல்
இருந்து விட்டாயே.

''ஓயாத அலைகள்''
தொடர் வெற்றிக்கான ஆசி
உன்னிடமிருந்தல்லவா
பெறப்பட்டது.
நான்கு வானோடிகளின் பறப்பில்
நாற்பது இலட்சம் தமிழனும்
உச்சி கிறங்கிக் கிடைக்கையில்,
தலைக்கு மேலே எழுந்தவர்
தலைக்கணமே இல்லாது
உன்னிடம் பணிந்து
விடைபெற்றுத்தானே போயினர்.
உந்தன் கோபுர கலசத்துக்கு
புத்தூவும் பறப்புதானே
வான்படை கண்ட
முதல் தமிழனின் முதல் பறப்பு!

ஏன் தாயே?
எமைக்கைவிட்டு விட்டாய்.
ஏன் தாயே?
எமைக்கைதுசெய்ய விட்டாய்.

உண்மைக்குள் வாழ்தல்
எத்தினை அர்த்தம்.
வாழ்ந்துதான் பார்த்தல்
எத்தினை அழகு.
எதிரும் புதிருமான
மௌனத்தை ஏன் தாயே
எங்கும் பரப்பிக் கிடக்கிறாய்.

சென்.பீட்டர் தொடங்கி
செஞ்சோலை, மடு,
ஐயன்கண்குளம்,
முள்ளிவாய்க்கால் என நீளும்
எங்கள்
வண்ணத்துப்பூச்சிகளின்
இறக்கைகள் ஒடிக்கப்பட்டதும்,
அவற்றின்
பல வண்ணக்கனவுகளுக்கு
புலிச்சாயம் பூசப்பட்டதும்
நெஞ்சுக்கு நீதியா?

தேரோடும் வீதியில்
கொலு இருந்தவர்க்கே
கொள்ளி வைத்தார்
புத்தரின் பெயரால்,
போர்தான் வாழ்வென்று
வீந்தெம் உறவுகளைத்தின்று
ஏப்பமிட்டவர்கள்.
நெஞ்சில் ஆயிரம் தீயை வைத்தார்.
நடுநிசி நித்திரையை
மாற்றி வைத்தார்.
கண் கலங்க கதி கலங்க
ஊரெல்லாம் மரண ஓலம்
கேட்க வைத்தார்.
இந்தக்கருமமெல்லாம்
யார் தலைக்கு?
எல்லாம் எல்லாமே

வரலாறு மாறும்!
வண்டியும் ஓடத்தில்
ஏறும் என்று எதுவரை
சொல்லிக்கொண்டிருப்பேன்.
தருமத்தின் வாழ்வுதனை
சூது கவ்வும் தருமம்
மறுபடியும் வெல்லும் என்று
எதுவரை நம்பிக்கொண்டிருப்பேன்.
இன்று போய் நாளைவரும்.
நெஞ்சறைக்கூட்டுக்குள்
அப்பழுக்கில்லாமல்
அப்படியே அப்பிப்போய்க்கிடக்கிற
சோகங்களோடு,
பழுதில்லா உணர்வுகளோடு,
நாளை நானும் வருவேன்
நீதி கேட்டு நீ தீயாகச்சுடும் வரை

அ.ஈழம் சேகுவேரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org